பக்கங்கள் 32

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 365 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 10, புதன் 26.11.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*


## காலநிலை

பெரும்பாலான கடற்கரை பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியம் நிலவுகின்றது என்றும் காற்று மணிக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் வீசலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதன் போது, இடி, மின்னல்களால் ஏற்படும் சேதங்களை குறைக்க போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மஹிந்த மீது போர்க் குற்ற விசாரணைக்கு இடமளியோம்

### அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார் ஐ.தே.கவின் ஹர்ச டி சில்வா எம்.பி.

யாழ்ப்பாணம், நவ. 26
போர்க் குற்றச்சாட்டுக்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தில், இலங்கையின் எந்தவொரு தலைவர்களையும், ஏன் ஜனாதிபதி மஹிந்தவைக் கூட நிறுத்துவதற்கு நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்ட படைகளைப் பாதுகாக்க வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியின் பொறுப்பு - இவ்வாறு தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா. நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"தீவிரவாதத்தில் இருந்து நாட்டை விடுவித்த பாதுகாப்புப் படைகளை பாதுகாப்பது ஐ.தே.கவின் முழுமை

❖22 ஆம் பக்கம் பார்க்க

## தலைவருக்கு இன்று 60



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் 60 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு, திருச்சியில் வைக்கப்பட்டிருந்த வாழ்த்துப் பதாகை.

யாழ்ப்பாணம், நவ. 26
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இன்று 60 வயது. இதனையொட்டி தமிழகத்தில் இன்று அதிகாலை கேக்

❖19ஆம் பக்கம் பார்க்க

# எம்மிடமும் உள்ளன கோப்புகள்

## மஹிந்தவின் மிரட்டலுக்கு சந்திரிகா பதிலடி

யாழ்ப்பாணம், நவம்பர் 26
ராஜபக்ஷாக்களின் கோப்புக்களும் இருக்கின்றன. நாங்களும் அவற்றை எடுப்போம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க.
பொது எதிரணிக்குத் தாவியவர்களின் கோப்புகள் கைக்குள் இருக்கின்றது என்று கூறியிருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவருக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே சந்திரிகா இவ்வாறு கூறியுள்ளார்.
பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவு

❖22 ஆம் பக்கம் பார்க்க



## பல்கலையை சூழவும் இராணுவ பிரசன்னம்

### கடுமையாகச் சாடுகின்றது மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், நவ.26
கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சூழ இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மாணவர்களை அச்சத்துக்குள்ளாக்கும் இத்தகைய செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளது.
போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் எமது மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடர்ந்தனர். போர் முடிவுற்று இப்போது சமாதானம் நிலவுகின்றது என்று கூறப்படுகின்றது. ஆனால் இங்குள்ள சூழலைப் பார்க்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## தாவுவதற்குத் தயாராக இருக்கின்றனர் 20 பேர்

யாழ்ப்பாணம், நவ. 26
ஆளுங் கட்சியிலிருந்து பொது எதிரணிக்கு தாவுவதற்கு இன்னமும் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் காத்துக் கொண்டிருக்கின்றனர் என்று கூறியுள்ளார் நேற்றுக் கட்சி தாவிய நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பெருமாள் இராஜதுரை.

❖22 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.க. அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு



யாழ்ப்பாணம், நவ. 26
ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹலீமின் காரியாலயத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

■ விரிவான தகவல் 21ஆம் பக்கத்தில்

## கூட்டமைப்பு உறுப்பினர் தாவினார் அரசுப் பக்கம்

யாழ்ப்பாணம், நவ.26
ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதில் இருந்து பிரதான கட்சிகளிடையே தாவல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் நேற்று அரசுப் பக்கம் தாவியுள்ளார்.
திருகோணமலை சேருவில பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான கே.சிவலோகேஸ்வரன் என்பவரே கட்சி தாவி

❖19 ஆம் பக்கம் பார்க்க

## கைதானவர்கள் 4 ஆம் மாடிக்கு

### முன்னாள் போராளி கொலை வழக்கில்

யாழ்ப்பாணம், நவ. 26
முன்னாள் போராளியான நகுலேஸ்வரன் மன்னாரில் வைத்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட கிராம அலுவலர் உள்ளிட்ட 6 பேரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கொழும்பு 4 ஆம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.
வவுனியாவில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்த அவர்கள் பின்னர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கிராம அலுவலர். மற்றொருவர் கொலையைச் செய்தவர் என்று சந்தேகிக்கப்படுபவர். ஏனைய நால்வரும் கொலைக்கு உதவியவர்கள் என்ற ரீதியில்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## ஆட்சேபனைகளை அணைக்க கோத்தாவுக்கு நீதிமன்று பணிப்பு

### நாவாந்துறையில் பொதுமக்களை தாக்கிய வழக்கில்

யாழ்ப்பாணம், நவ. 26
நாவாந்துறையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் பொதுமக்களை நையப்புடைத்தது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பில் தமது ஆட்சேபனையைத் தாக்கல் செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட எதிராளிகள் 10 பேருக்கும் உயர் நீதிமன்றம் பணித்துள்ளது.
2011 ஓகஸ்ட் மாதம் நாவாந்துறையில், இரவில் பெண்க

❖19 ஆம் பக்கம் பார்க்க




மாணவருக்கு ஓர் நற்செய்தி

நாளை முதல்

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை வினாத் தாள்களும், விடைகள் மற்றும் விடையளிப்பு முறை குறித்த விளக்கங்களும் நாளை முதல் உதயனில் வெளியாகும். மாணவர்களே! உங்கள் பிரதிகளுக்கு அருகில் இருக்கும் உதயன் முகவர்களிடம் உடனடியாகப் பதிவு செய்யுங்கள்.


## 25 ஆண்டுகளின் பின்னர் திரும்பி வந்த அதிசயம்

## 28 வயதில் மாயமாகியவர் வயோதிபர் இல்லத்தில் மீட்பு

### சட்டச் சிக்கலால் உடன் யாழ்ப்பாணம் கூட்டிவர முடியவில்லை

வலி.வடக்கு, நவ.26
இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் வைத்துக் காணாமற்போன சுன்னாகத்தைச் சேர்ந்த கே.வைரவநாதன் உயிருடன் பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை அவரது உறவினர்கள் நேரில் பார்த்து உறுதிப்படுத்தினர். எனினும் அவரை யாழ்ப்பாணம் அழைத்து வருவதில் சட்டச் சிக்கல்கள் நீடிக்கின்றன என்று உறவினர்கள் தெரிவித்தனர்.
சுன்னாகம் மத்தி டாக்டர் சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த கே.வைரவநாதன் (வயது -53) 1991ஆம் ஆண்டு

❖19 ஆம் பக்கம் பார்க்க

"நாகரிகத்தின் வேர் காடுகள் தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்து தான் தலைசிறந்த கருத்துக்கள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது" -இரவீந்திரநாத் தாகூர் வங்கக் கவிஞர்

# வரவேண்டிய நேரத்தில் வரவேண்டியோர் வருவர்

## இப்போது அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்கிறார் மைத்திரிபால சிறிசேன



கொழும்பு, நவ.26

வரவேண்டியவர்கள் வரவேண்டிய நேரத்தில் வருவார்கள். இது தொடர்பில் இப்போது அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்துள்ள பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் இன்னமும் நான் தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். மைத்திரிபால சிறிசேன, ஹொரகொல்லையிலுள்ள பண்டாரநாயக்க சமாதிக்குச் சென்று நேற்று மலரஞ்சலி செலுத்தினார். அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் என்ற ரீதியில் இன்றும் நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர். அதே போன்று நான், இன்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர்.

நான் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தோ அல்லது பொது செயலாளர் பதவியிலிருந்தோ இதுவரை சட்டபூர்வமாக நீக்கப்படவில்லை. சுமார் 47 வருடங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் செயற்பட்ட ஒருவன் நான். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமைத்துவத்தின் கீழும், சந்திரிகா குமாரதுங்கவின் தலைமைத்துவத்தின் கீழும் அதன் பின்னர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழும் நான் செயற்பட்டுள்ளேன். சர்வாதிகாரத்தை உடைப்போம் இதேவேளை- சர்வாதிகாரத்தை உடைப்பதற்கு அரச ஊழியர்கள் டிசெம்பர் 23 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் சரியான முடிவை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். டிசெம்பர் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்புக்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)



தமிழகம் நாகை மாவட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் ஏற்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் 60 ஆவது பிறந்ததினம் கொண்டாடப்பட்டது. அதை முன்னிட்டு மரக் கன்றுகள் நடும் நிகழ்வுகள் நடைபெற்றன. (ந-10)

# உணவுடன் சென்றவரை துரத்தி விரட்டிய நாகம்

## தனங்களப்பில் சம்பவம்

தென்மராட்சி,நவ. 26

நெல்வயலில் களை பிடுங்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு உணவு கொண்டு சென்றவரை நாகபாம்பு துரத்தித் துரத்தித் தாக்க முற்பட்டுள்ளது. அவர் தான் கொண்டு சென்ற உணவுப் பொதிகளை வீசி எறிந்து விட்டு ஓடியபோது கோபமுற்றிருந்த பாம்பு உணவுப் பொதிகளை கொத்திக் கிழித்துள்ளது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனங்களப்பு, கரடிப்பிட்டி மருதடி வயலில் நடந்துள்ளது.

தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ளதை அடுத்து வயல்களில் களை பிடுங்கும் நடவடிக்கைகளை அந்தப் பகுதி விவசாயிகள் முழுவீச்சில் ஆரம்பித்துள்ளனர். அங்குள்ள வயல் ஒன்றின் உரிமையாளர், ஐந்து பேரை வேலைக்கமர்த்தித் தனது வயலில் களை பிடுங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை வயலில் களைபிடுங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு மதிய உணவைக் கொண்டு சென்றுள்ளார் வயல் உரிமையாளர். அப்போது எங்கிருந்தோ வந்த நாகபாம்பு ஒன்று அவருக்காகவே காத்திருந்தது போன்று அவரைத் துரத்தத் தொடங்கியது. பயந்துபோன அவர் திரும்பி ஓடத் தொடங்கினார். ஆனாலும் பாம்பு அவரை விடுவதாக இல்லை. ஒரு கட்டத்தில் கையில் இருந்த உணவுப் பொதிகளை வீசியெறிந்து விட்டு அவர் மரம் ஒன்றில் ஏறி விட்டார். துரத்தி வந்த பாம்பு அவர் வீசியெறிந்த உணவுப் பொதிகளை கொத்திக் கிழித்துத் தனது கோபத்தைத் தீர்த்து விட்டு அங்கிருந்து அகன்றுள்ளது.

இந்தச் சம்பவத்தை அருகில் இருந்த வயல்களில் வேலை செய்துள்ளவர்களும் கண்டுள்ளனர். அதனால் தற்போது அங்கு வேலைக்குச் செல்வதற்கு அவர்கள் அஞ்சுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-9)

# தேர்தலுக்கு முன் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் அடையாள அட்டை

கொழும்பு, நவ.26

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பிக்கும் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன என்று ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் நிதியுதவியுடன் நடமாடும் சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளது என்று திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர். எம்.எஸ்.சரத் குமார குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடமாடும் சேவை ஊடாக, எந்தவித கட்டணங்களும் இன்றி, தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, இவ்வாறான நடமாடும் சேவை மூலம் இதுவரை 12 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

ஏதேனும் பிரச்சினைகள் காணப்படின், மாற்று வழிமுறைகள் மூலம் அவற்றை நிவர்த்தி செய்து, அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை இல்லாமல் எவரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முடியாது எனவும் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந)

## விபத்து

### வாகன விபத்தில் 4 பேர் காயம்

கொழும்பு-யாழ்ப்பாணம் பிரதான வீதியின் திறப்பனை 112 ஆம் மைல் கல் பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த நான்கு பேரும் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வான் ரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந)

### கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்து



களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய கல்லாறு பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவுள்ள கடையுடன் சிறிய கப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற விபத்தில் மேற்படி வாகனமும் கடையும் சேதமாகியுள்ளதாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். மஞ்சள் கடைக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் நின்றதையடுத்து, பிரதான வீதியால் பயணித்துக்கொண்டிருந்த கப் வாகனத்தை நிறுத்த முற்பட்டபோது அது வேகக் கட்டுப்பாட்டை இழந்து கடையுடன் மோதியுள்ளது. (ந)



ஹொரகொல்லையில் அமைந்துள்ள எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் சமாதிக்கு, எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, நேற்று மலர் அஞ்சலி செலுத்தி வணக்கம் செலுத்தினார். அவருடன் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் கலந்துகொண்டிருந்தார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்பநிலைத் தலைவர்களிடம் ஆசீர்வாதம் பெறும் நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளார். (ந)

# வடக்குத் தேர்தல் நீதியற்றது என நிரூபித்தால் பதவி விலகுவேன்

## மஹிந்த தேசப்பிரிய கூறுகின்றார்

கொழும்பு, நவ.26

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல், நீதியானதும் சுதந்திரமானதுமான முறையில் நடைபெறவில்லை என்று பொதுநலவாய அமையத்தின் அதிகாரிகள் நிரூபித்தால் நான் உடனடியாக பதவி விலகுவேன் என்று தெரிவித்துள்ளார்- தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ந)

# 75 ஆயிரம் பேர் வரையில் இலங்கையில் அடிமைகள்

கொழும்பு, நவ.26

இலங்கையில் சுமார் 74 ஆயிரம் பேர் வரையில் தமது உரிமைகளை இழந்த நிலையில் அடிமைகளாக உள்ளனர் என்று அனைத்துலக ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டுக்கான பூகோள அடிமைகள் சுட்டியை, வோக் பிறி பவுண்டேஷன் (Walk Free Foundation) என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

167 நாடுகளை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பட்டியலில், இலங்கை 92ஆவது இடத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் சனத்தொகைக்கும், அடிமைகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான ஒப்பீட்டின் அடிப்படையில் இந்த தரப்படுத்தல் அமைந்துள்ளது.

இலங்கையில் ஒட்டுமொத்த சனத்தொகையில், 0.359 வீதமானோர் அடிமைகளாக இருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 27 நாடுகளில் இலங்கை 14ஆவது இடத்தில் உள்ளது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இந்தியா முதலிடத்திலும், அதையடுத்து பாகிஸ்தான் கம்போடியா, மொங்கோலிய ஆகிய நாடுகளும் அடிமைகள் பட்டியலில் இருக்கின்றன. உலகில் மூன்றில் இரண்டு பங்கு அடிமைகள் ஆசிய பசுபிக் நாடுகளிலேயே உள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கை, நேபாளம், பங்களாதேஷ் நாட்டு ஆண்கள் கட்டுமானத்துறையில் அடிமைகளாக நடத்தப்படுகின்றனர் என்றும், அந்த நாடுகள் மற்றும் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் பெண்கள் பாலியல் அடிமைகளாக நடத்தப்படுகின்றனர் என்றும் -இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

26 NOV 2014

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 10 புதன் (26.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 365

# வீதிகள் எங்கும் இராணுவம் குடாநாட்டில் தீவிர பாதுகாப்பு

## இரவும் பகலும் ரோந்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 26

**மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இரவிலும் பகலிலும் பெரும் எண்ணிக்கையான படையினர் குடாநாட்டின் பல வீதிகளிலும் சைக்கிள்களிலும் கால்நடையாகவும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.**

**யாழ். நகரப் பகுதி, யாழ். பல்கலைக்கழகச் சுற்றாடல் போன்ற இடங்களில் படையினர் கால்நடையாகவும், சைக்கிள்களிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**



கோப்புப் படம்.

வடமராட்சிப் பகுதியிலும் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் சில இடங்களில் வீதிகளில் பயணிப்போரை வழிமறித்துச் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தின் இறுதி நிகழ்வு நாள் நாளை வியாழக்கிழமை மாலை ஈகை சுடரேற்றலுடன் இடம்பெறும்.

இதேவேளை- தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 60ஆவது பிறந்தநாள் இன்றாகும்.

இதனை முன்னிட்டு வடமராட்சிப் பகுதியிலுள்ள வீதிகளில் இரவு நேரங்களில் சைக்கிள்களில் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த காலங்களில் படையினர் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வந்தாலும் கடந்த இரு தினங்களாக அளவுக்கு அதிகமான ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக வல்வெட்டித்துறை, ஊரிக்காடு, உடுப்பிட்டி, புறாப் பொறுக்கி ஆகிய பகுதிகளில் ரோந்துப் பணிகளில் ஈடுபடும் படையினர் இரவு வேளை மற்றும் விடியற்காலைப் பொழுதில் வீதியால் பயணிப்போரை வழிமறித்து ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக அல்வாய், மாலு

(19ஆம் பக்கம் பார்க்க)

## சுவீகரிக்கப்பட்டது காங்கேசன்துறை சிமெந்து ஆலை

கொழும்பு, நவ.26

காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்குச் சொந்தமான 104 ஏக்கர் காணியையும் கட்டடங்களையும் பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்துவிட்டதாக லங்கா சிமெந்து நிறுவனம் நேற்று அறிவித்தது.

நட்டஈடு தருமாறு பாதுகாப்பு அமைச்சிடம் தாம் கோரி உள்ளதாகவும் நிறுவனம் தெரிவித்தது. எனினும் தமது காணி சுவீகரிக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பது தமக்குத் தெரியாது என்றும் அது கூறியுள்ளது. (உ-101)

## வடக்கு மாகாண சபையினால் ஒவ்வொரு அமைச்சுக்கும் நிதி

யாழ்ப்பாணம், நவ. 26

வடக்கு மாகாண சபையினால், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் ஒவ்வொரு அமைச்சுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பு அரசால் வழங்கப்பட்ட ஆயிரத்து 440 மில்லியன் ரூபா நிதியே இவ்வாறு பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அமைச்சுக்கு 408 மில்லியனும், சுகாதார அமைச்சுக்கு 317 மில்லியனும், கல்வி அமைச்சுக்கு 303 மில்லியனும், விவசாய அமைச்சுக்கு 167 மில்லியனும், மீன்பிடி அமைச்சுக்கு 77 மில்லியன் நிதியுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் விசேட திட்டங்களுக்காக 168 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அரசினால் வடக்கு மாகாணத்து மூலதன நன்கொடையாக 2 ஆயிரத்து .735 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதி பங்கீடு செய்யப்பட்டது. இதில் வரையறை அடிப்படையிலான நன்கொடை நிதியாக 400 மில்லியனும், மாகாண

(19ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் ஆணைக்குழுவின் அடுத்த அமர்வு வவுனியா மாவட்டத்தில்

### டிசெம்பர் 14 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 26

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த அமர்வு வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்னதாக எதிர்வரும் 9 ஆம் திகதி, சர்வதேச நிபுணர்களுடன் ஆணைக்குழு சந்திப்பு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ஆணைக்குழு, காணாமற்போனோர் தொடர்பில் மாத்திரம் ஆரம்பத்தில் விசாரணைகளை முன்னெடுத்தது. கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி, இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியினால் பணிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய போர்க் குற்றங்கள் தொடர்பில் சாட்சியமளிப்பவர்களின் சாட்சியங்களை ஆணைக்குழு கடந்த 15 ஆம்திகதி அனுப்புமாறு கோரியிருந்தது. இதன் பின்னர் வவுனியாவிலேயே முதலாவது பகிரங்க அமர்வு இடம் பெறுகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதிவரை வவுனியா மாவட்டத்தில் இந்த அமர்வு நடைபெறவுள்ளது. இந்த அமர்வு நடைபெறுவதற்கு முன்னதாக, ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர் குழுவுடன் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆணைக்குழு சந்திப்பு நடத்தவுள்ளது. (கு-5)

## கடிதங்களை கைவிட்டு நேரில் பேசித் தீருங்கள்

### இந்திய மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.26

இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்கு இனிக் கடிதங்கள் எழுதுவதை விட்டு நேரடியாக இருநாட்டு அரசும் பேசித்தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையென்றால் இருநாட்டு மீனவர்களின் குடும்பங்களும் வாழ்வாதாரத்துக்கு மாற்றுத் தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று இராமேஸ்வரம் மீனவ சங்கத் தலைவர் என்.தேவதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குள் இறங்கினால் எப்போது இலங்கைக் கடற்படையினர் கைது செய்வார்கள் என்னும் பயத்திலேயே அவர்களின் குடும்பங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் மீனவர்கள் கைது செய்யப்படும் போது மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்கக் கோரி முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்குக் கடிதம் எழுதிவந்தார். இதனடிப்படையில் மீனவர்களை மட்டும் விடுவிப்பு செய்ய இலங்கை அரசு சம்மதித்தது. கச்சதீவு கடற்பகுதியில் இந்திய மீனவர்களது பகுதி எது என மீனவர்களால் அடையாளம் காண

(19ஆம் பக்கம் பார்க்க)

## றெக்ஷயன் கொல்லப்பட்டு இன்றுடன் ஒரு வருடம்

யாழ்ப்பாணம், நவ. 26

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் றெக்ஷயன் சுட்டுக் கொல்லப்பட்டு இன்றுடன் ஒரு வருடம். அவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைதான ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட முன்னாள் அமைப்பாளரான கமலுக்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றச்சாட்டுப் பத்திரம் இது

(19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் கடற்படையால் வலைகள், படகுகள் சேதம்

### இராமநாதபுரம் மீனவர் குற்றச்சாட்டு

இராமநாதபுரம், நவ.26

கச்சதீவுக்கு அண்மித்த கடற்பகுதியில் எல்லை தாண்டி மீன் பிடிக்க முயற்சித்த நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய ரோலர் படகுகளையும் மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினம் விரட்டியடித்துள்ளனர். இதனால் வலைகள் மற்றும் படகுகள் சேதமடைந்துள்ளதுடன் மீனவர்கள் உயிர் தப்பி கரை திரும்பியுள்ளதாக இராமநாதபுரம் மீனவர் சங்கத்தலைவர் என். தேவதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் இருந்து நேற்றுமுன்தினம் 672 விசைப் படகுகளில் 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள்

(19ஆம் பக்கம் பார்க்க)

## நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக்கு மூன்று நாள்கள் மின்சாரம் இல்லை

### வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்.நகரின் நவீன சந்தைக் கட்டடத் தொகுதி கடந்த மூன்று தினங்களாக மின்சாரம் இல்லாத காரணத்தினால் அது இருளில் மூழ்கியுள்ளது. 90க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரவு நேரத்தில் கடைகளுக்குப் பாதுகாப்பில்லை எனவும் வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனால் கடைகளின் உரி

(19ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுறுத்தல் உள்ள வாக்காளர் வேறிடத்தில் வாக்களிக்க வசதி

யாழ்ப்பாணம், நவ. 26

வழமையான தமது வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பது அச்சுறுத்தல் எனக் கருதும் வாக்காளர்கள், தமக்கு வேறு வாக்களிப்பு நிலையத்தை மாற்றித் தருமாறு கோர முடியும்என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் மூலம் நேரடியாக கோரிக்கை வைக்க முடியும்.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வழமையான தமது வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பது அச்சுறுத்தல் என்று வாக்காளர் கருதினால், வேறு

(19ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர்களுக்கு கூட்டம்

தென்மராட்சி,நவ. 26
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு வலய கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-9)


**சிறுநீரகம் தேவை**

50 வயது ஆண் நோயாளி ஒருவருக்கு A+O இனத்தைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொ.பே: 077 802 9929, 077 950 0230, 077 020 2376

**விற்பனைக்கு**


சகல வசதிகளுடன் கூடிய Dental Chair & பற்சிகிச்சை உபகரணங்கள் விற்பனைக்குண்டு
தொ.பே: 077 224 6861

**தேவை**

யாழ்நகரில் உள்ள பலசரக்கு வியாபாரக் கடைக்கு பலசரக்கு வியாபாரத்தில் முன் அனுபவமுள்ள
01. சிட்டை எழுதுநர்
02. கணக்காளர்
ஆண் தேவை.
தொ.பே: 077 544 4014

**IELTS** A1 B1 B2
MBA(London) Qualified Trainer Call: 0213208342
Visit: http://edu.kugroup.info/ielts
0777302882 IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் 16 வருட அனுபவமுள்ள ஒரே கல்வி நிறுவனம்.
K.U Education,No 626 1/1,K.K.S Rd,Jaffna


## கேர்வேயின் இலவச ஆங்கிலமொழி புலமைப்பரிசில் பயிற்சி வகுப்புகள்



தென்மராட்சி, நவ.26
ஜோன் கீல்ஸ் நிறுவன அனுசரணையுடன் கேர்வே நிறுவனம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச ஆங்கில மொழிப் புலமைப் பரிசில் பயிற்சி வகுப்புகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கேர்வே நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
சாவகச்சேரி நிலையத்தில் நடத்தப்படும் மூன்றாவது பயிற்சி நெறியில் 25 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.
56 மணித்தியாலங்கள் நடத்தப்படும் பயிற்சிநெறியின் பின்னர் நடத்தப்படும் பரீட்சையில் சிறப்புத்தேர்ச்சி பெறுவோர் அடுத்தகட்டப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மாமியார் வளவுக்குள் மருமகளை தீண்டிய பாம்பு

மாமியாரின் வளவுக்குள் வைத்து மருமகளைப் பாம்பு தீண்டியது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கல்வயலில் இடம்பெற்றது.
இரவு உணவை மாமியாருக்கு வழங்கவென தமது வீட்டிலிருந்து வந்த வேளையில் மாமியார் வசித்து வந்த வளவுக்குள் வைத்து பாம்பு கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
கல்வயல் ஓராம் கட்டைப்பகுதியைச் சேர்ந்த சுகந்தன் வினோதினி (வயது-30) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

## கலந்துரையாடல்

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு உள்ளீர்ப்பு தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண வலய கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதால் யாழ் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)


**பகுதிநேர வேலைவாய்ப்பு**

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, காப்புறுதி ஆலோசகராக, யாழ். மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றிவரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 2வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரசஅங்கீகாரம்பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்: யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி, முல்லைத்தீவு.

**அடிப்படைத் தகைமைகள்:**

- G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 10.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 5031,
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


**8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்
**கணபதிப்பிள்ளை சண்முகநாதன்**
(மாஸ்ரர்)



ஆண்டெட்டு ஆனாலும் ஆறுதில்லை
அன்பான தந்தையாய் நல் அறிவூட்டும்
ஆசானாய் இந்த அவனியிலே - எம்மை
வாழ வைத்த தெய்வமே! - உம்
அன்பு முகம் அகலவில்லை எப்பொழுதும்
உமது அரும்பணியை எவர் மறப்பார் அவனியிலே
ஆத்திபடியான் அடி பணிந்து ஆறுதல்
அடைகின்றோம் உமது நினைவுடனே!

தோற்றம் 13.02.1943 — மறைவு 26.11.2006

குடும்பத்தினர்.
ஆத்தியடி,
பருத்தித்துறை.

## பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி கே.ஏ.சுப்பிரமணியத்தின் 25 ஆவது நினைவுக் கூட்டம்

பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 25 ஆவது நினைவுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் 'இணக்கத்தின் இணங்க இயலாமை: போரின் பின்னான இணக்கம்: தனிமைகள் கடந்து சிந்தித்தல்' என்ற தலைப்பிலான நினைவுப் பேருரையை பேராசிரியர் ஜயதேவ உயன்கொட நிகழ்த்துவார்.
சி.கா.செந்திவேல் எழுதிய 'தோழர் மணியம் நினைவுகள்' நூல் வெளியீட்டு வைக்கப்படவுள்ளது. நூலின் முதற் பிரதியை திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் பெற்றுக் கொள்வார்.
ஆய்வுரையை மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சிவ. இராஜேந்திரன் நிகழ்த்துவார். (வ)

**நிஜம் நிழலாகிய ஓராண்டின் நினைவலைகள்**

அமரர்
**மார்க்கண்டு ஞானசேகரன்**

மலர்வு 10.03.1957
உதிர்வு 07.12.2013



தரணியிலே தலை நிமிர்ந்து தனித்துவமாய் சுடர்விட்ட
தனயனே எம் தலைவனே தரணியிலே எம்மையெல்லாம்
தனித்துத்தவிக்க விட்டுத் தனியனாய்ச் சென்றதெங்கே?
தவிக்கின்றோம் யாம் விடை இன்றியே.

இல.96, கண்டிவீதி, யாழ்ப்பாணம். (41500) (45.3)
குடும்பத்தினர், உறவினர்கள்.

**31 ஆம் நாள் நினைவு**

அமரர் **கிறிஸ்ரீனா புனிதசீலி ஜெயரட்ணம்**



மண்ணுலகில் 25.12.1947
விண்ணுலகில் 27.10.2014

மலர்ந்த அன்பும் சிறந்த பாசமும்
வாடாத புன்னகையுமாய் எம்மோடு இருந்து
எம்மை மாறாத துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயிலில் ஆழ்ந்ததேனம்மா

27.10.2014 அன்று காலமான எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் இரங்கலும் ஆறுதலும் தெரிவித்து எம்மோடு இருந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அத்துடன் இன்று (26.11.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்கு கொண்டு ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படியும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


70/1. பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (41494)(4.6.3)
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## விழிப்புணர்வு நிகழ்வுகள்

தென்மராட்சி கல்வி வலயத்தால் மாணவர்களுக்கான விழிப்புணர்வுநிகழ்வுகளை நாளை கொடிகாமம் குடமியன் அ.த.க. பாடசாலையில் நடத்தவுள்ளனர்.
நிகழ்வில் மாணவர்களுக்கான நூலகம் வாசிப்புப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்படுவதுடன் சுற்றுநெறிகளும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.
பொது மண்டபத்துக்கான புனர் நிர்மாண வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படுவதுடன் பாடசாலையில் கற்கும்மாணவர்களுக்கான உடல், உளவள வளர்ச்சி நிலையமும் ஆரம்பிக்கப்படவுள்ளது
அத்துடன் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக முன்னெடுப்புப் பணிகளும் இடம்பெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

**முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி**

அமரர் **கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்**
(ஓய்வுபெற்ற பணியாளர்-ரயில் நிலையம்)



தோற்றம் 09.05.1931 — மறைவு 07.12.2013

எங்கள் தெய்வமே! எமது
குடும்பத்திற்கு மட்டுமல்ல பரந்த
மனதுடன் இறை தொண்டும்,
மக்கள் சேவையும் உங்கள் கடமைகளாகச் செய்தீர்கள், அன்புடன்
எம்மைக்காத்து அறிவிலே உயரவைத்து சமூகத்தில் உங்கள்
பிள்ளைகள் எனச் சொல்ல வைத்தீர்கள். நீங்கள் எம்முடன் வாழ்ந்த
காலம் பொற்காலம். என்றுமே பசுமையானவை. ஆண்டு ஒன்று
என்ன ஆயிரம் சென்றாலும் மறவோம் உங்களை.

(47941)(4.3.6)
99, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நுளம்புத் தொல்லையை போக்குவதற்கு...

இப்போது மழை காலம். நுளம்பு பல்கிப் பெருகும் காலமும் இதுவே. நுளம்புத் தொல்லையைப் போக்குவதற்கு இப்போது நுளம்புத் திரியையே வீடுகளில் பயன்படுத்துகிறோம்.

நுளம்புத் திரிகளை எரிப்பதால், மிகக் குறிப்பாக பூட்டிய அறைகளில் பயன்படுத்துவதால் சுவாசப்பையில் பல பாதிப்புகள் உண்டாவதாக மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றினால் மலேரியா, டெங்கு, யானைக்கால் போன்ற கொடிய நோய்களும் உண்டாகின்றன.

நுளம்புகளை விரட்டுவதற்கு இலகுவான முறை ஒன்று இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எலுமிச்சம் பழத்தை இரண்டாகப் பிளந்து அவற்றுக்குள் ஆறு அல்லது எட்டுக் கராம்புக்ளை புகுத்தி இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு அறைக்குள் வைத்தால் நுளம்புத் தொல்லையைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நுளம்பு முட்டைகளை இனம் கண்டு மண்ணெண்ணெய் ஊற்றி விடுவதன் மூலமும் அவற்றை அழிக்க முடியும். டி.டி.ரி. பவுடரை, அலுமாரிகள் மற்றும் புத்தக அலுமாரிகள் மலசல கூடங்களில் இடுவதன் மூலம் அவற்றை அழிக்க முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

# ஆஸி. வழங்கும் நிதி வீதிப் புனரமைப்புக்கு

### சாவகச்சேரி நகர சபை தீர்மானம்

தென்மராட்சி, நவ.26

ஆஸ்திரேலிய உதவிகள் திட்டத்தில் வழங்கப்படவுள்ள நிதியைப் பயன்படுத்தி சாவகச்சேரி நகர சபையின் எட்டாம் வட்டா ரத்தில் வீதிகளைப் புனரமைப்பதென கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய உதவிகள் திட்டத்தில் நகரசபைக்கு 80 லட்சம் ரூபா வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி நகர சபையின் எட்டாம் வட்டாரத்தில் (கோயிற்குடியிருப்பு) இதுவரை புனரமைக்கப்படாத வீதிகளைப் புனரமைக்க சபையின் ஒப்புதலை தலைவர் கோரியிருந்தார்.

குறித்த வட்டாரத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை கடந்த நான்கு வருடங்களில் தமக்கென ஒதுக்கப்பட்ட நிதியை வேறு வட்டாரங்களின் வீதிப் புனரமைப்புக்கு வழங்கியிருந்தார். குறித்த நான்கு வருட காலத்தில் இந்த வட்டாரத்தில் ஏனைய உறுப் பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் நான்கு வீதிகள் புனரமைக்கப்பட்டன.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய உதவித் திட்டத்தில் கிடைக்கும் நிதியை கோயிற்குடியிருப்பு பிரிவில் மணல் வீதிகளாகக் காணப்படும் பொன்னம்பலம் வீதி, சிவகுரு வீதி மற்றும் அதனுடன் இணைந்த வீதிகள் ஆகியவற்றை புனரமைக்கப் பயன்படுத்தவே சபையின் அனுமதியைக் கோரியிருந்தார். தலைவரின் வேண்டுகோளை சபை ஏற்று நிதி கிடைத்ததும் குறித்த வீதிகளைப் புனரமைப்பதென ஏகமனதாக சபையால் தீர்மானிக்கப்பட்டது.

(வ-9)

# வரவு - செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு

வவுனியா, நவ.26

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த 20 திகதி தொடக்கம் நாளை வரை தலைமை அலுவலகம், ஓமந்தை உப அலுவலகம், கூமாங்குளம் பொதுநூலகம் ஆகிய இடங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதில் ஆட்சேபனைகள் இருப்பின் நாளைக்குள் தமக்கு அறியத் தருமாறு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (வ)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ. 26

மூளாயம்பதி அயித்தாம்புலம் பூரணை புட்கலை உடனுறை ஹரிகரபுத்திர ஐயனார் ஆலய வருடாந்த அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 7மணிக்கு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து சுவாமி திருக்கல்யாணமும் அன்னதானமும் இடம்பெறும்.

(வ- ரி)

# நன்றி செலுத்தும் ஆராதனை

யாழ்ப்பாணம், நவ.26

சீயோன் தேவாலயம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை அன்று 55 ஆவது ஆண்டை பூர்த்தி செய்கிறது. அதனை முன்னிட்டு அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு இல. 24, இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அதன் தலைமைச் சபையில் நன்றி செலுத்தும் ஆராதனை இடம்பெறும். இதில் இலங்கை சுயாதீன திருச்சபைகளின் ஐக்கியத்தின் அக்கிராசனர் வண. சி.நித்தியானந்தன் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

(ஒ)

## 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTH DAY

திருமதி
**ராஜினி தவராசலிங்கம்**
(தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனாவைத்தியசாலை)



இன்று (26.11.2014) புதன்கிழமை தனது 60 ஆவது பிறந்தநாளைக் காணும் திருமதி ராஜினி தவராசலிங்கம் அவர்களை சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கணவர்- தவராசலிங்கம்
பிள்ளைகள்- அரவிந்தன், சஞ்சயன் (ஜேர்மனி), துவாரகா-பிரதீபன் (கனடா), இந்துஜன்.
பேரப்பிள்ளைகள்- பிருத்திகா, நிகானா.

கேணியடிலேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
021 205 2070 (41522)(4.3.6)



# நடமாடும் பொலிஸ் நிலையம் ஏழாலையில் நேற்றுத் திறப்பு



வலி.வடக்கு. நவ. 26
சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட ஏழாலைப் பகுதியில் இடம் பெறும் வன்செயல்கள், திருட்டுச் சம்பவங்கள் மற்றும் அடிதடிகளை கட்டுப்படுத்தும் வகையில் நடமாடும் பொலிஸ் நிலையம் ஒன்று ஏழாலை சந்தியில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நீண்ட காலமாக ஏழாலைப் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நடமாடும் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.ஏ.துஸ்மந்த தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்களின் தலைவர் எஸ்.தம்பித்துரை தேசியக் கொடியை ஏற்றி வைத்ததுடன் நடமாடும் பொலிஸ் நிலையச் செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தார்.
இந்த நிகழ்வில் கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-86)

## பிரதேச சபை உறுப்பினரின் உருவப் பொம்மைக்குத் தீ



வலி.வடக்கு. நவ 26
வலி மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் உருவப் பொம்மை நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பிரதேச சபை முன்றலில் தீயிடப்பட்டது.
பல்லசுட்டிக் கிராமத்தில் இராணுவத்தினரினால் கட்டப்படும் வீட்டுத் திட்டம் தொடர்பில் கடந்த மாதம் இடம் பெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் விமர்சனம் செய்தமைக்குக் கண்டனம் தெரிவிக்கும். வகையிலேயே இந்த உருவப் பொம்மை தீயிடப்பட்டுள்ளது.
இந்த ஊர்வலம் அரசியல் கட்சி ஒன்றின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினருக்கு எதிராக இடம் பெற்றதாகத் தெரிவிக்கப் பட்டது. (த-86)

## யாழ், பல்கலைக்கழக மாணவர் மீதான கொலை அச்சுறுத்தலுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம்.நவ. 26
யாழ் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும் ஒரு விரிவுரையாளரதும், நான்கு மாணவர்களதும் பெயர்களைக் குறிப்பிட்டு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.
இது குறித்து அந்த முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித் துள்ளதாவது:-
கலைப்பீடத்திலுள்ள ஆங்கிலக் கற்கைகள் துறைத் தலைவரும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவருமான அமிர்தலிங்கம் இராசகுமாரன் மற்றும் கலைப் பீடத்தில் ஊடகத்துறையில் கல்வி பயிலும் 3 ஆம் வருட மாணவர்களான துரைராசா தமிழ்ச்செல்வன், கணேச லிங்கம் நிவாஸ், தங்கராசா ஐங்கரன் மற்றும் புவியியல்துறையில் 3 ஆம் வருடத்தில் கல்வி பயிலும் பிலிப் பேரிஸ் பிறிட்டோ ஆகியோரது பெயர்கள் குறிப்பிடப்பட்டு சுட்டுக் கொல்லுவோம் என கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.
பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாண வர்கள் மீதான இந்தக் கொலை அச்சுறுத்தலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின ராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
கொச்சைத் தமிழில் எழுதப்பட்டுள்ள அந்த துண்டுப் பிரசுரத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தக் கூடாதென்றும், அவ்வாறு நடத்தினால் சுட்டுக் கொல்லுவோம் என்றும் கூறப்பட்டுள்ளது.
அரசும், இராணுவத்தினரும் மட்டுமே மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தக் கூடாதெனத் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்ற நிலையில் 21 - 27 வரையான மாவீரர் தின வார காலத்தில் மாவீரர்களை நினைவு கூரக்கூடாதென அச்சுறுத்தி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டமையை இராணுவ உளவுத் துறையினரே மேற்கொண்டிருக்க வேண்டும் என நாம் சந்தேகிக் கின்றோம்.
சர்வதேச சட்டங்களின் பிரகாரம் போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. போரில் இறந்த ஜே.வி.பி உறுப்பினர்களை நினைவு கூர பூரண அனுமதியும், சுதந்திரமும் வழங்கியுள்ள அரசு உயிர்த் தியாகம் செய்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நினைவு கூர அனுமதி மறுக்கிறது. விடுதலைப் புலிகள் தமிழர்கள் என்பதால் தமிழர்களுக்கு எதிரான இனவாத சிந்தனையின் அடிப்படையிலேயே அவர்களை நினைவுகூருவதற்கான உரிமைகளை அரசு மறுத்து வருகின்றது.
நினைவு கூருவதற்கரன உரிமையை மறுத்துள்ளமை மட்டுமன்றித் தமிழர்கள் மீது குறிப்பாக பல்கலைக்கழக சமூகத்தின் மீது அரச பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.
இவ்விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் உரிய அக்கறை செலுத்தி மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் பாதுகாக்க வேண்டும்- என்றுள்ளது. (த)

## பொதுமக்களுக்கு இடையூறு தவசிகுளம் வாசிக்கு மறியல்

தென்மராட்சி.நவ. 26
பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த மிருசுவில் தவசிகுளம் வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக தெல்லிப்பழை மருத்துவமனை குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சை வழங்குமாறும் உத்தரவிட்டார்.
இந்த நபருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரரல் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் இந்த நபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு இந்தக் காலப்பகுதியில் தெல்லிப்பழை குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார். (த-9)

**தவறிவிட்டது**
கொக்குவிலைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சுரேஸ் குமார் என்பவருடைய தே.அ.அட்டை (650352416V), முல்லைத் தீவு மாவட்டம் தனியார் போக்குவரத்து அறிமுக அட்டை என்பன கடந்த வெள்ளிக்கிழமை ஓமந்தை சோதனைச் சாவடிக்கும் வேப்பங்குளத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்
(41529)(45.3) தொடர்பு: 077 116 6526

**விற்பனைக்கு**
சுத்தமான தங்க முலாம் பூசப்பட்ட நகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு .
தொடர்பு: 077 087 4053 (சி. 17904) (45.6)

**காணி விற்பனைக்கு**
யாழ்.மாநகரசபைக்குட்பட்ட எல்லையில் பூநாறி மரத்தடிச்சந்தி, செல்வ மஹாலுக்கு அருகில் 1½ பரப்பளவுக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 078 4453 (41526) (4.6.3)

**பெயர் மாற்றம்**
நீர்வேலியைச் சேர்ந்த செல்வரட்ணம் அன்னம்மா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை செல்வரட்ணம் அன்னலட்சுமி என பெயர் மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என அறியத் தருகின்றேன்.
(41527) (4.6.3) செல்வரட்ணம் அன்னலட்சுமி.

**மரண அறிவித்தல்**



**பெரியதம்பி மாசிலாமணி**
(ஓய்வு பெற்ற வைத்தியர்)
யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட பெரியதம்பி மாசிலாமணி காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி-கனகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், திருமதி மாசிலாமணி சிவதேவியின் அன்புக் கணவரும், சிவாணி (London), சிவனேசன் (London), மயூறன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் கனகேஸ்வரி, அமரர் பத்மநாதன் ஆகியோரின் சகோதரரும், அருணனின் (London) மாமனும், சிறீரஞ்சினி பத்மநாதன் அவர்களின் மைத்துனரும், அமரர் நந்தினி பத்மநாதன், நந்தகுமார், சாந்தகுமார் ஆகியோரின் பெரியப்பாவும், கிருபா (London), வாணி (Jaffna), தர்சினி (London), பிரபாகரன் (London), ஜெயா (Jaffna) ஆகியோரின் மாமனும், அஜந்தன் (London), அஞ்சலன் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்சாலையில் புதன் மற்றும் வியாழன் பார்வைக்கு வைக்கப்பட்டு, வியாழன் பி.ப 2 மணியளவில் தெகிவளை கல்கிஸ்சை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல் - குடும்பத்தினர் தொ.பே. 0758922417, 0774435312



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
முல்லைத்தீவு இந்து தமிழ் பாடசாலை
2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
செல்வி மேனுசா முகலன்
அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: (47943)(4.3.6)
கலைச்சுடர், கலைக்கதிர், உடையார்கட்டு.

**கண்ணீர் அஞ்சலி**
**திருமதி கௌரீஸ்வரி ஐயாத்துரை**



கடந்த திங்கட்கிழமை (24.11.2014) இறைவனடி சேர்ந்த எமது அன்புக்குரிய சிறிய தாயாரும் மாமியும் அம்மம்மாவும், பூட்டியுமான
**கௌரீஸ்வரி ஐயாத்துரையின்**
பிரிவால் துயருற்றிருக்கும் அனைவரோடும் கனடாவிலிருந்து நாமும் சேர்ந்து அவரின் ஆத்ம சாந்திக்காக எங்கள் குல தெய்வம் பூதவராயப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
க.சத்தியராணி-பெறாமகள், கனகசிங்கம்-மருமகன்,
பேரப்பிள்ளைகள் - (பொறியியலாளர்கள்)
(41533)(4.3.6) பாபா-மகேன், நிறைஞ்சன்-துளசி
பூட்டப்பிள்ளைகள்-செழியன், விஜயன், அஜயா, ஆருஷி.

**மரண அறிவித்தல்**
**திருமதி கௌரீஸ்வரி ஐயாத்துரை**
(வாத்தியார் அம்மா)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாக வும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி கௌரீஸ்வரி ஐயாத் துரை கடந்த திங்கட்கிழமை (24.11.2014) சிவபதமெய்தி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற கவிஞரும், ஆசிரியரும், சமூகசேவையாளருமாகிய ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாலினி மற்றும் பத்மினி (U.K) ஆகியோரின் பாசமிகு தாயும், தில்லைநாதன் (U.K) அவர்களின் அன்பு மாமியும், பிரவீன் (பொறியியலாளர் - (U.K), Dr. பிருந்தா (U.K), பிரம்மன் (சட்டத்தரணி (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கௌரி அம்மா, கௌரிநாயகி, சரவணபவன் ஆகியோரின் அருமைத் தங்கையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் கற்பகவிநாயகர் கோயி லுக்கு அருகில் உள்ள அவரின் உறவினர் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒருமணியளவில் உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
"கோயில் வளவு"
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (41532) (45.6)
தகவல்:
திருமதி பு. மயில்வாகனம்
உறவினர்.

## ஜனாதிபதி வழங்கிய மோ.சைக்கிள்களால் பயனேதும் இல்லை

யாழ்ப்பாணம், நவ 26

வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு என ஜனாதிபதியால் 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்த முடியாதுள்ளதாக அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

குறித்த மோட்டார் சைக்கிள்களுக்குரிய புத்தகங்கள் முழுமையாக வந்து சேரவில்லை. அத்துடன் அவற்றுக்கு முழுமையாகக் காப்புறுதிப் பணம் செலுத்த வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இங்குள்ள பலர் சாதாரண காப்புறுதி செய்துவிட்டுப் பயன்படுத்துகின்றனர்.

முழுமையாகக் காப்புறுதிப் பணம் செலுத்தவேண்டும் என்றும், அதனை அக்ரஹார காப்புறுதி நிறுவனத்திலேயே செலுத்த வேண்டும் என்றும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் அக்ரஹார காப்புறுதி நிறுவனம் வடக்கில் தனது கிளை நிறுவனத்தை இதுவரை திறக்கவில்லை. அதனால் காப்புறுதி செலுத்தாமல் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்த முடியவில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் பலர் சாதாரண காப்புறுதி செய்துவிட்டு ஜனாதிபதி வழங்கிய மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் மேலும் கூறப்பட்டது. (த-4)

# வடக்கில் இ.போ.ச. பஸ்கள் மீது 40 நாள்களில் 8 தாக்குதல்கள்

### எவரும் கைதாகவில்லை என்கிறார் யாழ். சாலையின் முகாமையாளர்

யாழ்ப்பாணம், நவ 26

வட பகுதியில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச பஸ்கள் மீது இனந்தெரியாத நபர்களால் கடந்த 40 நாள்களில் 8 தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போக்குவரத்துத் துறையோடு தொடர்புடைய அரச சார்பல்லாத ஒரு சிலரால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் இது வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் இ.போ.ச யாழ். சாலை முகாமையாளர் செ.குகபாலசெல்வம் தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மாதம் 10 ஆம் திகதி கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் மீது அரியாலைப் பகுதியில் வைத்து கற்கள் வீசப்பட்டுக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. கடந்த மாதம் 25ஆம் திகதி திருகோணமலை யில் இருந்து யாழ். வரவிருந்த பயணிகள் அனைவரும் ஒரு சிலரின் கட்டாயப்படுத்தலினால் இ.போ.ச பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டுத் தனியார் பஸ்களில் ஏற்றப்பட்டனர். கடந்த 29 ஆம் திகதி இலுப்பைக்கடவையில் வைத்து சிலரால் இ.போ.ச பஸ் ஒன்று அடித்துச் சேதமாக்கப்பட்டது.

இம்மாதம் 3 ஆம் திகதி பாலியாற்றுப்பகுதியில் வைத்து இ.போ.ச பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் சிலரால் அடித்துக் காயப்படுத்தப்பட்டனர். இம்மாதம் 10 ஆம் திகதி இரவு ஊர்காவற்றுறைக்குச் சென்ற இ.போ.ச பஸ் மீது மண்கும்பான் பகுதியில் வைத் துத் தாக்குதல் நடத்தப்பட்டதோடு, அதே தினம் கேவில் பஸ் தரிப்பிடத்தில் இரவு நேரம் தரித்து நின்ற பஸ்ஸின் முக்கிய சில இணைப்புக்கள் சிலரால் அறுக்கப்பட்டு மறுநாள் கடமையில் ஈடுபடாதவாறு செய்யப்பட்டன.

குறித்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகவும், எமக்கு சந்தேகமாக உள்ளவர்கள் தொடர்பாகவும் உரிய பொலிஸ் நிலையங்களில் உடனுக்குடன் முறைப்பாடு செய்துள்ளோம். ஆனால் இன்று வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை-என்றார். (த-ரி)

## யாழ். ரயில் நிலையத்தின் வருமானம் 100 மில்லியன்

### ஒரு மாதத்தில் மட்டும்

யாழ்ப்பாணம், நவ 26



யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தின் வருமானம் ஒரு மாத காலத்துக்குள் 100 மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளதால் சேவை நேரத்துக்கான இடைவெளியை மேலும் குறைப்பதற்கு ரயில் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ரயில் சேவைக்கான முற்பதிவுகள் உட்பட சாதாரண இருக்கைகளுக்கும் பயணிகள் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

தற்போது சேவையில் ஈடுபடும் யாழ்தேவி, விசேட ரயில் சேவை, குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி சேவை, தபால் ரயில் சேவை, நகர்சேர் கடுகதி சேவை உட்பட நாளாந்தம் 5 சேவைகளும் ஞாயிற்றுக்கிழமைகளில் விசேட ரயில் சேவையும் இடம்பெற்று வருகின்றன.

வழமையாகச் சாதாரண சேவைகள் குறைந்தது 9 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணம்-கொழும்பு இடையே நடைபெற்று வருகின்றன. ஏனைய கடுகதி ரயில் சேவைகள் குறைந்தது 7 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணம்-கொழும்பு சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இதற்கமைவாக கடுகதி ரயில் சேவை நேரத்தை 5 மணித்தியாலங்களாகக் குறைப்பதற்காக ஓமந்தை மற்றும் பொலநறுவை ரயில் பாதைகளைச் சீரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் நிலையங்களில் இருந்து வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் சேவை நேரத்தைக் குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த-14)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபனின் மாகாண விசேட அபிவிருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த வறுமையான குடும்பம் ஒன்றின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 25ஆயிரம் ரூபா செலவில் கோழிக் குஞ்சுகள், கோழிக்கூடு என்பவற்றை வழங்கும் நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கால்நடை வைத்திய அலுவலகத்தில் நடைபெற்றது. மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் பொருள்களைக் கையளித்தார். (த-9)

## வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பாதீனியம் ஒழிப்பு ஆரம்பம்

வலி.தென்மேற்கு, நவ 26

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன எல்லைக்குள் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டிலிருந்த பாதீனியம் தற்போது பெய்யும் மழை காரணமாக மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து முதற் கட்டமாகப் பண்டத்தரிப்பு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் ஆலய வளாகத்தில் பாதீனியம் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், பிரதேச இளைஞர் கழக சம்மேளன உபதலைவர் எஸ்.றொபின்ஷன், பொருளாளர் அ.ஜெபநேசன், விளையாட்டுத்துறைச் செயலர் அ.ஜீன் கார்த்திகா, ஊடகச் செயலாளர் எவ்.டி. எக்ஸ். கூரே, பண்டத்தரிப்பு இளைஞர் கழகத்தின் தலைவர் அ.கமில்டன், பண்டத்தரிப்பு இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து வலி.தென்மேற்குப் பிரதேச இளைஞர் சம்மேளன எல்லைக்குள் காணப்படும் பாதீனியம் குறித்த பிரதேச இளைஞர் கழகங்களின் உதவியுடன் முற்றாக அழிக்கப்படவுள்ளதாக வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தெரிவித்தனர். (த-86)



# மாதகல் நுணசை ம.வியில் 115 மாணவருக்குக் காலணி

### சென்னை போர்ட் சிற்றி றோட்டறிக் கழக அனுசரணையில் நேற்று வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ 26

நல்லூர் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் சென்னை போர்ட் சிற்றி றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில், மாதகல் நுணசை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 115 மாணவர்களுக்கான காலணிகள் பாடசாலையில் நேற்று இடம்பெற்ற வைபவத்தில் வைத்து வழங்கப்பட்டன.




இந்த வைபவத்தில் இந்திய பிரதித் துணைத் தூதுவர் சு.தட்சணாமூர்த்தி பிரதம விருந்தினராகவும், நல்லூர் றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேறியன் த.றவின தாஸ், தூதரக அதிகாரிகள் கே.எஸ். மார்வா, வி. இராஜ கோபால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு மாணவர்களுக்குக் காலணிகளை வழங்கினார்கள்.

இந்திய பிரதித் துணைத் தூதுவர் சு.தட்சணாமூர்த்தியால் பாடசாலை நூலகத்துக்கான ஒரு தொகுதி நூல்களும் பாடசாலை அதிபர் சிவனேசனிடம் கையளிக்கப்பட்டன.

அண்மையில் இதே பாடசாலைக்கு பயணம் செய்த இந்திய பிரதித் துணைத் தூதுவர் சு.தட்சணாமூர்த்தியினால் பாடசாலை புத்தகப் பைகளும், காகிதாதிகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## வவுனியாவில் கன மழையால் தற்காலிக வீடுகளுள் வெள்ளம்



வவுனியா, நவ. 26
வவுனியாவில் பெய்த கடும் மழையால் கற்பகபுரம், பூந்தோட்ட முகாம், செக்கட்டிபுலவு, செட்டிக்குளம், சிதம்பரபுரம் பகுதிகளில் தற்காலிக வீடுகளில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மண் வீடுகளில் அடிப்படை வசதியின்றி வாழும் மக்கள், தமது பிள்ளைகள் வீடுகளில் இருந்து கற்க முடியாது அவஸ்தைப்படுவதாகவும், தமக்கு நிரந்தர வீடு தருமாறு வவுனியா பிரதேச செயலகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பல தடவை கோரியும் இதுவரை குறித்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும் கூறுகின்றனர். இது குறித்து வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள மக்களின் வீடுகளுக்கு செல்லும் பாதையையும் வெள்ளம் மூடியுள்ளது. மண் வீடுகளின் சுவர்கள் இடிந்து விழும் அபாயக் கட்டத்தை அடைந்துள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் பலத்த சிரமங்களுடன் வாழ்ந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(த-402)

# வழக்கின் சாட்சிக்கு பொலிஸ் அச்சுறுத்தல்

## உயரதிகாரி நீதிமன்றுக்கு அழைப்பு

மன்னார், நவ. 26
மன்னார் நீதிமன்றத்தினுள் புகுந்து நீதிவானின் வாகனத்தைப் படம்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட யுவதி தொடர்பான வழக்கின் சாட்சிக்கு பொலிஸாரினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸாரிடம் விளக்கம் கேட்கப்பட்டபோதும், அவர்கள் உரிய பதில் வழங்கவில்லை. இதனால் பொலிஸ் உயரதிகாரி உள்ளிட்ட குழுவினரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் மன்னார் நீதிவான் நீதிமன்றத்துக்கு வழக்கு ஒன்றுக்காக வந்திருந்த யுவதி ஒருவர் நீதிவானின் வாகனத்தைத் தனது கைத்தொலைபேசியில் படம் எடுத்துள்ளார்.

இதனை வேறொரு வழக்குக்காக அங்கு வந்திருந்த ஒருவர் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். இதனையடுத்துக் குறித்த யுவதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

மறுநாள் அவரை நீதிமன்றில் முற்படுத்திய மன்னார் பொலிஸார், குறித்த யுவதி கையடக்கத் தொலைபேசி தொடர்பான அறிவின்மை காரணமாகவே அவ்வாறு படங்களை எடுத்ததாகவும், அவர் சந்தேகத்துக்கு உரிய நபர் அல்லர் எனவும் தெரிவித்திருந்தனர்.

எனினும் வழக்குத் தொடுநர் சார்பாக மன்றில் தோன்றிய சட்டத்தரணி வினோதன், குறித்த யுவதி தவறுதலாக இந்தப் படங்களை எடுக்கவில்லை எனவும், படங்களை ஆராயும்போது அவரால் வேறு படங்கள் தெளிவான முறையில் எடுக்கப்பட்டுள்ளதாகவும், நீதிவானின் வாகன இலக்கத் தகட்டை உருப்பெருப்பித்தே படங்கள் எடுக்கப் பட்டுள்ளதாகவும், எனவே பொலிஸார் இது தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டுமென்றும் கேட்டிருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், குறித்த யுவதியை 20 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவித்து வழக்கை ஒத்தி வைத்திருந்தார்.

நேற்று முன்தினம் யுவதி தொடர்பாக நீதிமன்றுக்குத் தகவல் வழங்கிய சாட்சியான ஓட்டோச் சாரதியை பஸ் நிலையத்துக்குத் தேடிச் சென்ற உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் வேறு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அவரைக் கடுமையாக எச்சரித்ததுடன் தேவையற்ற விடயங்களில் தலையிட வேண்டாம் என்றும் கூறியுள்ளனர்.

இதனையடுத்துப் பயம் காரணமாகக் குறித்த சாட்சியான இளைஞர் சட்டத்தரணி வினோதன் மூலமாக இந்தச் சம்பவம் தொடர்பாக மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இது தொடர்பாக நீதிமன்றத்தினால் பொலிஸாரிடம் விளக்கம் கோரப்பட்டபோதும், பொலிஸார் உரிய காரணத்தை முன்வைக்காததால் பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பரிசோதகரையும், குறித்த உப பொலிஸ் பரிசோதகரையும், ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் 12 ஆம் திகதியன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(த-4-103)

## கொள்ளைச் சந்தேக நபர்களுக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை

கிளிநொச்சி, நவ. 26
கிளிநொச்சி பரந்தன் பகுதியில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட ஐந்து சந்தேக நபர்களுக்கும் கடுமையான 6 நிபந்தனைகளுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் குமரபுரம் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி நள்ளிரவு ஆசிரியர் ஒருவரின் வீடொன்றுக்குள் புகுந்து சுமார் 6 இலட்சத்து 68 ஆயிரம் பெறுமதியான தங்க நகை, கைத்தொலைபேசி என்பவற்றைக் களவாடிய சம்பவத்துடன் தொடர்புடைய 5 சந்தேக நபர்களை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்ததுடன், அவர்களைக் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதேவேளை இவர்களுக் கெதிராக மற்றுமொரு திருட்டுத் தொடர்பான வழக்கொன்றும் பதிவு செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் நடைபெற்றபோது 5 பேரும் தலா 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 5 இலட்சம் பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும்,

கிராம சேவையாளர், பிரதேச செயலாளர் வதிவிடத்தை உறுதிப்படுத்திய சான்றுப் பத்திரம், கடவுச்சீட்டுக்களை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட வேண்டும், ஒவ்வொரு நாளும் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவேண்டும், சாட்சிகளுக்கோ முறைப்பாட்டாளர்களுக்கோ எந்த இடையூறும் விளைவிக்கக் கூடாது என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

(த-55)



கொழும்பு நாவலர் நற்பணி மன்றத்தினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நிறுவப்பட்ட நாவலர் சிலையை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தமிழறிஞர் பண்டிதர் பரஞ்சோதி திறந்து வைத்தார். இதில் நாவலர் நற்பணி மன்றத் தலைவர் கருணை ஆனந்தன், உப தலைவர் புண்ணியசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-9)

## கசிப்புடன் கைதானவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, நவ. 26
கிளிநொச்சிப்பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பை உடைமையில் வைத்திருந்த ஒருவரைக் கைதுசெய்த கிளிநொச்சிப் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார்.

(த-55)

## கிளிநொச்சிப் பகுதியில் ஒரு வகைக் காய்ச்சல்

### நூற்றுக்கணக்கானோருக்கு இதுவரை சிகிச்சை

கிளிநொச்சி, நவ 26
கிளிநொச்சிப் பகுதியில் ஒரு வகையான தொற்றுக் காய்ச்சலுக்கு இலக்காகி ஏராளமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட கால வறட்சிக்குப் பின்னர் தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளது. இதனை அடுத்து அதிகளவானோர் ஒருவகை தொற்றுக் காய்ச்சலுக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறுவர்கள், குழந்தைகள் அதிகளவில் இந்தத் தொற்றுக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கிளிநொச்சி பொது வைத்திய சாலை விடுதிகளில் நாள் ஒன்றுக்கு 20 க்கும் மேற்பட்டோர் இந்தக் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை, வெளிநோயாளர் பிரிவுகளில் நூற்றுக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் காய்ச்சல், சளி ஏற்பட்டால் வைத்தியரின் ஆலோசனையை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு வைத்திய சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

(த-55)

## வீதி ஒழுங்கு விதிகளை மீறியோருக்கு அபராதம்

கிளிநொச்சி, நவ. 26
கிளிநொச்சி மற்றும் பளை ஆகிய பகுதிகளில் வீதி ஒழுங்கு விதிகளை மீறி பயணித்தவர்களுக்குத் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப் பகுதியில் வரியனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் கவனயீனமாக வாகனம் செலுத்திய இருவருக்கு தலா ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முழங்காவில் பகுதியில் கவனயீனமாக வாகனம் செலுத்தியவருக்கு ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப் தீன் முன்னிலையில் இவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து குறித்த தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

(த-55)

# தொழிற்சாலையால் துர்நாற்றம் பொதுமக்களுக்கு அசௌகரியம்

## உற்பத்திச் செயற்பாட்டுக்குத் தற்காலிகத் தடை

மன்னார், நவ 26
மன்னார் நகரிலுள்ள கைத்தொழிற்சாலையொன்றிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகப் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் துர்நாற்றம் வீசாமல் இருப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே தொழிற்சாலை தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதிக்கப்படும் என்று, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடபிராந்திய அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

மன்னார் - தலை மன்னார் பிரதான வீதியில், பெந்தகொஸ்தே தேவாலயத்துக்கு பின் புறமாகவுள்ள தொழிற்சாலையில் இருந்து நாளாந்தம் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த தொழிற்சாலையானது கழிவு மீன்களைப் பதப்படுத்திக் கோழித்தீன் தயாரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது. மீன்களை அவித்து பதப்படுத்தும்போது துர்நாற்றம் ஏற்படுகின்றது. இதனால் அதன் அயல் பகுதியிலுள்ள பொதுமக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியிருந்தனர்.

இதனைச் சுட்டிக்காட்டி மன்னார் மாவட்ட அரச அதிபர், மன்னார் நகர சபைத் தலைவர் ஆகியோர் மன்னார் மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குக் கடிதம் எழுதியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த தொழிற்சாலையை மன்னார் நகர சபைத்தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் மற்றும் சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

குறித்த தொழிற்சாலையில் மீனைப் பதப்படுத்தும்போது நாற்றம் வெளியேறாமல் இருப்பதற்குரிய பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாமை இதன்போது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, தொழிற்சாலையை தற்காலிகமாக மூடுமாறு நகரசபை பணித்துள்ளது. அத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், தொழிற்சாலையை ஆராய்ந்தே அதன் பின்னர் தொடர்ந்து செயற்படுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடபிராந்திய அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

(த-5-56)

# எஞ்சியுள்ள புலிகள் அழிக்கப்படுவார்கள்

## எமது புதிய ஆட்சியில் அது நடக்கும் சஜித் பிரேமதாஸ சபையில் சூளுரை



கொழும்பு. நவ.26

எமது புதிய ஆட்சியில் சர்வதேச ரீதியில் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள் முழுமையாக அழிக்கப்படுவார்கள். இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்த முடியும் என்ற புலிகளின் கனவு ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை என்று உறுதியளிக்கின்றேன் - இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் வெற்றி நிச்சயிக்கப்பட்டு விட்டது. அந்த வெற்றியின் பின்னர் நாம் நாட்டையோ அல்லது அரசை நிர்வகித்த தலைவர்களையோ அல்லது இராணுவத்தினரையோ ஒரு போதும் காட்டிக் கொடுக்க மாட்டோம்-என்றும்அவர்அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிரணி வெற்றி பெற்றவுடன் மீண்டும் சதி செய்து தனி நாட்டை உருவாக்கிவிட முடியும் என்று சர்வதேசப் புலிகளின் கனவு காண்பார்களாயின் அது ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை. அது மட்டுமல்ல எதிரணியின் ஆட்சியில் சர்வதேச ரீதியில் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளையும் அழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அங்கு சூளுரைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வெற்றி பெற்றால் இராணுவத்தினர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லப்படுவார்கள் என்ற பரப்புரை இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நடைபெறவிருப்பது தேசிய தேர்தலொன்றே தவிர சர்வதேச தேர்தலொன்றல்ல. அதற்கும் சர்வதேச நீதிமன்றத்துக்கும்எந்த தொடர்பும்இல்லை. ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி நிச்சயம் வெற்றிபெறும். அப்படி வெற்றி பெறும்போது நாட்டையோ அரசை நிர்வகித்த தலைவர்களையோ அல்லது இராணுவத்தையோ நாம் ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டோம்."- என்று அவர் மேலும் கூறினார்.

"நாட்டை விற்கும் கூட்டம் நாங்கள் அல்ல, எதிர்க்கட்சியினர் வெற்றி பெறுவதானால் அரச தலைவர்களை இராணுவத்தினரையோ சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வோம் என்ற கனவை சர்வதேச புலிகள் காணலாம். அப்படியான கனவு ஒரு போதும் நிறைவேறப் போவதில்லை என்பதை ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் என்ற ரீதியில் நான் உறுதியாகக் கூறுகின்றேன்."- என்றும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ற)



## வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் தேர்தலின்போது கடமைகளில்

கொழும்பு. நவ.26

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர் என்று தெரிவித்துள்ளார் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் போது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

ஆசிய தேர்தல் ஆணைக்குழு, தெற்காசிய தேர்தல் ஆணைக்குழு, ஐரோப்பிய தேர்தல் ஆணைக்குழு மற்றும் பொதுநலவாய நாடுகள் தேர்தல் ஆணைக்குழு என்பவற்றின் கண்காணிப்பாளர்கள் உட்பட வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் தேர்தல் நடைபெறும் காலங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும்"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

**சோதிடம் பார்க்கவில்லை**

சோதிடரின் ஆலோசனைக்கு அமைய தேர்தல் திகதியை தீர்மானிக்கவில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். அவ்வாறான குற்றச்சாட்டை முழுமையாக மறுப்பதாகவும் அவர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ற)

## நேபாளம் பயணமானார் ஜனாதிபதி

கொழும்பு. நவ.26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 18ஆவது சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றுக் காலை நேபாளத்துக்கு புறப்பட்டுச் சென்றார்.

சார்க் மாநாடு காத்மண்டுவில் நேற்று முதல் 27ஆம் திகதி வரை நடைபெறுகிறது. அதில் கலந்துகொள்ளவே ஜனாதிபதியும் அவரது பாரியாரும் லும்பினிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை- ஜனாதிபதி இந்திய பிரதமருடனும் அங்கு தனிப்பட்ட பேச்சு நடத்துவார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற)



## அரச சொத்துக்கள் கணக்கெடுப்பு

கொழும்பு. நவ.26

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரச அதிகாரிகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றைக் கணக்கெடுக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பான சுற்றறிக்கை சகல அரச திணைக்களங்களுக்கும் தேர்தல் ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



ஜனவரி 8ஆம் திகதி தேர்தல் நடவடிக்கைகளுக்காக அதிக அளவான அதிகாரிகள், வாகனங்கள் உத்தியோகத்தர்கள் தேவைப்படுவதால் இந்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அதேவேளை - நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத் தும் நடவடிக்கை ஆரம்பமான போதிலும் இன்றுவரை ஒரு கட்சி மாத்திரமே கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளது. (ற)

## ரஷ்ய போர்க் கப்பல் இலங்கையில்

கொழும்பு. நவ.26

ரஷ்யாவின் கடற்படை கப்பலான 'யாரோஸ்லேவ் முட்ரி' நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. குறித்த கப்பல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை இலங்கையில் தரித்து நிற்கும்.

126.6 மீற்றர் நீளத்தைக் கொண்ட குறித்த கடற்படைக் கப்பல் 4 ஆயிரத்து 480 தொன் கொள்ளளவைக் கொண்டுள்ளது. அதில் 210 கடற்படை உத்தியோகத்தர்கள் பணிபுரிகின்றனர்.

ரஷ்ய கடற்படை அதிகாரிகளுக்கும், இலங்கை கடற்படை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பு கடற்படை தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## உயிரச்சுறுத்தலே மைத்திரி மாறக் காரணம்

### சகோதரர் டட்லி சிறிசேனா விளக்குகின்றார்

யாழ்ப்பாணம். நவ. 26

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்ந்தும் இருந்திருந்தால், உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையே காணப்பட்டது. அதனால்தான் எனது சகோதரர் கட்சி மாறினார் - இவ்வாறு பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் டட்லி சிறிசேனா தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பிரதமர் பதவியை எனது சகோதரருக்கு வழங்காமையினாலேயே அவர் விலகிச் சென்றதாகச் சிலர் கூறுகின்றனர். அது பொய்யான தகவல். அவர் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்திருந்தால், அவரது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கும்.

அந்தக் கட்சியில் உள்ள புதுமையான அரசியல் முறைமை காரணமாக, ஏனைய உறுப்பினர்களும் உயிராபத்தான நிலையையே எதிர்நோக்குகின்றனர்.

எமது உடலில் குருதி உள்ள வரை இந்த வகையிலான செயற்பாடுகளுக்கு இடம் வழங்க முடியாது. அதனாலேயே மைத்திரிபால சிறிசேன தனது பாதையை மாற்றிக் கொண்டார்"- என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## மைத்திரி வழங்கிய நியமனங்கள் இரத்து

கொழும்பு. நவ.26

முன்னாள் சுகாதார அமைச்சரும் எதிரணியின் பொது வேட்பாளருமான மைத்திரிபால சிறிசேனவினால் அவர் பதவி விலகும் முன்னர் வழங்கப்பட்ட 800 சுகாதார திணைக்கள நியமனங்கள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

எனினும் புதிதாக பதவியேற்றுள்ள சுகாதார அமைச்சர் நேற்றுமுன்தினம் மீண்டும் ஆயிரத்து 800 பேருக்கு புதிதாக நியமனங்கள் வழங்கியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

நேற்று நியமனக் கடிதம் மைத்திரி மூலம் பெற்றவர்கள் கடமைக்குச் சென்று ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர் என்று சிங்கள நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ற)

## மின்சார சபைக்கு அதிகளவான ஆள்சேர்ப்பு

### தொழிற்சங்க இயக்கத்தின் செயற்பாட்டுக் குழுத் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு. நவ.26

இலங்கை மின்சார சபைக்கு 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க இயக்கத்தின் செயற்பாட்டுக் குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இந்த விடயம் தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னிச்சையான முறையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாகவும், அவற்றில் பெரும்பாலானவை இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான நியமனங்கள் அதிகளவில் வழங்கப்படுவதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் மின்சக்தி துறை பிரதியமைச்சர் பிரேமலால் ஜயரட்னவிடம் கேட்கப்பட்டபோது, நேர்முகப் பரீட்சைகளே தற்போது இடம்பெற்று வரும் நிலையில் அவர்களை பணியில் இணைத் துக் கொள்வது தொடர்பான தெரிவுகள் தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார். (ற)

## அச்சமூட்டும் குண்டுகள்

இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட மிகப்பெரிய வெடிகுண்டு பிரான்ஸில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் மெட்ரோ ரயிலுக்காக பள்ளம் தோண்டியபோது அங்கு 250 கிலோ எடையுள்ள வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள 300 இற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டனர்.



சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புப் படையினர் மிகவும் கவனத்துடன் செயல்பட்டு, சுமார் 2 மணி நேரத்திற்கு பிறகு அந்த வெடிகுண்டை செயலிழக்கச் செய்துள்ளனர்.
அங்கு உயிரிழப்பு ஏதும் நிகழாமல் இருந்த போதிலும், இந்தச் சம்பவம் பிரான்ஸ் மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## தூக்கமே வாழ்வு

ஒரு நாளில் 21 மணி நேரம் தூங்கும் அரிய வகை நோயால், பிரிட்டனைச் சேர்ந்த ஹெலன் வாட்டார்சன் என்ற 36 வயது பெண்மணி பாதிக்கப்பட்டுள்ளார்.
ஒரு நாளில் உள்ள 24 மணி நேரத்தில் சுமார் 21 மணி நேரம் இந்த பெண்மணி தூங்குகிறார். க்ளையின் லெவின் சிண்ட்ரோம் என்ற நோயே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் இவர் தூங்காமல் இருக்க மருந்துகள் உட்கொண்டாலும் அதிகபட்சமாக 3 மணி நேரம் மட்டுமே இவரால் விழித்திருக்க முடிகிறது. உலகில் இதுவரை க்ளையின் லெவின் சிண்ட்ரோம் என்ற இந்த அரிய வகை நோயால் ஆயிரம் நபர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
ஹெலன் எந்தவித வேலைகளும் செய்ய முடியாமல் ஒரே இடத்தில்தான் முடங்கிக் கிடக்கிறார். மேலும் ஹெலன் தற்போது தனது வேலையை விட்டுவிட்டு வீட்டில் தனது இரண்டு நாய்களுடன் தனியாக வாழ்ந்து வருகிறார்.
நான் எங்கும் வெளியில் செல்ல முடியாமல் அவதிப்படுகிறேன், நான் வாழ்வில் முக்கிய தருணங்கள் அனைத்தையும் இழந்து வருகிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

## சாகஸம் காட்டிய வாலிபர்

விமான நிலையத்தில் உள்ள பெண்களின் கழிவறையின் மேற்கூரையில் நிர்வாணமாக ஏற முயன்று கீழே விழுந்த வாலிபரை அமெரிக்க பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
அமெரிக்கா, லோகன் விமான நிலையத்தில் வைத்து விபரீத செயற்பாட்டில் அவர் ஈடுபட்டார். மேற்படி வாலிபர், பெண்களது கழிவறைக்குச் சென்று தனது ஆடைகளை அவிழ்த்துவிட்டு நிர்வாணமாக நின்றுள்ளார்.
பின்னர் அவர் கூரையை பிடித்து மேலே செல்ல முயன்று கீழே விழுந்துள்ளார். அதன் பிறகு அவர் 84 வயது தாத்தா ஒருவரையும் தாக்கியுள்ளார்.
அந்த இளைஞனைப் பொலிஸார் கைது செய்ய முயன்ற போது, பொலிஸாருடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
இதில் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. மிகுந்த போராட்டத்தின் பின்னர் ஒரு வழியாக அவ்விளைஞனை பொலிஸார் கைது செய்தனர்.
கழிவறையில் விழுந்ததில் காயம் அடைந்த இளைஞர் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிகிச்சைக்கு பிறகு அவர் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

## பணம் கொடுத்து படத்தை ஓட்டினேன்




'மு பு ஜாக்கிரதை' என்னும் குறும்படம் திரையிடல் மற்றும் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
குறும்படத்தை சந்துரு இயக்கி நடித்து திரையிட்டார். நிகழ்ச்சியில் 'பருத்தி வீரன்' சரவணன், நடிகை வடிவுக்கரசி உள்ளிட்ட திரையுலகத்தினரும் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் 'பவர் ஸ்டார்' சீனிவாசன் பேசும்போது, 'லத்திகா' திரைப் படம் உண்மையிலேயே பத்து நாள்கள் தான் ஓடியது. அந்தப் படத்தை 100 நாள்களுக்கு மேல் ஓட வைக்கலாம் என்று சொன்னார்கள். எப்படி என்று கேட்டேன். சாராயமும், பிரியாணி பொட்டலமும் போதும் என்று சொன்னார்கள். அப்படிக் கொடுத்து படத்தை 225 நாள் ஓட வைத்தேன். 100 ஆவது நாள் விழா கொண்டாடனும் என்று சொன்னார்கள். அதற்கும் செலவழிச்சேன்.
அதன் பின்னர், 'ஆனந்த தொல்லை' படத்தை தினமும் 8 ஆயிரம் ரூபா செலவு செய்தால், படத்தை எடுக்கலாம் என்று சொல்லி ஒருவர் வந்தார். அதன் பின்னர், தினமும் மூன்று லட்சம் ரூபா வரை செலவானது. அதிலும் நிறையத் தடங்கல். ஒரு வழியா படத்தை முடித்து வெளியிடத் தயாராகி விட்டேன். இந்த நேரத்தில் என்னைக் கைது செய்தார்கள். நான் எங்கேயும் ஓடி ஒளியவில்லை. கூப்பிட்டால் வரப்போகின்றேன்.
இப்பவும் என்னை நிறைய பேர் நடிக்கக் கூப்பிடுகிறார்கள். ஆனால், சம்பளத்தைக் கேட்டால் உங்களிடம் இல்லாத பணமா என்று கேட்கின்றார்கள். உண்மையிலேயே என்னிடம் பணம் இல்லை. அதனால் நடிக்க வாய்ப்புக் கொடுத்தால் கண்டிப்பா சம்பளமும் கொடுங்க, என்றார் சீனிவாசன்.

## சினிமா பிரவேசத்தில் கீர்த்தி



மானாட மயிலாட, நாளைய இயக்குநர் ஆகிய நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிக் கொண்டிருப்பவர் கீர்த்தி. மிகச் சிறந்த தொகுப்பாளினியாக மக்கள் மத்தியில் பெயர் எடுத்துள்ளார். இவருக்கு சின்னத்திரையில் நடிப்பதற்கு பல வாய்ப்புக்கள் தேடி வந்தும் அவற்றை அவர் கண்டு கொள்ளவில்லை. ஆனால் தற்போது சினிமாவில் நேரடியாக களமிறங்க முடிவு செய்திருக்கின்றார். இதற்காக பெற்றோரிடமும் அனுமதி வாங்கியுள்ளார்.
'சின்னத்திரையில் நல்ல தொகுப்பாளினி என்ற பெயரை வாங்கி விட்டேன். அடுத்து சினிமாவில் கவனம் செலுத்த முடிவு செய்துள்ளேன். முதலில் வீட்டில் சம்மதிக்கவில்லை. இப்போதுதான் அதற்கான சம்மத சமிக்ஞையை வழங்கியிருக்கின்றனர். நல்ல கதையும் ஒழுங்கான கதாபாத்திரமும் அமைந்தால் சினிமாவில் நிச்சயம் நடிப்பேன்' என்கின்றார் கீர்த்தி.

## டேய் இறக்கி விடுங்கடா.... நான் இனிக் குழப்படி செய்ய மாட்டேன்...



## கொஞ்சம் சிரிங்க பாஸ்...



"என் மனைவி கிளி மாதிரி.."
"அவ்வளவு அழகா..?.."
"இல்லை..பேசினதையே திரும்பத் திரும்ப பேசுவா.."

உலகத்தில் மிகச் சிறந்த காதல் ஜோடி,
செருப்பு மட்டுமே
ஒன்று இல்லை என்றால் மற்றொன்று
வாழவே வாழாது

## இவர்கள் சொன்னவை



மனைவியை வைத்து சூதாடிய மனிதர்களை நாயகர்களாக கொண்டாடும் இந்த இந்தியாவில் பெண்களுக்கு மதிப்பு எங்கிருந்து எதிர்பார்ப்பது.

நடிகர் கமல்

# வேலைக்குச் செல்லும் பெண்களா?





வேலைக்கு செல்லும் பெண்கள் கண்டிப்பாக ஆரோக்கியமான உணவுகளை எடுத்துக்கொள்வது அவசியம். ஏனெனில் வீட்டு வேலைகள், குழந்தைகளை பராமரித்தல், பயணம் என பல்வேறு வேளைகளில் பல மனி நேரங்களை செலவழிக்க வேண்டியிருக்கும். இதனால், அவர்களுக்கு பல்வேறு ஊட்டச்சத்துள்ள உணவு தேவைப்படும். எனவே, நோய்களைத் தவிர்க்க நன்றாக சாப்பிட வேண்டியது மிகவும் முக்கியமானது. நீங்கள் எடுத்துக்கொள்ளும் உணவுகளில் கண்டிப்பாக, பருப்பு, கீரை, முட்டை, மீன், நீர் போன்றவை இருக்க வேண்டும். இவை தான் உங்களுக்கான அத்தியாவசியமான உணவுப்பொருள்;கள். மற்ற உணவுகளை விட, இந்த உணவுகளில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

# ஆரோக்கியம் தரும் கீரைகள்

உடல் வளர்ச்சிக்கும், என்றென்றும் ஆரோக்கியத் துக்கும் கீரைகள், காய்கறிகள் மிகவும் அவசியம். வாரத்திற்கு மூன்று முறையேனும் கீரைகள் உட்கொள்ளும் போது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும், எனவே ஆரோக்கியத்துடன் வாழலாம்.







### பொன்னாங்கண்ணிக்கீரை

இதன் இளம் தளிர் பாகங்கள் உணவு மற்றும் மருத்துவத் துக்குபயன்படுகின்றன. இதனை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண் நோய்கள் நெருங்கவே நெருங்காது. கண் எரிச்சல், கண் கட்டி போன்ற நோய் களை குணமாக்குவதுடன் வாய் நாற்றம் மற்றும் வாய்ப் புண் களையும் குணமாக்குகிறது.

### அகத்திக் கீரை

அகத்திக்கீரையில் 8.4 சத விகிதம் புரதமும், 1.4 சத விகிதம் கொழுப்பும், 3.1 சதவிகிதம் தாது உப்புகளும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது தவிர மாவுச்சத்து, இரும்புச் சத்து, விற்றமின்; ஏ ஆகியவையும் உள்ளன. உடலின் உஷ் ணத்தை தணிக்கும் இந்த கீரை, மூளையை பலப்படுத்தும் சக்தி கொண்டது. தினமும் இந்தக் கீரையை சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் படிப்படியாக குறையும்.

### தூதுவளை

வேர் முதல் பழம் வரை அனைத்து பாகங்களுமே மருத்துவ குணம் கொண்ட இந்த தூதுவளை இலையை பிழிந்து எடுத்த சாற்றை 1 அல்லது 2 துளி காதில் விட்டால் காதுவலி மற்றும் காதில் சீழ் வடிதல் போன்றவை குணமாகும். ஆஸ்துமா, மூச்சுத்திணறல் உள்ளவர் களுக்கு மிகச் சிறந்தது.

# நீரிழிவு நோயாளிகளுக்கு

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகளைக் கூட தாக்க ஆரம்பித்து விட்டது நீரிழிவு நோய். இரத்தத்தில் அதிக அளவில் குளுக்கோஸ் சேரும் போது, அதை நீரிழிவு நோய் என்கிறோம். கணையத்திலிருந்து இன்சுலின் சுரப்பதில் மந்தமோ அல்லது சுரந்த இன்சுலின் உடலில் வேலை செய்வதில் மந்தமோ அல்லது இரண்டுமோ சேர்வதினால், இந்த நோய் வரக்கூடும். அடிக்கடி சிறுநீர் கழிப்பது, அதிக தாகம், அதிகப் பசி, உடல் எடை இழத்தல், அதிக சோர்வு, பார்வை மங்கல், அடிக்கடி நோய்க்கிருமிகள் தொற்றுவது, உடற்காயங்கள் மெதுவாக ஆறுவது மற்றும் உள்ளங்கை அல்லது பாதங்கள் மரத்துப்போதல் ஆகியவை. இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்து வரை பார்ப்பது நலம், அறிகுறிகள் ஏதும் இல்லாமல் கூட நோய் தாக்கலாம். எனவே வரும் முன்னும், வந்த பின்னர் தொடர் சோதனைகளின் மூலம் உடலை கவனித் துக் கொள்வது அவசி யம். வாழைப்பூ,



வாழைத்தண்டு, முட்டைக்கோஸ், கத்திரிப்பிஞ்சு, வெண்டைக்காய், முருங்கைக்காய், புடலங்காய், பாகற்காய், சுண்டைக்காய், கோவைக் காய், அவரைப் பிஞ்சு. இந்த காய்கறிகள் அனைத்தும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டவை, இவற்றை பச்சடியாகவோ, கூட்டாகவோ செய்து சாப்பிடலாம். பொன்னாங் கண்ணிக் கீரை, சிறுகீரை, அரைக்கீரை, வெந்தயக் கீரை, முசு முசுக்கை கீரை, வல்லா ரைக் கீரை, மணத்தக் காளிக் கீரை, கொத் தமல்லிக் கீரை, கறிவேப்பிலை. நீரிழிவுநோய் உள் ளவர்கள் தினமும் ஒரு கீரையேனும் சாப்பிட வேண்டும். நீரிழிவைக் கட்டுப்படுத்தும் கீரைகள் அனைத்தையும் சூப்பாகவும் செய்து அருந்தலாம்.



சீனி, குளுக்கோஸ், இனிப்புப் பலகாரங்கள், கேக், சொக்லேட், ஐஸ்கிரீம், வெல்லம், உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, மாம்பழம், வாழைப்பழம், சப்போட்டா, குளிர்பானங்கள். கரட், பீட்ரூட் குறைந்த அளவு மாதம் இருமுறை சாப்பிடலாம்.

# ஓ, மனமே மனமே



கவலையையும், மன் வேதனையையும் அனுபவிக்கும் போதெல்லாம் மனம் தளர்வதும், சோர்வடைவதும் இயல்பான ஒன்றுதான். ஆனால் மன அழுத்தம் அடையும் போது இந்த சோர்வும் கவலையும் இடைவிடாது நீடித்து விடுகிறது. அல்லது இந்த கவலையும், சோர்வும் அடிக்கடி அன்றாட வாழ்கையில் அதிகரித்து குழப்பமடையச் செய் கின்றன. தூக்கக்குழப்பம், கடும் களைப்பும் சோர்வும், காலையில் எழுந்திருக்க முடி யாமை, பசியின்மை, தன்னைப்பற்றிய தாழ்வு மனப்பான்மை, தான் எதற்கும் பயனில்லை என்று தோன்றுதல் போன்ற இதன் அறிகுறிகளாக இருக்கின்றன. ஆனால் இதில் நீங்கள் முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், இது போன்ற மனோ நிலையுடன் ஒருவர் தொடர்ந்து இருக்கபோவதில்லை. அவரைச்சுற்றி இருக்கும் சூழ்நிலை மாறிவிட்டால், இந்த மன அழுத்தம் மாறிவிடும். அல்லது அவர் நினைத்தது நடந்துவிட்டால் அதன் பின்னர் அவருக்கு மன அழுத்தம் என்பது வராது. சிறுவயதில் ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்ற விரக்தியிலும் சிலருக்கு இந்த மன அழுத்தம் ஏற்படுகிறது. மன அழுத்தம் பொதுவாகவே சமூகத்தில் காணப்படக்கூடிய சாதாரண நோய் நிலைதான். இளம் வயதில், குறிப்பாக ரத்த அழுத்தம் அதிகமான நேரத்தில் இந்த மன அழுத்தம் ஏற்படுகிறது. நம்மில் ஐந்தில் ஒருவருக்கும் இந்த மன அழுத்தம் ஏற்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே இது பற்றி அச்சப்படவோ, வெட்கப்படவோ, சங்கடப்படவோ கூடாது. இதனைப் புறக்கணிக்கவும் கூடாது

# அழகு தரும் அதிக வியர்வை!

வியர்வையால் சில நன்மைகளும் மனிதனுக்கு. கிடைக்கத்தான் செய்கின்றன. சிலருக்கு அதிக அளவில் வியர்க்கும். குறிப்பாக குண்டாக இருப்ப வர்களுக்கு தான் அதிகம் வியர்க்கும். அதிகம் வியர்த்தால், எப்போதும் காற்றாடிக்கு அருகிலேயே உட்காராமல் சற்று வியர்க்கவும் வழிவிடுங்கள். அதேசமயம் தண்ணீர் அதிகம் குடிக்கும் பழக் கத்தையும் கொள்ளுங்கள். ஏனெ னில் வியர்வை அதிகம் வெளி யேறினால், உடலின் நீர்ச்சத்தா னது குறைந்துவிடும். வியர்வை அதிகம் வெளியேறினால், உடலின் நோயெதிர்ப்பு சக்தியானது ஊக்கு விக்கப்படும். அதனால் தான் காய்ச்சலின் போது வியர்த்தால், காய்ச்சலானது குணமாகிவிடு கிறது. உடற்பயிற்சியின் போது வெளிவரும் வியர்வையானது இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. அதிலும் நடைபயிற்சி அல்லது வேறு ஏதேனும் உடற்பயிற்சி செய்தால், இதயமானது வேகமாக இரத்தத்தை அழுத்துவதால், உடல் முழுவதும் இரத்த ஓட்டம் சீராக இருந்து. உடலின் மெட்டபாலிசமானது அதிகரித்து, உடல் எடை குறைய வழிவகுக்கிறது. வியர்க்கும் போது சருமத்துளைகளானது விரிவடைந்து, அதன் வழியே வியர்வை வெளியேறுவதால், சரு மத்துளைகளில் தங்கியுள்ள அழுக்குகள் முற்றி லும் வெளியேறி, சருமத்தை பொலிவாகவும், மென்மையாகவும் மாற்றுகிறது. ஆய்வு ஒன்றில் உடற்பயிற்சியில் ஈடுபடும் போது நன்கு வியர் வையானது வெளியேறினால், மன அழுத்தம், சோர்வு போன்றவை நீங்கி, மனநிலையானது புத்துணர்ச்சி அடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உடற்பயிற்சியின் போது மூளையில் உள்ள கெமிக்கலானது ஊக்குவிக்கப்பட்டு, ஒருவரின் மனதை சந் தோஷமாகவும், அமைதியாகவும் வைக்க உதவுகிறது. உடற் பயிற்சியை தினமும் தொடர்ந்து செய்து வந்தால், சிறுநீரக மானது சீராக செயல்பட்டு, சிறுநீரக கற்கள் உருவாகும் வாய்ப்பு குறையும் என்று ஆய்வு ஒன்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது.



# சத்துக்கள் நிறைந்த முருங்கைக் கீரை



விற்றமின்களும், தாது உப்புகளும் அடங்கிய முருங்கை கீரை எண்ணற்ற நோய்களைக் குணப்படுத்தக்கூடியது. கண் நோய்களுக்கு மருந்தாக இருப்பதுடன், இரத்த சோகையையும் தடுக்கிறது. இதனைக் கொண்டு செய்யப்படும் முருங்கைக் கீரை கட்லெட் சுவையாக இருப்பதுடன் ஆரோக்கியம் நிறைந்தது. கரட், பீன்ஸ், முட் டைக்கோஸ், உருளைக்கிழங்கு போன்றவற்றை பொடியாக நறுக்கி, நறுக்கிய காய்கறிகள் மற்றும் முருங்கை கீரையை வேக வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் சோள மாவு, கம்பு மாவு, உப்புப் போட்டு அதில் வேக வைத்த காய்கறிகளை போட்டு சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து கொள்ளவும். பிறகு தோசைக் கல்லை அடுப்பில் வைத்து கல் சூடானதும், தேவையான வடிவில் தட்டிப்போட்டு வேக வைத்து எடுத்தால் சுவையான கட்லெட் தயார். இதனை சாப்பிடுதல் அதிக சத்துக்களைத்தரும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# எய்ட்ஸ் குறித்து விரைவில் விழித்தெழுவது அவசியம்

ஜனாதிபதித் தேர்தல் பரபரப்புகளுக்கு மத்தியில் தமிழர்களை நெருங்கிவரும் மிகப் பெரும் பேராபத்துக் குறித்து கவனிக்க மறந்துவிட்டோம். எய்ட்ஸ் என்ற ஆள்கொல்லி நோய்க்கு தமிழர்களைக் காவு கொடுக்கப்போகிறோமா என்ற கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

எய்ட்ஸ் நோய் பீடித்தவர்களின் எண்ணிக்கை இந்த வருடத்தில் திடீரென அதிகரித்திருக்கிறது. இது யாழ். போதனா வைத்தியசாலையால் கண்டறியப்பட்ட எண்ணிக்கை மட்டும்தான். இது போன்ற விடயங்கள் எப்போதுமே பனிக் கட்டி மலையைப் போன்றதுதான் என்பதை எல்லா வல்லுநர்களுமே ஏற்றுக்கொள்கிறார்கள். உண்மையான நோயாளர்களின் எண்ணிக்கையும் நோய் காவிகளின் எண்ணிக்கையும் இதைவிடப் பல மடங்கு அதிகம் என்பது மருத்துவ வட்டாரங்களால் சந்தேகத்துக்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இப்போது கண்டறியப்பட்டுள்ள நோயாளிகள் கூட, தமக்கு எய்ட்ஸ் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் பலருடன் பாலியல் உறவுகளை வைத்திருந்தார்கள் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எனவே இவர்கள் மூலமாக வேறு சிலருக்கும் அவர்கள் மூலமாக மற்றும் சிலருக்கும் என எச்.ஐ.வி. கிருமி மேலும் பரவுவதற்கான ஆபத்து சூழ்ந்துள்ளது.

இது மிகவும் ஆபத்தானது. போர் முடிந்த கையோடு இங்கு எய்ட்ஸ் நோயைத் திட்டமிட்டுப் பரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று மருத்துவத்துறையைச் சேர்ந்த ஓரிருவர் முன்னர், கடந்த பல வருடங்களாகவே எச்சரிக்கை செய்து வந்திருக்கின்றனர். ஆனால் அவர்களது கருத்துக்கள் எள்ளி நகையாடப்பட்டனவே அன்றி, அதன் மீது தீவிர கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இப்போது திடீரென அதிகரிக்கும் புள்ளிவிவரங்கள், அவர்கள் கூறியவை உண்மைதானோ என்ற சந்தேகத்தை - பயத்தை - ஏற்படுத்துகின்றன.

இதன் உண்மையை - ஆழத்தைக் கண்டறிவது மிகக் மிகக் கடினமானது என்கிறது மருத்துவத் துறை. நோயாளி தானாக விரும்பி தகவல்களைத் தெரிவிக்காதவரையில் உண்மையைத் தேடுவது கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பானது. என்றாலும் உண்மையைத் தேடியறிவதும் அதற்கான தடுப்பு - முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இப்போது அவசியமும் அவசரமுமாகும்.

நீண்ட காலப் போர், உளத் தாக்கங்கள், விவசாய உற்பத்திகளுக்கு அளவுக்கதிகமாகப் பயன்படுத்தப்படும் அதிக கிருமிநாசினிகள் என்பவற்றால் வடக்கில், இனப்பெருக்கத்துக்கான கருவள உற்பத்தி மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்ற நிலையில், எய்ட்ஸ் தாக்கமும் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்துவதற்கு முன்னதாக நாம் விழித்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

வடக்கு மாகாண சபையும், வடக்கிலுள்ள மருத்துவத் துறையும் விரைந்து செயலில் இறங்கி இந்த விடயத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் காப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

வருமுன் காப்பதே சிறந்தது. வந்த பின் வருந்துவதில் பயனில்லை.



# பெண்ணுரிமைக்கான நாள்

சோபனா

பெண்கள் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் காலம் காலமாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. இந்த வன்முறைகளில் இருந்து பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பல்வேறு இடர்களைச் சந்தித்து வருகிறார்கள். பெண்களின் பாதுகாப்பாக இருக்கட்டும். அல்லது குடும்ப கௌரவமாக இருக்கட்டும் இவையே தடை போடும் காரணிகளாக முன்னணியில் உள்ளன.

குடும்ப வன்முறைகளின்போது பெண்கள் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளை வெளியில் கொண்டு வர முனைவதில்லை. அங்கு குடும்பக் கௌரவம் முக்கியமாக இருப்பதால் ஆண்களால் இழைக்கப்படும் வன்முறைகளை மறைத்து பகட்டு வாழ்க்கை வாழ ஆரம்பித்து விடுகிறார்கள்.

குடிபோதையில் கணவனால் இழைக்கப்படும் வன்முறைகளையோ, அல்லது இன்னொரு ஆணால் பாலியல் ரீதியாக ஏற்படுத்தப்படும் வன்முறைகளையோ வெளிப்படுத்த முடியாத நிலையில் அவர்கள் அடங்கி ஒடுங்கிப் போவார்கள். மாறாக அவற்றை வெளிக் கொணர நினைக்கும்போது பெண்களுக்கு கிடைக்கப் போவது அவப் பெயர் மட்டுமே. அங்கு தான் ஆணாதிக்கம் தலை தூக்கி நிற்கிறது.

ஆனாலும் பல பெண்கள் தடைகளையும் தாண்டி தமது நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காது தம்மை பாதுகாத்துக் கொள்கிறார்கள்.

தற்போது பெண்கள் வீட்டுக்குள் தான் அடங்கி இருக்க வேண்டும் என்ற நிலையை மீறி பெண்கள் தமக்கான ஒரு நிலையைத் தக்க வைத்துள்ளார்கள்.

> இன்று உலகளாவிய ரீதியில் பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்திப் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் குரல் கொடுத்து வருகிறார்கள். பெண் என்பவள் வெறும் போகப் பொருள் என்ற நிலையை மாற்றி அவர்களுக்கு மதிப்பளித்து சாதாரண மனிதர்களுக்குரிய உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே இதன் நோக்க மாகவுள்ளது.
> எனவே இன்றைய நாள்களில் பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நாமும் பங்குதாரர்களாக மாற வேண்டும். இல்லாவிடில் அவர்களுக்கு இழைக்கப்படும் வன் முறைகளைத் தட்டிக் கேட்டு அவர்களது உடல் உள ரீதியான ஆரோக்கியத்துக்குக் கைகொடுக்க வேண்டும்

இதன் காரணமாகப் பெண்களுக்குக் கிடைக்கும் அவப் பெயர்கள் மற்றும் இழிவுபடுத்தல்கள் குறைவடையப் போவதும் இல்லை. காரணம் அவள் பெண். இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற தான்தோன்றித்தனமாக மூட நம்பிக்கையான தமது நிலைப்பாட்டை பெண்கள் மீது திணித்து அவர்களை அடக்கி ஆளும் நிலையில் தான் ஆண் சமூகத்தினர் உள்ளனர்.

உயர் பதவிகளில் இருந்தால் அங்கு அவளது பதவிக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. அதற்குப் பின்னால் காது மூக்கு வைத்த புதிய கதைகளை உருவாக்கி அவளைக் கீழே தள்ளும் முயற்சியில் அவர்கள் குறியாக இருப்பார்கள். காரணம் அவள் பெண். ஆண்கள் தான் உயர்ந்த நிலையிலும் எல்லாவற்றிலும் முன்னணியிலும் இருக்க வேண்டும் என்ற வறட்டுக் கௌரவம் அவர்களை விட்டு வைக்கப்போவதில்லை.

உயர் பதவிகளில் உள்ள பெண்கள் மீதான வன்முறைகள் எதுவாக இருந்தாலும் அதனைப் பெண்கள் தங்கள் வல்லமையால் மறைத்து அதையும் தாண்டி சாதிக்கும் முயற்சியில் சில பெண்கள் ஈடுபடாமல் இல்லை. ஆனாலும் ஆண் சமூகத்துக்குப் பயந்து அவற்றை விட்டுக் கொடுத்து கீழ்ப்படிந்து போகும் பெண்களும் எம்முள் உள்ளனர்.

கல்வியால் உயர் நிலையை அடைந்த பெண்கள் உயர் பதவிகளில் ஈடுபடுகின்றனர். ஆனால் கல்வியில் பின்தங்கிய பெண்கள் குடும்பப் பெண்களாக மாறிய பின்னர் அவர்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளைத் தட்டிக் கேட்க முடியாதவர்களாக அடங்கிப் போய்விட நேரிடுகிறது.

இதனால்தான் பெண்களுக்கான கல்வி முக்கியத்துவத்தை பல் வேறு கற்றுத் தேர்ந்தவர்கள் வலி யுறுத்திக் கூறியுள்ளனர். பெண்கள் கல்வியில் உயர் நிலையை அடையும் போது தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கான அறிவையும் துணிவையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதே அதற்கான காரணம்.

இன்று உலகளாவிய ரீதியில் பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்திப் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் குரல் கொடுத்து வருகிறார்கள். பெண் என்பவள் வெறும் போகப் பொருள் என்ற நிலையை மாற்றி அவர்களுக்கு மதிப்பளித்து சாதாரண மனிதர்களுக்குரிய உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே அதன் எதிர்பார்ப்பு.

எனவே இன்றைய நாள்களில் பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களைப் பாதுகாப்பதில் நாமும் பங்கு தாரர்களாக மாற வேண்டும். இல்லாவிடில் அவர்களுக்கு இழைக் கப்படும் வன்முறைகளைத் தட்டிக்கேட்டு அவர்களது உடல் உள ரீதியான ஆரோக்கியத்துக்குக் கைகொடுக்க வேண்டும்.

தனியாகப் பெண்களால் மட்டும் அவர்களுக்கான உரிமைகளை வென்றெடுத்துவிட முடியாது. ஆண்களும் இதற்குத்துணையாக இருந்து சமுதாயத்தில் பெண்களுக்கான மதிப்பை வழங்க ஒன்று கூட வேண்டும் என்பதே இன்றைய தேவையாகவும் உள்ளது. ஆண்கள் மனதில் பெண்கள் தொடர்பில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகும். அவர்களுடைய மனதில் மாற்றம் ஏற்படும்போது ஓரளவுக்கேனும் பெண்கள் தமக்கெதிரான வன்முறைகளில் இருந்து பாதுகாக்கப்படுவர்.

# கல்லறை வீரனே உமக்கொரு மடல்



கார்த்திகை பூக்களே
கண் திறந்து பார்ப்பீரா
கல்லறைப் பூக்களே
வந்தொருமொழி சொல்வீரா
திசைகள் முட்டும்
படைகள் கொண்டு
தீ பூசினார்-உம் மேனியில்
திருநீறாகினீர் தமிழர் நெற்றியில்
தலைவனின் சிந்தையில்
சந்தனம் ஆகி
செந்தணல் மீது நடந்தீரே
பைந்தமிழ் அதனை
உயிராய் கொண்டீரே
கார்த்திகைப் பூக்களே
எங்கள் கல்லறைத் தெய்வமே!
உங்களோடாகி
எல்லையில் நின்றவர்
எல்லை வரையும் உங்களோடு
ஏகின எங்களை
வந்தொருதரம் பாரீரோ
வந்தொரு மொழி பேசீரோ

தையிட்டி வளவன்

# சூரியக் குஞ்சுகள்



விடியலைத் தேடிய
சூரியக் குஞ்சுகள்
வித்ததாய் மண்ணினுள்
நித்திரை செய்கையில்
முடிவில்லை தேடலும்
முளைவிடும் தினந்தினம்

குஞ்சுகள் கொஞ்சியோர்
கூட்டமாய் மாறியும்
நெஞ்சினில் கதிரையின்
நேசத்தை வளர்த்துமே
விஞ்சியே பேசுவார்
வீண்கதை காதினில்!

சூரியக் குஞ்சுகள்
காரியம் செய்தனர்
பாரினில் எம்துயர்
பாட்டதாய் எழுதினர்
வீரியம் கொண்டுமே
விடியலைக் காட்டினர்

குழம்பிய ஏரியில்
கூடியே மீன்பிடி
பழங்கதை பேசியே
பல்லக்குப் பவனிகள்



களம்பல கண்டோரை
காலத்தில் ஏய்ப்பதா?

உதிரத்தை உடலதை
உரமதாய்த் தந்தவர்
உணர்வினை உறவினை
உன்னதமாய் எண்ணி
துதித்திடத் தீபங்கள்
துளிர்விடும் நாளெப்போ?

சூரிய நிலா



இது மரநடுகை மாதம்

# காடுகளும் கல்வியும்

செ.செல்வராஜா

வீட்டிலுள்ளபோது அல்லது வெளியில்போய் விட்டு வந்தவுடன் இளந் தலைமுறையினர் கரிசனை காட்டுவது தொலைக் காட்சித் திரை ஒன்றில்தான்.

நல்ல ஒரு பிரஜையை உருவாக்குவது தான் முன்னைய கல்வித் திட்டத்தின் நோக்கமாக உலகம் தழுவிய ரீதியில் அமைந்திருந்தது. பெண்கள், சிறுபான்மையினர், குழந்தைகள் ஆகியோரை எவ்வாறு மதிக்கின்றோம், என்பதற்கு மேலாக தாவரங்களையும், நீர் வாழ் உயிரினங்களையும், புவியமைப்பையும், உயிரியல் முறைமையையும், உயிரியல் பன்மைத்துவத்தையும் நாம் எவ்வாறு நடத்துகின்றோம் என்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். அந்த வகையில், மேற்கூறப்பட்ட விடயங்களில் சமூகம் எத்தகைய மேம்பாட்டைச் செலுத்துகிற தென்பதில், கல்வியும் பயிற்சிகளும் வழங்கி நல்ல வதிவிடகாரரை resident உருவாக்க வேண்டும்.

சமூகத்தில், தனது சக உறுப்பினர்களுக்காக மட்டுமன்றி, மரங்கள், பூச்சிகள், மிருகங்கள் மற்றும் மீனினங்கள் போன்றவற்றுக்காகவும் உழைக்கக் கூடிய ஒருவரே நல்ல ஒரு வதிவிடக்காரன் ஆவார்.

சகல வகுப்புத் தர மாணவர்களுக்கும், திடமான கற்றல் அனுபவங்களை வழங் கத்தக்கதாக காடுகள் உள்ளன. வகுப்பறையில் அமர்ந்து கவனிப்பதனை விட, பார்த்தல், அவதானித்தல், முகர்தல், சுவைத்தல் போன்ற உண்மையான புலன் நுகர்ச்சி மூலம் காடுகளில் நிறையக் கற்றுக் கொள்ளமுடிகின்றது. இயற்கையு டனான உறவினை நாம் அங்குதான் உணர்ந்து கொள்ள முடியும். தற்கால சுற்றாடல்சார் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் அங்குதான் பெற்றுக்கொள்ள இயலும். அழகின் அதிசயங்களையும் அங்குதான் காண முடியும்.

மழலைப் பருவத்தில், வகுப்பறைகளில் கட்டுண்ட மாணவர்களைவிட, மழையிலும் வெயிலிலும், வெளியே இயற்கையான இடங்களில் விளையாடிக் கற்ற மாணவர்கள் வளர்ந்ததும் உடல், உள ரீதியாக திடமாக இருப்பதுடன், மகிழ்வுடையோராகவும், சம நிலை சமூக மனவெழுச்சி கொண்டவர்களாகவும் உள்ளதை ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. அந்த வகையில் காடுகள் உயிர் இருப்பிற்கு உதவுதற்கு மேலாக, நல்ல ஒரு பாடசாலை யாகவும் அமைகின்றது.



# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்



(நேற்றைய தொடர்ச்சி...)

ஸ்டீவ் வாவ் அடுத்த டெஸ்ட் போட்டியில் நன்றாக ஆடிக்கொண்டிருந்த போது சில வார்த்தைகளைச் சொல்லிக் கவனத்தைத் திருப்பினார். ஒரு பந்தில் அடித்துவிட்ட ரன் ஓடிய ஸ்டீவ் வாக்கை நோக்கி பயந்து அந்தப் பக்கம் போகிறீர்களே என்கிற தொனியில் சச்சின் கிண்டலடிக்க வாவ் கோபமுற ஆரம்பித்தார். ஹர்பஜன் வீசிய பந்து அவர் காலில் பட எல்பிடபிள்யூ அப்பீலை ஹர்பஜன் செய்யக் கவனம் சிதறியிருந்த ஸ்டீவ் வாவ் பந்தைக் கையால் தொட்டு நகர்த்தினார். பந்தைக் கையால் கையாண்ட குற்றத்தைச் சொல்லி அவரை அவுட்டாக்கினார்கள். அந்தப் போட்டியில் ஒன்பதாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ஹர்பஜன் மற்றும் சமீர் திகே அணி வெற்றி பெறுவதைத் திக் திக் தருணங்களோடு உறுதி செய்தார்கள். உலகச் சாம்பியனை டெஸ்ட் தொடரில் வீழ்த்தி சாதித்த இந்திய அணி, அடுத்து நடந்த ஒருநாள் போட்டித்தொடரில் ஸ்டீவ் வாவ் வந்தபோது மிட் விக்கெட் களத் தடுப்பாளரிடம் இங்கு தான் ஸ்டீவ் வாவ்வை நான் அவுட் ஆக்கி காண்பிப்பேன் என்று சச்சின் சவால் விட இது ஒன்றும் உன்னுடைய தோட்டமில்லை தம்பி என்று வாவ் பதில் சொன்னாலும் அவரது பந்து வீச்சில் மிட்விக்கெட்டில் கேட்ச் கொடுத்து அவுட் ஆனார் ஸ்டீவ் வாக்.

மேற்கிந்திய தொடரில் நன்றாக ஆடிக்கொண்டிருந்தபோது ரன் ஓடுகையில் க்ளிக் என்று சத்தம் கேட்க சச்சின் கவலைப்படாமல் ஆடிய பின்னர் பிஸியோவிடம் காலைக் காண்பித்தார். அப்பகுதி உடைந்திருந்தாலும் அதைச் சுற்றிக்கொண்டு இறுதிப்போட்டியில் ஆடும்வரை என் காலின் நிலைவரம் என்னவென்று சொல்லவேண்டாம் என்று வேண்டிக்கொண்டார் சச்சின். அங்கே டக் அவுட் ஆனார். எலும்பு சேதமாகி இருந்ததால் அறுவைச் சிகிச்சை தேவை என்றார்கள். ஆனால், அது கிரிக்கெட் வாழ்க்கையையே பாதிக்கும் என்கிற சூழலில் டொலக்கியா என்கிற மருத்துவர் சச்சினை மீட்டார்.

**சேதப்படுத்திய பந்து என்று சேதாரம் செய்யப் பார்த்த குற்றச்சாட்டு**

தென் ஆபிரிக்க அணியை அவர்கள் மண்ணில் எதிர்கொண்டபோது மகாயா நிட்டினியின் பந்தின் வேகத்தைக் கணித்து ஆடும் பாணியைத் துவங்கினார். அது பவுண்டரி, சிக்ஸர் என்று பறந்து 155 ரன்களைப் பெற்றுத் தந்தது. பந்திலிருந்த புல்லை நீக்கப் போய் பந்தைச் சேதப்படுத்தியதாக அப்பீல் செய்ததாகப் பல்வேறு குற்றச்சாட்டுகளை அபாண்டமாக மைக் டென்னிஸ் வைத்ததாகவும், ஐ.சி.சி. எந்த நடவடிக்கையும் எடுக்காமல் போனாலும் தென் ஆபிரிக்கா மற்றும் இந்திய கிரிக்கெட் வாரியங்கள் அவரை அடுத்தப் போட்டிக்கு நடுவராக இருக்க விடவில்லை. ஐ.சி.சி. அப்படி நடந்த டெஸ்ட் போட்டி செல்லாது என்று அறிவித்தது. இப்படியொரு குற்றச்சாட்டை ஏன் அவர் விசாரிக்காமல் வைத்தார் என்பது புரியவேயில்லை. அதைத் தவிர்த்திருக்கலாம், இத்தனை கசப்பு உண்டாகியிருக்காது என்கிறார் சச்சின். (தொடரும்)

# எந்தச் சூழ்ச்சிக்கும் நாம் அடிபணியமாட்டோம்

## மம்தா பானர்ஜி காட்டம்

மேற்கு வங்கத்தில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதில் இருந்து எந்தச் சூழ்ச்சி மூலம் எங்களை தடுத்து நிறுத்த முடியாது என்று அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி காட்டமாகத் தெரிவித்துள்ளார்.



சராதா சிட்பண்ட் ஊழல் தொடர்பாக திரிணமூல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ரின்ஜாய் போஸ் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பா.ஜ.கவுக்கு எதிராக மம்தா தீவிர தாக்குதல் நடத்தி வருகிறார்.

இந்தநிலையில் மேற்கு வங்க மாநிலம் வடக்கு பர்கானாஸ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மம்தா பேசியதாவது:

"எங்களுக்கு எதிராக பா.ஜ.க சூழ்ச்சி செய்து வருகிறது. மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகள் செய்வதில் இருந்து எங்களை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.

மருந்துகளுக்கு நியாய விலைக் கடை தொடங்கிய முதல் மாநிலம் மேற்கு வங்கம். அரசு மருத்துவமனைகளில் இருந்த கட்டண விடுதி இலவச விடுதிகளாக மாற்றப் பட்டுள்ளன. பெண் கல்வியை ஊக்குவிக்கவும் இளம்வயது திருமணத்தைத் தடுக்கவும் கன்னியாஸ்திரி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமும் நாட்டில் முதல்முறையாக இங்குதான் தொடங்கப்பட்டுள்ளது'. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பழிவாங்கும் செயலில் ஈடுபட்டுள்ளதாக கடந்த சனிக்கிழமை குற்றம் சாட்டிய மம்தா, மத்திய அரசுக்கு தைரியமிருந்தால் மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்தட்டும் என்று சவால் விடுத்தார். (ரி)

## சீனாவுடன் பேச இந்தியப் பிரதிநிதி அஜித் தோவல் நியமனம்

சீனாவுடனான எல்லைப் பிரச்சினை குறித்துப் பேச்சு நடத்த இந்தியாவின் சிறப்பு பிரதிநிதியாக அஜித் தோவல் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் சீனாவின் யாங் ஜியாச்சியுடன் பேசி , இரு நாடுகளுக்கு இடையேநிலவும் 3,500 கி.மீ.நீள்மான, எல்லைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சி செய்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ரி)

# மன்மோகன் சிங்கிடம் ஏன் விசாரணை நடத்தவில்லை?

## நிலக்கரி சுரங்க முறைகேடு வழக்கில் டில்லி நீதிமன்று சிபிஐயிடம் கேள்வி

டில்லி, நவ.26



நிலக்கரி சுரங்க முறைகேட்டு வழக்கில், அந்த இலாகாவை வைத்திருந்த அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் விசாரணை நடத்தாதது ஏன்? என்று சி.பி.ஐ.யிடம் கேள்வி எழுப்பியுள்ளது டில்லி நீதிமன்றம்.

2014 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28 ஆம் திகதி பிர்லா மற்றும் முன்னாள் நிலக்கரிச் செயலர் பரக் மற்றும் சிலர் மீதான வழக்கை முடித்துக் கொள்வதான அறிக்கையை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது.

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு வழக்கில் தொழிலதிபர் குமார மங்கலம் பிர்லா ஆகியோர் மீதான வழக்கை அவசரமாக முடிக்க வேண்டிய அவசியம் என்ன என்று சி.பி.ஐயிடம் சிறப்பு நீதிமன்றம் ஏற்கெனவே கேள்விகளைஎழுப்பியிருந்தது.

இந்தநிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப் போது நீதிபதிகள், நிலக்கரிச் சுரங்க முறைகேடு வழக்கில், அத்துறை சார்ந்த முன்னாள் அமைச்சரிடம் சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டதா? இந்த விவகாரத்தில் நிலக்கரித் துறை அமைச்சரிடம் விசாரணை நடத்த வேண்டியது அவசியம் என்று சி.பி.ஐ. கருதாதது ஏன்? இந்த ஊழல் தொடர்பாக தெளிவான ஒரு நிலைஏற்பட முன்னாள் அமைச்சரிடம் விசாரணை நடத்தப்படுவது அவசியம்என்றுசி.பி.ஐ. ஏன் உணரவில்லை? முன்னாள் பிரதமர் அலுவலக அதிகாரிகளிடம் இது தொடர்பாக விசாரணை மேற் கொள்ளப்பட்டதா? என்று சரமாரியாக கேள்விகளை எழுப்பினர்.

நிலக்கரிச் சுரங்கத்துறை முன்னாள் பிரதமர் மன் மோகன் சிங்கின் வசம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மன்மோகன் சிங் பெயரை நேரடியாக குறிப்பிடாமல், சி.பி.ஐ. நீதிமன்றம் கேள்விகளை முன்வைத்துள்ளது.

நீதிமன்றக் கேள்விகளுக்கு பதிலளித்த சி.பி.ஐ விசாரணை அதிகாரி, பிரதமர் அலுவலக அதிகாரிகளிடம் விசாரணை நடத்த அனுமதிக்கப்பட்டதே தவிர பிரதமரிடம் விசாரணை மேற்கொள்ள எங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றார்.

அதுதவிர, வழக்கின் விசாரணைக் குறிப்பை முத்திரையிடப்பட்ட உறையில்அனுப்பி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த வழக்கில், பிர்லா நிறுவனத்திற்கு சொந்தமான ஹிண்டால்கோ நிறுவனத்தின் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு வழங்குமாறு கோரிய மனு குறித்து விவாதித்த ஸ்க்ரீனிங் அமைப்பில் கூட்ட நடைமுறை விவரங்கள் அடங்கிய குறிப்புக்கள் காணாமற்போய் விட்டன என்று சி.பி.ஐ. விசாரணை அதிகாரி சிறப்பு நீதிமன்றத்தில் தெரிவித்ததும் பலத்த கேள்விகளுக்கு இடம் வகுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)



## உறுப்புகளை தானம் செய்தார் நடிகர் சூர்யா

டில்லி, நவ.26

உறுப்புகளை தானம் செய்வதாக அறிவித்தார் நடிகர் சூர்யா.

தற்போதெல்லாம் நடிகர், நடிகைகள் பலர் தங்களது உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வருகிறார்கள். அந்த வகையில் கமல், சரத்குமார், த்ரிஷா உட்பட பலர் தங்களது உடல் உறுப்புகளை தானம் செய்வதாக ஏற்கனவே ஒப்புதல் கொடுத்து விட்டனர். சில மாதங்களுக்கு முன்பு கூட நடிகை அசின் தனது உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்ததோடு அதற்கான உறுதிமொழிப் பத்திரத்திலும் கையெழுத்திட்டார். அவரைத் தொடர்ந்து இப்போது நடிகர் சூர்யாவும்உடல்உறுப்புகளை தானம் செய்வதாக அறிவித்திருக்கிறார்.

2013 இல் வெளியான சென்னையில் ஒரு நாள் என்ற படத்தின் இறுதியில் தோன்றும் சூர்யா அதில் உடல் உறுப்புத்தானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுவார். தற்போது அது வெறும் பேச்சல்ல என்பதை நிரூபித்து விட்டார். (ரி)

# ஜெயலலிதாவின் இடத்துக்கு இளவரசியின் மருமகன் தெரிவு

## ஸ்ரீரங்கம் தொகுதிக்கு இடைத்தேர்தல்

ஸ்ரீரங்கம் தொகுதியில் நடைபெறவிருக்கும் சட்டசபை உறுப்பினர் இடைத் தேர்தலில் இளவரசியின் மருமகன் போட்டியிடப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.


தொகுதியின் சட்டசபை உறுப்பினர் உயிரிழந்தாலோ, அல்லது பதவியை ராஜினாமா செய்தாலோ அந்தத் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தப்படும். அந்த வகையில், தமிழகத்தின் முதல்வராக இருந்த ஜெயலலிதா ஊழல் வழக்கில் சிக்கி சிறைக்குச் சென்றதை அடுத்து முதல்வர் பதவியையும், ஸ்ரீரங்கத்தின் எம்எல்ஏ பதவியையும் இழந்தார். இதனால், ஸ்ரீரங்கத்தில் இடைத்தேர்தல் இடம் பெறவுள்ளது.

அந்தத் தொகுதியில், அதிகமாக உள்ள முக்குலத்தோர் சமூகத்தைச் சேர்ந்தவர் ஒருவருக்குத்தான் வெற்றி வாய்ப்பு உள்ளது. எனவே எந்தச் சிக்கலும் இல்லாத வேட்பாளராக இருக்க வேண்டும் என்று அ.தி.மு.க. தலைமை உத்தரவிட்டதாக கூறப்படுகிறது. இதனால், அ.தி.மு.க. சார்பில் இங்கே போட்டியிடப்போவது யார் என்பது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஊழல் வழக்கில் ஜெயலலிதாவுடன் கூட்டாக சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு உடன் பிறவா சகோதரிகளான ஜெயலலிதா, சசிகலாவுடன் சிறைக்குப்போன இளவரசியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தான் அ.தி.மு.க. வேட்பாளர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இளவரசியின் இரண்டாவது மருமகன் ராஜராஜன் தான் அந்த வேட்பாளர் என்று அ.தி.மு.க. வட்டாரத்தில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை தமிழக அரசு அலுவலகங்கள் மற்றும் அரசுத் திட்டங்களில் இடம் பெற்றுள்ள ஜெயலலிதாவின் படத்தை அகற்றக் கோரிதொடரப்பட்டுள்ள வழக்கில் ஒரு மாதத்துக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ரி)

## முன்னாள் பெற்றோலிய அமைச்சர் காலமானார்



மூத்த அரசியல் தலைவரும் முன்னாள் இந்திய மத்திய அமைச்சருமான முரளிதியோரா தமது 77 ஆவது வயதில் திங்கட்கிழமை காலமானார். சிறிது காலம் உடல் நலமின்றி இருந்த அவர், மும்பையில் தனது இல்லத்தில் காலமானார். நான்கு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தியோரா, 2006 இல் பெற்றோலியத் துறை அமைச்சரானார். .(ரி)

## டிசெ.4 இல் கூடுகிறது தமிழக சட்டசபை

தமிழக சட்டசபை டிசெம்பர் 4 ஆம் திகதி கூடுகிறது. அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு சபையைக் கூட்ட தமிழக ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார். இதற்கான அறிவித்தலை சட்டசபைச் செயலாளர் ஏ.எம்.பி. ஜமாலுதீன் கடந்த திங்கட்கிழமை வெளியிட்டார்.

அந்த அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

சபை கூடும் தினமான டிசெம்பர் 4 ஆம் திகதி காலையில் அலுவல் ஆய்வுக் குழு கூடும் எனவும், சபைக் கூட்டத் தொடரை எத்தனை நாள்களுக்கு நடத்துவது என்று அப்போது முடிவு செய்யப்படும் என்றும் சபை வட்டாரங்க்ள் தெரிவித்தன. தமிழக சட்டசபையைக் கூட்ட வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி, பொருளாளர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

சபையை எப்போது கூட்ட வேண்டும் என்று தமிழக அரசுக்குத் தெரியும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இரண்டு முறை தனது அறிக்கைகளின் வாயிலாக பதிலளித்திருந்தார். இந்த நிலையில், சட்டசபை யைக் கூட்டுவதற்கான அறிவிப்பைத் தமிழக ஆளுநர் கே.ரோசய்யா வெளியிட்டுள்ளார். இந்தக் கூட்டத் தொடரின்போது பல முக்கிய பிரச்சினைகளை எதிர்க் கட்சிகள் எழுப்பும் என்று தெரிகிறது. (வ)

# மாணவர்களே..! தயாரா நீங்கள்?



மேல் மாகாண மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியின் ஆகப் பிந்திய வினாத்தாள்கள் நாளை முதல் உதயன் பத்திரிகையில் பிரசுரமாக உள்ளது. வினாத்தாள்கள் பிரசுரமாகும் பரீட்சை அட்டவணை இங்கு தரப்பட்டுள்ளது. வினாத்தாள் வெளியான மறுநாளில் பகுதி 1 க்கான விடைகளும் பகுதி 11க் கான புள்ளியிடல் முறையும் வெளியாகும். பாடசாலைகள் மேலதிக பத்திரிகைப் பிரதிகள் தேவை எனில் 0716182182 என்ற கைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே பதிவு செய்யலாம். பாடசாலைகளுக்கு நேரடியாகவே விநியோகிக்கப்படும்.

| திகதி | பாடம் |
|---|---|
| 27.11.2014 | சைவநெறி மற்றும் சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 28.11.2014 | தமிழ்மொழியும் இலக்கியமும் வணிகமும் கணிப்பீட்டுக் கல்வியும் |
| 29.11.2014 | விஞ்ஞானம் |
| 30.11.2014 | விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும் வரலாறு |
| 01.12.2014 | கணிதம் |
| 02.12.2014 | சித்திரக்கலை கர்நாடக சங்கீதம் |
| 03.12.2014 | ஆங்கிலம் |
| 04.12.2014 | நாடகமும் அரங்கியலும் தமிழ் இலக்கியம் |



## பெரு கடற்கரையில் செத்து மிதந்த கடற்சிங்கங்கள்



பெரு, நவ.26
பெரு கடற்பகுதியில் நேற்று முன்தினம் காலை 500 இற்கும் மேற்பட்ட கடற்சிங்கங்கள் இறந்து மிதந்தன. இந்தச்சம்பவம் சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.
தென் பசுபிக் கடற்பகுதியில் அமைந்துள்ள பெரு நாடு, தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றாகும். பெரு நாட்டின் தலைநகர் லிமாவில் இருந்து 400 கி.மீ. தொலைவில் சான்டா பிராந்தியம் உள்ளது. அங்குள்ள நீண்ட கடற்கரையில் நேற்று முன்தினம் விடுமுறை தினமாதலால் ஏராளமான மக்கள் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது கடற்கரை ஓரமாக வயதான மற்றும் குட்டி கடற்சிங்கங்கள் செத்து மிதந்தன. அவற்றில் பெரும்பாலானவை அழுகிய நிலையில் காணப்பட்டன. (வ)



பங்களாதேஷில் 1,151 பேர் இணைந்து உலகின் மிகப்பெரிய செல்பி எடுத்து சாதனை படைத்துள்ளனர். உலகம் முழுவதும் செல்பி மோகம் அதிகமாகக் காணப்படுகிறது. தன்னைத் தானே ஒளிப்படம் எடுத்துக்கொண்டது போக, தற்போது கும்பலாகச் சேர்ந்து 'குரூப்பி' என்ற பெயரிலும் மக்கள் ஒளிப்படம் எடுக்கத் தொடங்கியுள்ளனர். இந்தநிலையில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் 1,151 பேர் சேர்ந்து செல்பி ஒன்றை எடுத்துள்ளனர். இதற்கு முன்னர் செல்பியில் இத்தனை பெரிய தொகையானோர் பேர் பங்கேற்றது இல்லை என்பதால், இது உலக சாதனையாகக் கருதப்படுகிறது. (வ)

## யூத நாடு சட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல்

### பலஸ்தீனர்கள் எதிர்ப்பு

இஸ்ரேலை யூதர்கள் நாடு என்று அறிவிப்பதற்கான பிரேரணைக்கு அந்தநாட்டு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இன்று புதன் கிழமை குறித்த பிரேரணை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தப் புதிய சட்டம் குறித்து பேசிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு", "யூதர்களின் நாடு என்று அறிவிக்கப்பட்டாலும் அனைத் துத் தரப்பினருக்கும் சம உரிமை வழங்குவதில் நான் உறுதியாக உள்ளேன்" என்று தெரிவித்துள்ளார். இந்த நிலையில் இஸ்ரேலின் இந்த முடிவுக்கு பலஸ்தீனியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இத்தகைய அறிவிப்பின் மூலம் இஸ்ரேல் மற்றும் அரேபியர்கள் இடையேயான போரின்போது தங்கள் வசிப்பிடங்களை விட்டு பிற நாடுகளில் அடைக்கலம் கோரிச் சென்றவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு அனுமதி மறுக்கப்படும் என்று அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.
இஸ்ரேலின் இந்த முடிவு ஜனநாயக ரீதியிலான நடைமுறைகளைப் புறந்தள்ளுவதோடு மட்டுமல்லாமல், அரபு இனத்தவர்களின் உரிமைகளை மறுக்கும் ரீதியிலானது என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

# ஈரானுக்கான கெடு நீடிப்பு

## அணுசக்திப் பேச்சுத் தொடர்பில்



ஈரான் அணுசக்திப் பேச்சின் காலக்கெடு 2015 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.
ஈரானின் அணுச் செறிவூட்டலைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த பல மாதங்களாக வியென்னாவில் பி 5+1 நாடுகள் நடத்தி வந்த பேச்சின் காலக்கெடு நேற்று முன்தினம் திங்கட்கிழமையுடன் முடிவடைந்த போதும் உலக நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே இதுவரை எந்த விதமான ஒப்பந்தமும் ஏற்படவில்லை.
மேலும் இறுதி உடன்பாடு எட்டப்படாத காரணத்தால் இக் காலக்கெடு 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி வரை நீட்டிக்கப்பட்டிருப்பதாக மேற்குலக அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.
இந்தப் புதிய காலக்கெடுவுடன் கூடவே மேலதிகமாக இன்னொரு கால நீடிப்பு தேவைப் பட்டால் அதனை ஜூலை முதலாம் திகதி வரை நீடிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர அங்கத்துவ நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் என்பவற்றுடன் மேலதிகமாக ஜேர்மனியும் இணைந்த பி 5+1 நாடுகளின் பிரதிநிதிகளும் ஈரானின் தூதர்களும் திங்கள் இரவுக்குள் ஓர் முடிவை எட்ட இறுதி வரை முயன்றபோதும் அது தோல்வியில் முடிவடைந்தது. இதில் ஓர் உடன்பாடு எட்டப்பட்டிருந்தால் ஈரான் மீது மேற்குலக நாடுகள் தற்போது விதித்துள்ள முக்கிய பொருளாதாரத் தடைகள் அகற்றப்பட்டும் வாய்ப்பு இருந்தது. ஆனால் முடிவு எதிர் மறையாக இருந்திருந்தால் நிலைமை இன்னும் தீவிரமடைந்து ஈரான் மீது இன்னும் இறுக்கமான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டிருக்கவோ அல்லது படை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் சூழ்நிலை கூட ஏற்பட்டிருக்கும் என்பது கவனிக்கத்தக்கது.
ஆனால் கடந்த காலத்தில் நடைபெற்ற அணுசக்தி பேச்சுகளில் மற்றைய நாடுகளைப் போன்று அணுசக்தியை சமாதான வழியிலான ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தும் உரிமை தனக்கு உள்ளது என்றே ஈரான் வலியுறுத்தி வந்தது. இந்தநிலையில் இந்த அணு சக்திப் பேச்சுகளில் சர்வதேச அணுசக்தி ▫ Û IAEA பேச்சுக்களில் பங்கேற்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த மாதத் தொடக்கத்தில் ஈரான் நாடாளுமன்றத்தின் 200 உறுப்பினர்கள் இணைந்து தமது நாட்டின் அணுசக்தி உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது என்றும், அதே நேரம் பொருளாதாரத் தடைகள் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றும் ஓர் அறிக்கையில் கைச்சாத்திட் டிருந்தனர்.
இதேவேளை ஆசியாவில் அணுவாயுதப் பரவல் அதிகரித்து வருகின்றது என்றும் முக்கியமாக அணுவாயுதத் தயாரிப்பில் பாகிஸ்தான் வேகமாக வளர்ந்து வருகின்றது என்றும் அமெரிக்க வெளி விவகாரத்துறை அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது. (வ)

## மாணவருக்கு கட்டாய வரி மிரட்டல் விடுக்கும் ஐ.எஸ்.



பக்தாத், நவ.26
ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பல்வேறு நகரங்களில் மாணவர்களுக்கு கட்டாய கல்வி வரி விதித்துள்ளமை பெற்றோரை கவலையில் ஆழ்த்தியுள்ளது.
ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ். சிறுவர்களை மனித வெடிகுண்டுப் படை தீவிரவாதிகளாக ஆக்கவும், ராணுவத்தை எதிர்த்து போர் புரியவும் தயார் செய்கின்றனர். தற்போது தீவிரவாதிகள் மொசூல் உட்பட பல நகரங்களில் படிக்கும் பாடசாலை- கல்லூரி மாணவர்களுக்கு இலவச கல்விக்குத் தடை விதித்து கட்டாய கல்விக்கு வரி செலுத்த வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்துள்ளனர்.
இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் - "இந்தக் கல்வி வரி மழலையர் முதல் அனைவருக்கும் பொருந்தும். இதனை மாதந் தோறும் எல்லோரும் தவறாமல் செலுத்த வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளனர்.
தீவிரவாதிகளின் இந்தச் செயல் பெற்றோர் மற்றும் மாண வர்களை கவலையில் ஆழ்த் தியுள்ளதாகக் கூறப்படுகிறது. (வ)

## பதவியிலிருந்து விலகுகிறார் அமெ.பாதுகாப்புச் செயலாளர்



வொஷிங்டன், நவ.26
அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளரான சக் ஹாகெல் தனது பதவியில் இருந்து விலகுகின்றார் என்று ஜனாதிபதி ஒபாமா நேற்று முன்தினம் திங்கட் கிழமை வெள்ளை மாளிகையில் இருந்து அறிவித்துள்ளார்.
அமெரிக்காவின் மிக முக்கிய இராணுவப்பதவியான அவரது இடத்துக்கு இன்னொருவர் நியமிக்கப்படும்வரை சக் ஹாகெல் தமது பொறுப்புக்களைக் கவனித்துக்கொள்வார்' என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.
68 வயதாகும் சக் ஹாகெல் முன்னாள் வியட்நாம் போர் வீரர் என்பதுடன் நெப்ரஸ்காவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முன்னாள் குடியரசுக் கட்சி செனட்டரும் ஆவார். இவர் அதிபர் ஒபாமாவின் தலைமையிலான நிர்வாகத்தின் கீழ் பாதுகாப்புச் செயலாளராக பெப்ரவரி 2013 முதல் செயற்பட்டு வந்தார்.
இந்தநிலையில் சக் ஹாகெல் குறித்து ஒபாமா கூறுகையில், 'ஹாகெல் கடமையாற்றிய காலத்தில் தேசிய பாதுகாப்புக்கான முக்கியமான பல சாதனைகளைப் புரிந்துள்ளார் அவர் பதவி விலகுவது என்பது அவரது சுயவிருப்பத்தின் அடிப்படையிலான முடிவு' என்றும் தெரிவித்தார்.
ஆயினும் அரிஷோனா செனட்டரும், 'ஆயுதசேவைக்குழுவின் தலைவராகப்' பதவியேற்க இருப்பவருமான ஜோன் மக்கெயின், உள்ளூர் அரிஷோனா வானொலி நிகழ்ச்சி ஒன்றுக்குப் பேட்டியளிக்கையில், 'தாம் கடந்த வாரம் ஹாகெலுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும், அவர் மிகவும் விரக்தி அடைந்திருந்தார் என்றும் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
இதேவேளை அதிபர் ஒபாமாவின் சமீபத்திய வெளியுறவுக் கொள்கை பற்றிய சிறு முரண்பாடுகளையடுத்து ஹாகெலைப் பதவி விலகுமாறு அவர் கடந்த வெள்ளிக்கிழமை வேண்டிக் கொண்டதாக 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது (வ)

## நகைகளுடன் மம்மி எகிப்தில்




எகிப்தில் கல்லறையொன்றில் நகைகள் அணிந்த பெண் மம்மி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
நைல் நதிக்கரையோரம் உள்ள பழங்கால கல்லறைகளை ஸ்பெயின் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டி ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அதில் கல்லறை ஒன்றில் அழகிய பூ வேலைப்பாடுகளுடன் கூடிய சவப்பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டது.
அதற்குள் பெண் மம்மி ஒன்று இருந்துள்ளது. அந்த மம்மி கடந்த 4,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒருவருடையது என்றும், அப்பெண் இறந்த போது 30 வயது இருந்திருக்கக்கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர் (வ)

# செவ்வாய்க் கிரகத்தில் மனித மண்டை ஓடு?

## பீதியைக் கிளப்பும் காணொலி

செவ்வாயில் மனித மண்டை ஓடு ஒன்று இருப்பது போன்ற காணொலி வெளியாகி பரபரப்பை அதிகரித்துள்ளது. யூடியூப் தளத்தில் வெளியான இந்தக் காணொலி அதிவேகமாக பரவிவருகிறது. அதில் சில மாற்றங்களைச் செய்து மண்டை ஓடு போல சித்திரித்து விட்டதால், குறித்த காணொலி பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அதில் வரும் படத்தை டிஜிட்டல் முறையில் மாற்றம் செய்து, அங்கு வேற்றுக்கிரகவாசிகள் இருந்திருக்கலாம் என்று சிலர் கதைகட்டுகின்றனர். மேலும் இந்த மண்டை ஓடு இருப்பதை நாசா கண்டு பிடித்துள்ளதாக சிலர் தெரிவித்ததை நாசா முற்று முழுதாக மறுத்துள்ளது.



இதுகுறித்து கருத்து வெளியிட்ட நாசா இந்தக் காணொலியில் இருப்பது செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பாறைதான் என்றும் இவ்வகை வதந்திகளுக்கு தாங்கள் பொறுப்பில்லை என்றும் தெரிவித்துள்ளது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## இலட்சியத்தை அடையும் வரை உழையுங்கள்

உங்களிடம் இலட்சியம் இருக்கிறது. ஆகவே எழுந்திருங்கள். எப்பொழுதும் விழித்திருங்கள். விரும்பிய இலட்சியத்தை அடையும் வரை ஓதுங்கி இராதீர்கள். தைரியமாக இருங்கள். பயப்படாதீர்கள். அப்போது உங்களது காரியங்கள் அனைத்தும் நிறைவேறிவிடும். ஒவ்வொரு நாட்டுக்கும் மகத்தான தியாகம் தேவைப்படுகிறது. இளைஞர்களால் தான் இதைச் செய்ய முடியும். இளமை நிறைந்த, ஆற்றல் மயமான, வலிமையான உரமேறிய, அறிவு நிறைந்த இளைஞர்களால் தான் இதனைச் செய்ய முடியும். உங்கள் இரத்தத்தில் உற்சாகத்தோடு எழுந்திருங்கள். ஒவ்வொருவரும் நீங்கள் ஏழைகள், உங்களுக்கு நண்பர்கள் இல்லை என்று நினைக்காதீர்கள். பணம் மனிதனை உருவாக்குவதை யாராவது பார்த்திருக்கிறீர்களா? இந்த உலகம் அனைத்தும் மனிதனுடைய சக்தியால் தான் உருவாக்கப்பட்டுள்ளது. இவை அனைத்துமே உற்சாகத்தின் ஆற்றலால், நம்பிக்கையின் ஆற்றலால் தான் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறிருந்தால் இரத்தத்தில் மிக மிக அழுத்தமான உணர்ச்சியும் உற்சாகமும் உடைய பூமியின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரை எமது முன்னோர்களின் அழிவற்ற ஆன்மிக உண்மைகளை பரப்புரை செய்து கொண்டும் உபதேசம் செய்யக் கூடியதுமான வீரர்கள் எதிர்காலத்தில் உருவாகுவார்கள். எனவே விரும்பிய இலட்சியத்தை அடையப் பெறும்வரை தரித்து நிற்காது செல்லுங்கள். வரலாற்றின் ஆரம்ப காலத்திலிருந்தே எல்லா மகத்தான சக்திகளும் மக்களிடமிருந்து வருகின்றன. அவர்களில் தலைசிறந்தவர்களிடமிருந்து எல்லா மகத்தான அறிவாளிகளும் வந்திருக்கிறார்கள். அந்த வரலாறு மறுபடியும் திரும்பும். ஆகவே வலிமையுடையவராகுங்கள். இந்தச் சிரத்தையைப் பெறுங் கள். பிறகு எல்லாம் தானாகவே வரும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 3 | | 8 | 5 | 4 | | |
| 4 | | 5 | | 6 | 2 | | | |
| | 2 | 7 | | 4 | | | | 6 |
| | | 6 | 2 | | | | 4 | |
| | 5 | | | 1 | | | 8 | |
| | 3 | | | | 4 | 2 | | |
| 6 | | | | 9 | | 3 | 5 | |
| | | | 1 | 3 | | 6 | | 8 |
| | | 8 | 5 | 2 | | 7 | 1 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 2 | 5 | 4 | 8 | 7 | 1 | 9 |
| 8 | 4 | 7 | 9 | 6 | 1 | 2 | 3 | 5 |
| 9 | 5 | 1 | 2 | 7 | 3 | 4 | 6 | 8 |
| 3 | 6 | 5 | 7 | 8 | 9 | 1 | 2 | 4 |
| 4 | 7 | 9 | 3 | 1 | 2 | 5 | 8 | 6 |
| 2 | 1 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 | 7 |
| 1 | 2 | 4 | 8 | 9 | 5 | 6 | 7 | 3 |
| 5 | 8 | 6 | 1 | 3 | 7 | 9 | 4 | 2 |
| 7 | 9 | 3 | 4 | 2 | 6 | 8 | 5 | 1 |



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எவருக்கும் அவசரப்பட்டு வாக்குக் கொடுக்க மாட்டீர்கள். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்கள் உங்கள் சொல்லுக்குக் கட்டுப்படுவார்கள். பெரிய எதிர்பார்ப்புகள் கைகூடும். அரச வழியிலும் சலுகைகள் கிடைக்கும்.



**இடபம்**:இதுவரை உங்களது இல்லத்துக்கு வராத உறவினர்கள் இன்று வருவார்கள். புதிய சேமிப்புத் திட்டங்களில் ஈடுபடுவீர்கள். ஆனாலும் அனைத்து விடயங்களும் முடியும் வரை ஒரு பயம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.



**மிதுனம்**: தைரியத்துடன் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். கஷ்டங்களைத் திறமையாக எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள். வெளியூரிலிருந்து மகிழ்ச்சியளிக்கும் செய்தி வந்து சேர்ந்து உங்களைத் திக்கு முக்காட வைக்கும்.



**கடகம்**: பெற்றோரால் நலம் உண்டாகும். சமுதாயத்தில் பெரியவர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். அவர்களின் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் முழுமையாகச் செயற்படுத்துவீர்கள்.



**சிங்கம்**: நண்பர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் சரியான நேரத்தில் தேவையான உதவிகளைச் செய்து பெருமையடைவீர்கள். அதேநேரம் எவரையும் கடிந்து பேச வேண்டாம். பிறரிடம் விட்டுக்கொடுத்து நடந்துகொள்வது நல்லது.



**கன்னி**: நண்பர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும். அவர்களின் விடயங்களில் அநாவசியமாக மூக்கை நுழைக்க வேண்டாம். மற்றப்படி சாதுர்யமாகப் பேசுவீர்கள். குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை காணப்படும்.



**துலாம்**: எந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டாலும் எல்லா விடயங்களையும் நன்றாகப் படித்து புரிந்து கொண்டு கையெழுத்திடவும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு சிறப்பாகக் கிடைக்கும். எதிர்பார்த்த பதவி உயர்வைப் பெறுவீர்கள்.



**விருச்சிகம்**: அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையைக் காண்பீர்கள். அதேநேரம் தான் உண்டு தன் வேலையுண்டு என்கிற ரீதியில் பணியாற்றி அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும் ஒதுங்கி இருங்கள்.



**தனுசு**: உடன் பணிபுரிவோர் உங்களிடம் நட்புடன் பழகுவார்கள். புதிய முதலீடுகளைச் செய்வீர்கள். போட்டிகளை சாதுரியமாக சமாளிக்கவும். மேலும் படிப்படியாகத்தான் வளர்ச்சி உண்டாகும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**மகரம்**: ஓரளவு வருமானத்தைக் காண்பீர்கள். பலரின் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். திட்டமிட்டுச் செயலாற்றுவீர்கள். வழக்கு விவகாரங்களில் கவனத்துடன் இருக்கவும்.



**கும்பம்**: புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பேச்சாற்றல் அதிகரிக்கும். துறையில் புதிய யுக்திகளைப் பயன்படுத்தி மற்றவர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். உங்களின் தனித் தன்மையை வெளிப்படுத்துவீர்கள்.



**மீனம்**: தெய்வ வழிபாட்டில் சிரத்தையுடன் ஈடுபடுவீர்கள். உடல் நலம் சீராக இருக்கும். சகோதர. சகோதரிகள் தேவைக்கேற்ப உதவிகளைச் செய்வார்கள். தாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்.

## நாளை

**கார்த்திகை-11 வியாழக்கிழமை | 27.11.2014**

திதி: பஞ்சமி மு.ப.11.12 வரை
நட்சத்திரம்:உத்தராடம் மு.ப.10.16 வரை

சுபநேரம்:07.42-09.12வரை
இராகுகாலம்: 01.42-03.12 வரை
இராமநாதர் குருபூஜை

# கிளி. மாவட்டச் செயலக கிரிக்கெட் அணி வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 26
கிளிநொச்சி மாவட்டச் செயலகம் பிரதேச செயலக அலுவலர்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இறுதியாட்டத்தில் கிளி நொச்சி மாவட்ட செயலக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனாது. கடந்த திங்கட்கிழமை கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மவட்டச் செயலக அணியினர் 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்கை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பூநகரி பிரதேச செயலக அணியினர் 7.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 28 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (உ-23)



*வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வடமாகாண அமைச்சுகளுக்கு இடையில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட்போட்டித் தொடரில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது யாழ். மாவட்டச் செயலக அணி. (உ-23)*

# குழப்பம் ஏன்?






இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் கிளார்க் விளையாடும் விடயத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு கிளார்க் எந்த வகையில் பொறுப்பு என்ற விளக்கத்தை அவரிடம் கிரிக்கெட் ஆஸ்திரேலியா கேட்டுள்ளது.
பிரிஸ்பன் டெஸ்ட் போட்டியில் கிளார்க் விளையாடப் போவதில்லை என்பது நேற்று அறிவிக்கப்படுவதாக இருந்தது. ஆனால் பிலிப் ஹியூஸ் பவுன்சரில் அடிபட்டு உயிருக்குப் போராடி வருவதால் இந்த அறிவிப்பை இப்போதைக்கு நிறுத்தி வைத்துள்ளது ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை.
பிலிப் ஹியூஸ் அனுமதிக்கப்பட்டுள்ள செயிண்ட் வின் சென்ட் மருத்துவமனையில் ஹியூஸ் குடும்பத்தினருடன் மைக்கல் கிளார்க் இருந்து வருகிறார்.
இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் நோக்கத்தில் காயமடைந்த மைக்கல் கிளார்க் காட்டிய தீவிரம், கிரிக்கெட் ஆஸ்திரேலிய நிர்வாகிகள், பயிற்சியாளர்கள், அதிகாரிகள் மத்தியில் கடும் குழப்பத்தை ஏற்படுத்தியதால் அவர்களுக்கு கிளார்க் மீது கடும் கோபம் ஏற்பட்டுள்ளது.
அணித் தேர்வுக் குழு தலைவர் ரொட்னி மார்ஷ், அன்று முதல் டெஸ்ட் போட்டிக்கான அணியை அறிவிக்கும் போது கப்டன் மைக்கல் கிளார்க் பெயரையும் அறிவித்தார். ஆனால் உடற்தகுதி நிரூபிக்கப்பட்டால்தான் அவர் ஆடுவார் என்றும் இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது பயிற்சி ஆட்டத்தில் அவர் விளையாடி உடற்தகுதியை நிரூபிப்பார் என்றார்.
ஆனால் இவரது கூற்றுக்கு மாறாக, மைக்கல் கிளார்க், சிட்னியில் உள்நாட்டு கிரிக்கெட் ஒன்றில் விளையாடுவேன் என்றார். இதனால் குழப்பம் ஏற்பட்டது. இது தற்போது விசாரணையில் உள்ளது.
தனது உடற்தகுதியை நிரூபிப்பதில் அணித் தேர்வுக் குழுவின் அறிவிப்பிற்கு முரணாக வேறொரு அறிவிப்பை வெளியிட்டது ஏன், கிளார்க் விளக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.
கிரிக்கெட் ஆஸ்திரேலிய தலைவர் ஜேம்ஸ் சதர்லேண்ட் விளக்கம் கேட்டுள்ளார். (து)

# பருத்தித்துறை லீக் அரையிறுதி நாளை

யாழ்ப்பாணம், நவ. 26
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகம் மோதும்.
வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதும். (உ-23)

# மாகாண அமைச்சு விளையாட்டுக்கள்

யாழ்ப்பாணம், நவ. 26
வடமகாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மகாகாண அமைச்சுகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் கல்வி அமைச்சு அணியை எதிர்த்து 'சுகாதரா அமைச்சு அணி யும் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து ஆளுநர் கொத் தணி அணியும் மீன்பிடி அமைச்சு அணியை எதிர்த்து



விவசாய அமைச்சு அணியும் மோதவுள்ளன.
பூப்பந்தாட்டப் போட்டி இன்று காலை 9 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள பூப்பந்தாட்டத்திடலில் இடம் பெறவுள்ளது. இதில் பெண்களுக்கான திறந்த போட்டியும். 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான போட்டியும் இடம் பெறவுள்ளது.
(உ-23)

# மீண்டும் பயிற்சியாளராக பணி புரிவதற்குத் தயார்



இந்திய ஹொக்கி அணியின் பயிற்சியாளராக மீண்டும் பணிபுரிய தயாராக உள்ளேன் என டெர்ரி வால்ஸ் தெரிவித்தார்.
ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் ஹொக்கி வீரர் டெர்ரி வால்ஷ் இவர், 2013 இல் இந்திய ஹொக்கி அணிக்கு பயிற்சியாளராக நியமிக்கப் பட்டார். இதன் பின் அணி பொதுநலவாய, ஆசிய விளையாட்டில் முறையே வெள்ளி, தங்கம் வென்றது. தவிர ரியோ டி ஜெனிரோ (2016) ஒலிம்பிக் போட்டிக்கும் நேரடியாகத் தகுதி பெற்றது.
சமீபத்தில் இவரின் பணிக் காலம் முடிந்ததையடுத்து புதிய கோரிக்கை வைத்தார்.
இந்த ஒப்பந்தம் குறித்து மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் சர்பானாந்தா சோனொவாலுடன் நடத்திய பேச்சில் முடிவு எட்டவில்லை. இதனால் இவர் ஆஸ்திரேலியா சென்றுவிட்டார்.
இந்நிலையில் மீண்டும் பயிற்சியாளர் பதவிக்கு வர விரும்புவதாக டெர்ரி வால்ஸ், அமைச்சர் சர்பானந்தாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். இதில், இந்திய விளையாட்டு ஆணையத்துடன் நடத்திய பேச்சு மகிழ்ச்சி தருகிறது. இந்திய ஹொக்கி அணியின் பயிற்சியாளராக தொடர்வதற்கு விருப்பம் உள்ளது. அணியுடன் இணைந்து ஒலிம்பிக் (2016) போட்டிக்கான பயிற்சியில் ஈடுபட தயாராக உள்ளேன் என எழுதியுள்ளார். (த-23)

# வடமராட்சி லீக் அடுத்த கட்டம் ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், நவ. 26
வடமராட்சி உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் கிண்ண போட்டியின் 2ஆம் கட்ட ஆட்டங்கள்கள் இன்று புதன் கிழமை மனோகர விளையாட்டுக்கழக மைதானத்தில் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகும். ஆட்டத்தில் யங்கம் பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (உ-23)

# சீனிவாசனுக்கு கிடுக்கிப்பிடி



ஐ.பி.எல்., சூதாட்ட முறைகேடு தொடர்பாக சீனிவாசனிடம் உச்ச நீதிமன்றம் சரமாரியாக கேள்வி கேட்டுள்ளது. இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்து கொண்டு, ஐ.பி.எல்., அணியின் உரிமையாளராகவும் எப்படி இருக்க முடியும் என விளக்கம் கேட்டுள்ளது.
ஆறாவது ஐ.பி.எல்., தொடர் (2013) சூதாட்டம் குறித்து விசாரிக்க, ஓய்வு பெற்ற நீதிபதி முட்கல் முத்கல் தலைமையில் ஒரு குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது. இதன் இறுதி அறிக்கை கடந்த 3ஆம் திகதி தாக்கல் ஆனது. இதில், ஐ.சி.சி., தலைவர் சீனிவாசன், குருநாத் மெய்யப்பன், ராஜஸ்தான் அணியின் உரிமையாளர் ராஜ் குந்த்ரா, சென்னை அணியின் சுந்தர ராமன் என, கிரிக்கெட் வீரர்கள் இல்லாத, 4 பேர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது தெரிந்தது.
கடந்த 17ஆம் திகதி நடந்த முட்கல் குழுவின் இறுதி அறிக்கையை உச்ச நீதிமன்றம் வெளியிட்டது. இதில் சீனிவாசன் பெட்டிங்', பிக்சிங்' உள்ளிட்ட எதிலும் ஈடுபடவில்லை. 2013 ஐ.பி.எல். சூதாட்டம் குறித்த விசாரணைகளை தடுக்கும் முயற்சியையும் இவர் செய்யவில்லை. அதேநேரம் வீரர்கள் ஐ.பி.எல்., தொடர் விதிகளை மீறுவது குறித்து தெரிந்தும் நடவடிக்கை எடுக்காமல் இருந்தார் என தெரிவிக்கப்பட்டது.
இதற்கிடையே தன்னை மீண்டும் இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவராக நியமிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் சீனிவாசன் மனு தாக்கல் செய்தார்.
இந்நிலையில் இன்று உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிவான்கள், கிரிக்கெட் போட்டியை இந்தியாவில் மதம் போல கருதுகின்றனர். ஐ.பி.எல்., தொடரை இந்தியக் கிரிக்கெட் சபை தான் அறிமுகப்படுத்தியது. எனவே இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. இப்படி இருக்கையில், ஒரு அணியின் உரிமையாளராக இருந்து கொண்டு இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவராக நடு நிலைமையுடன் எப்படி செயற்பட முடியும். ஒரு போட்டியின் முடிவு முன்கூட்டியே தீர்மானிப்பது தெரிந்தால், எப்படி ரசிகர்கள் போட்டியை காண வருவார்கள். சூதாட்டம் தொடர்ந்து நடந்தால், அது கிரிக்கெட்டை கொல்வதற்கு சமம். மக்களிடம் நம்பிக்கையை இழந்து விட்டால், கிரிக்கெட் காணாமற் போய்விடும். ஜென்டில்மேன்' உணர்வுடன் விளையாடப்படுவதால் தான் கிரிக்கெட் முன்னேற்றம் காண்கிறது. முத்கல் அறிக்கையை முழுமையாக நம்புகிறோம். அனைத்துக்கும் இந்தியக் கிரிக்கெட் சபை விளக்கம் அளிக்க வேண்டும்,' எனத் தெரிவித்தனர். (து)

# எத்தியோப்பிய வீரர் சாதனை





டில்லி பாதி மரதன் ஓட்டத்தில் எத்தியோப்பியா வீரர் குய் அடோலா பந்தய தூரத்தை 59.06 நிமிடங் களில் கடந்து புதிய சாதனையுடன் முதலிடம் பிடித்தார்.
டில்லியில், பாதி மாரத்தான் ஓட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்தது. இதில் 32, 500 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பந்தய தூரத்தை (21.097 கி.மீ.) 59.06 நிமிடங்களில் கடந்த எத்தியோப்பிய வீரர் குய் அடோலா முதலிடம் பிடித்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இதன்மூலம் இவர் டில்லி மரதன் வரலாற்றில் குறைந்த நேரத்தில் பந்தயத் தூரத்தை கடந்த வீரர் என்ற சாதனை படைத்தார். முன்னதாக கடந்த ஆண்டு நடந்த போட்டியில் எத்தியோப்பியா வீரர் அட்செடு டிசேகெய் 59.12 நிமிடங்களில் கடந்தது சாதனையாக இருந்தது. (த-23)

# தலையைப் பதம் பார்த்தது பவுன்சர் ஆபத்தான நிலையில் பிலிப் ஹியூக்ஸ்

சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வரும் ஆஸி. உள்நாட்டு கிரிக்கெட் போட்டியில் ஆடிய பிலிப் ஹியூக்ஸ், பவுன்சர் ஒன்று தாக்கியதில் தலையில் அடிபட்டு மருத்துவமனையில் உயிருக்குப் போராடி வருகிறார். அவர் அபாய கட்டத்தை தாண்டவில்லை என்று ஆஸ்திரேலிய செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இவர் பின்னால் இடம்பெறலாம் என்ற நிலை இருந்தது. இந்த நிலையில் தெற்கு ஆஸ்திரேலியா அணிக்காக ஆடிய பிலிப் ஹியூக்ஸ், நியூசவுத் வேல்ஸ் பந்து வீச்சாளர் ஷான் அபோட் வீசிய பயங்கர பவுன்சர், இடது காதையொட்டி தலையில் பயங்கரமாகத் தாக்க அவர் சிறிது நேரம் முழங்காலில் தன் கையை ஊன்றி தள்ளாடினார். ஆனால் உடனடியாக மயங்கி விழுந்தார்.

மயங்கி விழும்போதும் தரையில் தலை சற்றே வேகமாக மோதியுள்ளது. பவுன்சரை அவர் தடுக்க முயன்றார். ஆனால் பந்து மட்டையில் சிக்கவில்லை. இதனையடுத்து மூளையைத் தாக்கும் விதமாக தலையில் அடிபட்டுள்ளது.

உடனடியாக மைதானத்துக்கு உதவி வாகனம் வரவழைக்கப்பட்டு, அவர் செயின்ட் வின்சென்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். உடனேயே அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அடிபட்டதனால் மூளையில் ஏற்பட்டுள்ள அழுத்தம் அல்லது அதிர்ச்சியைக் குறைக்க மருத்துவர்கள் போராடி வருகின்றனர்.

சத்திர சிகிச்சையின் விளைவுகள் தெரிய 24 மணி முதல் 48 மணி நேரங்கள் ஆகலாம் என்று மருத்துவர்கள் தெரிவித் தனர். இப்போதைக்கு அவர் மருந்துகள் மூலம் கோமா நிலைக்குச் செலுத்தப்பட் டுள்ளார். உயிர்காப்பு உபகரணங்களுடன் அவர் தற்போது இருந்து வருகிறார். இப்போதைக்கு ஒன்றும் கூறுவதற்கில்லை என்று மருத்துவர்கள் கூறினர். இவர் ஆடும்போது மைதானத்தில் இவரது ஆட்டத்தை இவரது தாயாரும், சகோதரியும் கண்டு களித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் முன்னிலையில் பிலிப் ஹியூக்ஸ் ஆபத்தான காயமடைந்துள்ளார். (த)



## 2015 உலகக் கிண்ணப் போட்டியில் மோசடிகளை தடுக்க நடவடிக்கை

International Cricket Council

அடுத்தாண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் ஊழலுக்குச் சிறு துளி கூட இடம் கொடுக்காமல் இருக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

டெல்லியில் கருத்து வெளியிட்ட சர்வதேச கிரிக்கெட் சபை தலைமை செயல் அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் அடுத்தாண்டுக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதன்போது அந்நாடுகளின் பொலிஸ் ஏஜென்ஸிகளின் உதவியை நாட இருக்கிறோம். உலகக்கிண்ணப் போட்டியின் போது ஆட்ட நிர்ணய நடவடிக்கையில் ஈடுபடும் யாரும் தப்ப முடியாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

பந்து வீச்சில் விதிமுறையை மீறுபவர்கள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் எந்தவித உள்நோக்கமும் கிடையாது என்று தெரிவித்துள்ளார். (த)

## டில்லி அணி வெற்றி



இந்தியன் சுப்பர் லீக் உதைபந்து போட்டியில் டில்லி அணி, நோர்த்ஈஸ்ட் அணியை 2:1 என்கிற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது.

குவாஹாட்டி இந்திரா காந்தி மைதானத்தில் டில்லி டைனமோஸ் எப்.சி. மற்றும் நோர்த் ஈஸ்ட் யுனைடெட் எப்.சி. அணிகளுக்கிடையே போட்டி நடந்தது.

ஆட்டம் ஆரம்பித்த 6 ஆவது நிமிடத்தில் டில்லியின் டாஸ் சண்டோஸ் முதல் கோல் அடித்தார். 14ஆவது நிமிடத்தில் ஹான்ஸ் முல்டர் 2 ஆவது கோலை அடித்து டில்லி அணியை வலுவான நிலைமைக்கு கொண்டு சென்றார். ஆனால் 80ஆவது நிமிடத்தில் நோர்த் ஈஸ்டைச் சேர்ந்த கொண்ட்வானி தலையால் முட்டி கோல் அடித்து ஆட்டத்தை பரபரப்பு ஆக்கினார். இன்னொரு கோல் அடித்து சமநிலைக்கு கொண்டு வர நோர்த் ஈஸ்ட் போராடியது. 83ஆவது நிமிடத்தில் இரண்டு அணிகளும் 10 பேருடன் ஆடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இறுதியில் டில்லி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்னையின் எப்.சி. 10 ஆட்டங்களில் 19 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளது. ஆனால் மீதமுள்ள 4 ஆட்டங்களில் 6 புள்ளிகள் எடுக்கவேண்டும் என்று சென்னையின் பயிற்சியாளர் மெட்டாரஸி கூறுகிறார். அவர் மேலும் கூறியதாவது:-

இலானோ காயத்தைக் குணமாக்கிக்கொள்ள பிரேஸில் சென்றுள்ளார். திரும்பவந்துநிறையகோல்கள் அடிப்பார் என்று நம்புகிறேன்-என்றார். (த)

## இன்றைய போட்டிகள்

இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான 7 ஒரு நாள் போட்டிகளை கொண்ட தொடரின் முதலாவது போட்டி இன்றைய தினம் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக இடம் பெறுகின்றது.

பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 5 ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட தொடரின் மூன்றாவது போட்டி இன்றைய தினம் டாக்காவில் பகல் இரவு ஆட்டமாக இடம்பெறுகின்றது.

நியூஸிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரின் மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பமாகின்றது.

(த-ரி)

## சென்னை, ராஜஸ்தான் அணிகளை நீக்குங்கள்

சூதாட்ட புகாரில் சிக்கியுள்ள சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகளை ஐ.பி.எல். தொடரில் இருந்துநீக்கவேண்டும்என்றுஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித் மோடி கூறியுள்ளார்.

ஐ.பி.எல் சூதாட்ட விவகாரத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் சீனிவாசனின் மருமகனான குருநாத் மெய்யப்பன் மற்றும், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் இணை உரிமையாளர் ராஜ் குந்த்ரா ஆகியோர் பெயர்கள் அடிபடுகின்றன. முட்கல் குழு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய் துள்ள அறிக்கையிலும் இவ்விருவர் பெயர்கள் இடம் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐ.பி.எல். அமைப்பின் முன்னாள் தலைவர் லலித் மோடி, உரிமையாளர்களே சூதாட்டத்தில் ஈடுபட்டிருப்பது தெரியவருவதால் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளை ஐ.பி.எல். தொடரில் இருந்து நீக்க வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாக வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (த)

## அதிரடி இல்லாவிட்டால் இங்கிலாந்து மண் கவ்வும்

இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தவறினால் இங்கிலாந்து தொடரை இழக்கும் என முரளிதரன் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணி 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இலங்கை சென்றுள்ளது. இதன் முதல் ஒருநாள் போட்டி இன்று கொழும்பில் நடக்கிறது.

இந்நிலையில் இது பற்றி இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் முரளிதரன் கருத்து தெரிவிக்கையில்; என்னைப் பொறுத்த வரை இங்கிலாந்து அணியில் தொடக்க வீரர்கள் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

அதிரடியாக விளையாடவில்லை என்றால் இலங்கை அணியிடம் தோல்வியை தழுவ வேண்டி இருக்கும். என்னுடைய பார்வையில் ஆஸ்திரேலியா, இந்தியா, நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகள் உலகக்கிண்ணத்தை வெல்லும்.

இங்கிலாந்து அணி சிறப்பாக செயற்பட வேண்டியது அவசியம். இலங்கை தொடரையாவது இங்கிலாந்து கைப்பற்ற வேண்டும். இல்லாவிட்டால் இங்கிலாந்து அணி தாக்குபிடிப்பது கடினம் என்று தெரிவித்துள்ளார். (த)



## தொடர்ச்சிகள்

### வடக்கு

குறித்தொதுக்கப்பட்ட நிதியாக ஆயிரத்து 440 மில்லியனும், பாடசாலை சார் கல்வி நிகழ்ச்சித் திட்டத்துக்காக 364 மில்லியனும், சுகாதாரத்துறை நிகழ்சித் திட்டத்துக்காக 355 மில்லியனும், யுனிசெவ் திட்டத்துக்காக 26 மில்லியனும், பேரவைச் செயலக கட்டட நிர்மாணத்துக்காக 150 மில்லியனும் ஒதுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியிலேயே ஆயிரத்து 440 மில்லியன் ரூபா ஒவ்வொரு அமைச்சுக்கும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்துக்கான முன்மொழிவு எதிர்வரும் 4 ஆம் திகதி இடம்பெறும் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

### வீதிகள்

சந்தி,நெல்லியடி, வல்லை போன்ற பகுதிகளில் இத்தகைய சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கைகளால் இரவு நேரங்களில் வீதிகளில் பயணம் செய்வது அச்சமாகவுள்ளதாகவும், இதனால் நேரத்துடன் வீடுகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-86-108)

### இலங்கைக்

கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். நள்ளிரவு மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது 7 ரோந்துப் படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் 100 இற்கும் மேற்பட்ட படகுகளை மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்துள்ளனர். மேலும் 10 இற்கும் மேற்பட்ட படகுகளில் இருந்து வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை கடலில் வெட்டி வீழ்த்தி அட்டூழியத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்ட 5 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டு வந்த நிலையில் மீனவர்கள் விடுவிக்கப்பட்ட பின் கடலுக்கு மீன்பிடிக்க சென்ற நிலையில், மீண்டும் இலங்கைக் கடற்படையினர் இராமேஸ்வரம், புதுக்கோட்டையைச் சேர்ந்த 14 மீனவர்கள் 3 படகுகளுடன் சிறைபிடித்து வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இந்த நிலையில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்குக் கடலுக்குள் காலடி வைக்கவே பயந்த நிலையில் உள்ளனர். கடற்படையினரின் அட்டூழியத்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது - என்றார். (த-14)

### அச்சுறுத்தல்

வாக்களிப்பு நிலையத்தை மாற்றித் தருமாறு கோர முடியும். அதற்காகப் போக்குவரத்தைக் காரணம் காட்டி வாக்களிப்பு நிலையத்தை மாற்றித் தருமாறு கோர முடியாது.

அச்சுறுத்தல் என்று கருதி, மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம் கடிதம் மூலம் கோரிக்கையை வாக்காளர் சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்படும் அவரது கோரிக்கை நியாயமானது என்று உதவித் தேர்தல்கள் ஆணையாளரால் கருதினால், வேறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். (த-5)

### நவீன

மையாளர்கள் உட்பட வாழ்க்கையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடைகளின் உரிமையாளர்கள் வாடகை மற்றும் வரிப்பணத்தை முறையாகவும் ஒழுங்காகவும் செலுத்தி வருகின்றபோதிலும் இவ்வாறு மின்சாரம் தடைப்பட்டிருப்பதால் தமது வியாபார நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பெரும் சிரமப்பட்டு வருவதாகக் கூறினர். இரவில் தான் எங்களுக்கு வியாபாரம் அதிகமாக நடக்கிறது. மூன்று நாள் மின்சாரம் இல்லாததால இரவு 9 மணிக்குப் பூட்டும் கடையைப் பின்னேரம் 6 மணிக்குப் பூட்டிவிட்டுப் போக வேண்டி உள்ளது. இதனால் எங்களுக்கு ஏற்படும் நட்டத்தை மாநகர சபையினர் ஈடுசெய்வார்களா?. ஒழுங்காகக் கழிவு நீர் போகக் கூடிய வசதியில்லை. வாய்க்காலுக்கு மேல் கடையைக் கட்டி வாடகைக்கு விடுகிறார்கள். ஆனால் காசு மட்டும் ஒழுங்காக வேண்டுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகின்றனர் வர்த்தகர்கள்.

குறித்த பிரச்சினை தொடர்பாக யாழ். மாநகரசபை ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது. அங்கு இவ்வாறான பிரச்சினைகள் எதுவும் இல்லை எனத் தெரிவித்தார்.

நேரில் சென்று பார்வையிட்டோம். உண்மையிலேயே இவ்வாறான பிரச்சினைகள் அங்கு உண்டு. அதன் பின்னரே உங்களுக்கு அழைப்பு விடுத்தோம் என ஊடகவியலாளர் தெரிவித்ததற்கு, இது தொடர்பாக எனக்கு முறைப்பாடுகள் எதுவும் வரவில்லை வந்தால் நடவடிக்கை எடுப்பேன்- என்றார்.

ஆனால் இப் பிரச்சினை தொடர்பாகக் குறித்த பகுதியின் மேற்பார்வையாளர்களுக்குக் கடை உரிமையாளர்கள் பலமுறை முறையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி)

### றெக்ஷயன்

வரை தாக்கல் செய்யப்படாததனால் அவரது வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு வருகின்றது.

ஊர்காவற்றுறை நீதிமன் றில் நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது.

அதன்போது வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான லண்டன் யசிந்தனுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதிவரை மறியல் நீடிக்கப்பட்டது. பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள வழக்கின் பிரதான சந்தேக நபரான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) மூன்றாவது சந்தேக நபரான றெக் ஷயனின் மனைவியான அனித்தா ஆகியோரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷயனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டில் அவர்கள் மூன்று பேரும் கடந்த நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

றெக் ஷயன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மறுநாள் தெரிய வந்தது. ஆனால் அவ ரைச் சுட்டது யார் என்ற மர் மம் நீடித்த நிலையில் ஈ.பி.டி.பி கட்சியின் வேலணையைச் சேர்ந்த யசிந்தன் கைது செய்யப்பட்டார். பின்னர் றெக்ஷயனின் மனைவி கைது செய்யப்பட்டார். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலமாக ஈ.பி.டி.பியின் அப்போதைய யாழ்.மாவட்ட அமைப்பாளரும், வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவருமான கமல் கொழும்பில் வைத்து குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் துருவித் துருவி விசாரணை மேற்கொண்டதன் பயனாக அவர் பயன்படுத்தியதாகக் கூறப்பட்ட துப்பாக்கி அவரது வாக்குமூலத்தின்படி ஊர்காவற்றுறையில் உள்ள வீட்டிலிருந்து மீட்கப்பட்டது.

அதன் பின்னர் அவர் உள்ளிட்ட மூன்று பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் கமல் மற்றும் அனித்தா சார்பில் யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. சுமார் 8 மாதங்கள் விளக்கமறியலின் பின்னர் இருவரும் கடந்த ஓகஸ்ட் மாதம் யாழ்.மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப் பட்டனர். யசிந்தனைப் பிணையில் விடுவிக்குமாறுகோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த-4)

### கடிதங்களை

முடியாத நிலையிலேயே கடற்படையினரின் கண்காணிப் பின்போது எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கைது செய்யப்பட்ட வண்ணம் உள்ளனர்.

மீனவர்களது பிரச்சினை தொடர்ச்சியாக இவ்வாறே நடந்து வருகிறது. பேச்சுக்கள் தோல்வியடைந்துள்ள நிலையில் இரு நாட்டு அரசும் மீனவர் பிரச்சினையில் மௌன. மாக உள்ளன. இலங்கை மீனவர்கள் தமது கடல் வளம் பாதிப்படைவதாகவும், இந்திய மீனவர்கள் இந்த மீன்பிடியை விட வேறு வழி இல்லை என்னும் நிலையிலுமே உள்ளனர். எனவே இருநாட்டு அரசுகளும் தான் பேசித் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்-என்றார். (த-14)

### ஆட்சேபனைக

ளைத் தாக்கிவிட்டு ஓடும் 'கிறீஸ் பூதம்' பிரச்சினை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அப்பகுதி இளைஞர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. இரவு முழுவதும் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரும் பொலிஸாரும் பொது மக்களைக் கண்டபடி தாக்கிக் காயப்படுத்தினர்.

பாதிக்கப்பட்டவர்கள் இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர். கடந்த 6 மாதங்களாக வழக்குக்கு நீண்ட தவணை போடப்பட்டிருந்தது. திங்கட்கிழமை அது மீண்டும் விசாரணைக்கு் எடுக்கப் பட்டது.

அப்போது எதிர்வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது தரப்பு ஆட்சேபனைகளை மன்றில் சமர்ப் பிக்குமாறு எதிராளிகளான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட எதிராளிகளுக்கு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் எதிராளிகளாகப் பாதுகாப்புச் செயலர் உள்ளிட்ட 10 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அப்போதைய இராணுவத் தளபதி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன், 51 டிவிசன் படைத்தளபதி ஜானக வல்கம, 512ஆவது பிரிகேட் தளபதி அஜித் பன்னவல, வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல்தஹுவத்த, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மநேவா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பண்டார, யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா ஆகியோரே ஏனைய எதிராளிகளாவர்.

கடந்த மே மாதம் 5ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நாட்டில் தற்போது 'கிறீஸ் பூதம்' பிரச்சினை இல்லைத்தானே என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் கருத்துத் தெரிவித்ததுடன் நீண்ட காலத்துக்கு அதனை ஒத்தி வைத்தார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழக்கு மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்குத் தள்ளுபடி செய்யப்படும் என்றே அதனைத் தாக்கல் செய்த சட்டத்தரணிகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யுமாறு பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார். (உ-5)

### 28 வயதில்

காணாமற் போனார்.

அப்போது அவருக்கு வயது 28. கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றைத் தொடர்ந்து அவர் காணாமல் போயிருந்தார். 25 வருடங்களில் அவரது பெற்றோரும் உயிரிழக்க அவர் பற்றிய விடயங்கள் மறக்கப்பட்ட நிலையில், இந்த மாத முதல் வாரத்தில் திடீரென அம்பாந் தோட்டை நீதிமன்றத்திலிருந்து அவரது பெற்றோருக்கு முகவரியிடப்பட்டு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதில் வைரவநாதனை அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கும்படி சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது.

இந்தக் கடிதம் உறவினர்களுக்குப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. வைரவநாதன் உயிருடன் இருக்கிறாரா? அவரது நிலை என்ன?

என்ற விவரங்கள் புரியாமல் அவர்கள் அல்லாடினர். நீதிமன்றத்தால் கடிதம் அனுப்பப்பட்ட நபர் தமது உறவினரான வைரவநாதன்தானா என்ற குழப்பமும் உறவினர்களிடம் நீடித்தது.

சரியான விவரங்களை அறிந்து கொள்ளவும் அங்கிருப்பவர் தங்கள் உறவினரான வைரவநாதன்தான் என்றால் அவரை அழைத்து வரவும் உறவினர்கள் சிலர் இங்கிருந்து புறப்பட்டு அம்பாந் தோட்டைக்குச் சென்றனர். அங்கு முதியோர் இல்லம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ள வைரவநாதன் தமது உறவினர்தான் என்பதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொண்டனர்.

அவரை நேரில் சந்தித்து அளவளாவினர். அவரை யாழ்ப்பாணம் அழைத்து வருவதற்கான நடவடிக்கையில் இறங்கினர். இதற்காக நீதிமன்றத்தின் உதவியை அவர்கள் நாடினர். எனினும், வைரவநாதன் தொடர்பான வழக்குக் கோவையை மீளப்பெறுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக உடனடியாக அவரை விடுவிப்பது சாத்தியப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. இதுதொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்காக அடுத்த மாதம் நீதிமன்றுக்கு வருமாறு நீதிமன்றம் உறவினர்களை நெறிப்படுத்தியிருப்பதாகவும் அறியவந்தது. (உ-86)

### தலைவருக்கு

வெட்டி பெரும் எடுப்பில் கொண்டாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் புலம் பெயர் தேசங்களிலும் பிறந்த நாள் கொண்டாடப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 1954 ஆம் ஆண்டு வல்வெட்டித் துறையில் பிறந்தார். இவரது தலைமையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரையில், இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம் இடம்பெற்று வந்தது.

கடந்த 2004 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்த காலத்தில், பிரபாகரனது 50 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு - கிழக்கு முழுவதும் 50 பானைகள் வைத்து பொங்கல் இடம்பெற்றிருந்தது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், தாயகத்தில் பிறந்த நாள் கொண்டாட்டம் நடைபெறுவதில்லை. புலம்பெயர் தேசம் எங்கும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. குறிப்பாக தமிழகத்தில் பெரும் கொண்டாட்டமாக, பிரபாகரனின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் இந்த ஆண்டு பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடுவதற்கு பொலிஸார் தடை விதித்திருக்கும் நிலையிலும், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் அதிகாலை 12 மணிக்கே, பட்டாசுகள் வெடித்துப் பெரும் எடுப்பில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. (த-5)

### கைதானவர்கள்

விசாரணைக்கு உட்படுத்தப் படுகின்றனர்.

கொலைக்குப் பயன்படுத்தப் பட்ட துப்பாக்கிய இவர்கள் எவ்வாறு பெற்றுக்கொண்டனர் என்பது குறித்தே தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அறியமுடிகிறது.

முன்னாள் போராளியான கிருஷ்ணசாமி நகுலேஸ் வரன் (வயது 40) கடந்த 12ஆம் திகதி இரவு கணேசபுரம் வெள்ளாங்குளத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப் பட்டார். அவரது சடலம் நீதிமன்றப் பணிப்புக்கு அமையப் புதைக்கப்பட்டது. கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ரி-56 துப்பாக்கியையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (உ-4)

### கூட்டமைப்பு

னார். அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து சத்தியப் பிரமாணமும் செய்து கொண் டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இருப்பதனை விட அரசுடன் இருந்தால் நிறையப் பணிகளைச் செய்ய முடியும் என்று அவர் தனது கட்சித் தாவலுக்குக் காரணம் தெரிவித்துள்ளார். (ற-4)

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை செந்தில்நாதன்

(விக்கிரமன்-முன்னாள் யாழ்.மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிறப்புப் பரிசோதகர்)

யாழ். புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை செந்தில்நாதன் 23-11-2014 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகேசு(பிரபல வர்த்தகர் பெரியகடை- யாழ்ப்பாணம்)-காமாட்சி தம்பதியரின் ஆசை மருமகனும், பரமேஸ்வரியின் (பரா) ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், கைலைமலைநாதன் மற்றும் சிறிரங்கநாயகி, செல்வநாயகி ஆகியோரின் அன்புத் தம்பியும், ரமேஸ், சுரேஸ், சுகந்தினி, சுவேந்திரன், ராதிகா ஆகியோரின் அருமைத் தந்தையும், சுதேந்தினி, யசோதா, ரமேசன், தர்சினி, பபிதாஸ் ஆகியோரின் அருமை மாமனாரும், சிவப்பிரகாசம், காலஞ்சென்றவர்களான வசந்தமலர், குலேந்திரன் மற்றும் பரமநாதன் (ஆனந்தி- மொன்றியல்), சோமசுந்தரம், யோகேஸ்வரி, சபாரத்தினம், சுதந்திராதேவி, வடிவேலு (கிராம சேவையாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜராஜேஸ்வரி, புஸ்பா, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலனும், விவேகா, விவேதா, கிசோன், தினோான், திசானா, மேர்வின், அர்வின், அனிக்கா, ஆர்ஜென், தாயகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நா.சிவப்பிரகாசம் (மைத்துனர்)
இல.165, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. 021 205 4248

ரமேஷ் (கனடா)
0014168888650

(41539)
(19.6)

# உரக்களஞ்சியசாலை அம்பாறையில் திறப்பு

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவசாயிகளின் நன்மை கருதி அங்கு உரக் களஞ்சியசாலை நேற்று செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டதுடன் விவசாயிகளுக்கு மானிய உரமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு தொடர்பில் விவசாய அமைப்பின் தலைவர் முத்துவேல் தவராசா கூறுகையில்,

அன்னமலை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் பகுதியில் கல்லோய நவோத யத் திட்டத்தின் கீழ், சுமார் 8,500 ஏக்கரில் நெற் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் உரத்தை களஞ்சியப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு இடமில்லாத நிலையில், அவர்கள் கடும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர். விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து, சுமார் 25 இலட்சம் ரூபா செலவில் புதிய உரக்களஞ்சிய சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் அன்னமலை நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் எச்.கே.பி.ஜி. ஹேரத், கிராம சேவகர்களான எஸ்.அலெக்சாண்டர், எஸ்.உதயகுமார் மற்றும் விவசாய அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். (ஒ-10)


குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

- Chennai Rs. 24,100/- upwards
- London Rs. 82,500/- upwards
- Paris Rs. 61,200/- upwards
- Frankfurt Rs. 65,800/- upwards
- Zurich Rs. 62,800/- upwards

London, Perth, New York, Auckland, Doha, Thiruchi, Delhi, Bangkok, Honk Kong, Guangzhou, Narita, Melbourne, Toronto, Sydney, Madurai, Bombay, Singapore, Malaysia, Rome, Dubai

ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818

Skyline


## கண்ணீர் அஞ்சலி



கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின்
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
S. சத்தியேந்திரன் அவர்களின்
அன்புத் தந்தை
**கந்தையா சுந்தரலிங்கம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம். (41530) (45.6.3)

## பத்தாம் ஆண்டு நினைவு

26.11.2014



மலர்வு
14.12.1983

உதிர்வு
26.11.2004

பாலையா
நிர்மலகாந் (யூலீ)

நினைவழியாச் சுவடுகள் நீ விட்டுச்சென்றவை
கனவுகலையா எண்ணங்கள் உன்னிடத்தில்
- பிறந்தவை
பத்தாண்டுகள் கடந்தாலும் நூறாண்டுகள் கடந்தாலும்
தாரணவருடம் கார்த்திகை திங்களில்
தீபம்போல் சுடர்விடும் உன் நினைவுகள்
என்றும் அணையாமல் கார்த்திகைத்தீபமாய்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி அப்பையா இராஜேஸ்வரி



(முன்னாள் பாலர்பாடசாலை ஆசிரியை)

சம்மட்டி ஓலை, மானிப்பாய் வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அப்பையா இராஜேஸ்வரி 20.11.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - நாகம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, துரைராசா, கனகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சகுந்தலா மற்றும் இந்திராதேவி,சந்திரலீலா ஆகியோரின் மைத்துனியும், அனுசியா, காலஞ்சென்ற ரஞ்சன் மற்றும் ரவீந்திரன், அரவிந்தன், கோபிநாத், பிரியந்தா, திவாகரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2014) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.பிரியந்தா
(மருமகள் - லண்டன்)

T.P. 0044 7448 495161 (41525)(45.6.3)

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி.
சிவபாக்கியம்(தவமணி) தம்பிராஜா
திதி : 27.11.2014

மலர்வு 06.07.1936 — உதிர்வு 22.11.2009

அன்புத்தெய்வமே !
மறைந்தும் மறையாத எமது குடும்ப
விளக்கே ! நீங்காது என்றும் எம் நெஞ்சத்து
நினைவலைகள்

கணவன்,பிள்ளைகள்,மருமக்கள்,
சகோதரி,பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

சிவமகால்
ஏழாலை தெற்கு
சுன்னாகம்.

தகவல் :
குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் B.S.Lane (பள்ளிவாசலுக்கு அருகில்) 02 பரப்பு 02 குழியைக் கொண்ட வீட்டுடன் கூடிய காணி விற்பனைக் குண்டு. விலை பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 918 4617,
077 766 7375 (சி. 17582) (45.6)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் வைத்திலிங்கம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல.69/2, சிவநகர் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வைத்திலிங்கம் 24.11.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லமுத்துவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற நடேஸ்வரி, நடேசன், சிவபாக்கியம் மற்றும் தவமணி, தனலட்சுமி, தியாகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருநாவுக்கரசு, பறுபதம், பொன்னம்மா (கனடா), வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் இலட்சுமணன் (கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம், உருத்திர புரம் மேற்குகிளை முகாமையாளர்), சுந்தரராசா (கிராம உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம், அத்தியடி J/78 ), காலஞ்சென்றவர்களான ஜோசப் இலங்கைநாதன்,மகேந்திராசா மற்றும் பராசத்தி, யாதவராயர், சிவபாக்கியம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆனந்தசொரூபியின் (கனடா) சிறிய தந்தையும், உமாசங்கரின் (கனடா) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை. செல்லமுத்து
(மனைவி)

69/2, சிவநகர்,
உருத்திரபுரம். (47944)(45.6.3)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பொன்னுத்துரை



நயினாதீவு, 2 ஆம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பொன்னுத்துரை 23.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி- மங்களநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருவருட்செல்வியின் அன்புக் கணவரும், புஸ்ப்பலதா (இத்தாலி), பத்மநாதன்(கொழும்பு), காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் சிவலோகநாதன், திவாகரன், ஸ்ரீபாலன் (ஆசிரியர், சன்மார்க்க ம.வி), பகுதிநேரம் யா/உயரப்புலம் மெ.மி. வித்தியாலயம்) மற்றும் ஜெயலதா (கொழும்பு), பிரேமலதா(கனடா), ஜெயக்காந்தன் (சுவிஸ்), நிரஞ்சனா (இந்தியா), சரத்பாபு (முரளீதரன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாகரன் (இத்தாலி), பரமசொரூபி, வடிவாம்பிகை, சுமேந்திராதேவி, நிர்மலா, றோகினி, சக்திதரன் (கொழும்பு), சிவரூபன் (கனடா), சகிலா புகழேந்திரன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனும், மதுரன் (இத்தாலி)", கிஷாந் (இத்தாலி), விதுசிகன்,தனுசிகன், ஜனுசிதா, யாதவன், ஐஸ்வர்யா, லாவண்யா, குகப்பிரியன், மதுசன், மதுசா, லக்சியன், ஸ்ரீதரன், காவியன்(கனடா), ஓவியன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கோவிந்தபிள்ளை, விசாலாட்சி, நடராசா மற்றும் செல்லம்மா, நல்லதம்பி (சுவிஸ்), யோகாம்பிகை, சிதம்பரம் (சோதி-கனடா), சிவக்கொழுந்து, வரலட்சமி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான முத்துவேலு, சுந்தரமூர்த்தி, தனபாலசிங்கம், யோகநாதன், முத்துலிங்கம், பரமேஸ்வரி மற்றும் கந்தசாமி, தனலெட்சுமி, ஜீவானந்தம் (அமெரிக்கா), தனலட்சமி, புவனேஸ்வரி, அமிர்தகௌரி(கனடா), சிவகுருநாதன், செந்தில்நாதன் (இந்தியா), குலசபாநாதன், காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் ஞானசரஸ்வதி, வேதநாயகி, கிரிசாம்பாள் ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரன், முருகதாஸ் (கனடா), விக்கினேஸ்வரி, பராபரிதேவி (இந்தியா), மகேஸ்வரி, பத்மலோஜினி, காலஞ்சென்றவர்களான நடராசா, மகாலிங்கம் மற்றும் கோகுலராசா ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு, 2 ஆம் வட்டாரம்.
077 625 1572, 077 542 2964 (41528) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஐ.தே.க. அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம், நவ. 26
ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து, தொடர்ச்சியாக தேர்தல் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹலீமின் காரியாலயத்தின் மீது நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.



துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட நேரத்தில் அலுவலகத்தில் யாரும் அங்கிருக் கவில்லை. அதனால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. அலுவலக ஜன்னல் கண்ணாடிகள் மாத்திரமே நொருங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ.ஹலீம் அலுவலகத்திற்கு நேற்று பிற்பகல் சென்றுள்ளார். இதன் போது கண்ணாடி, ஜன்னல்கள் உடைக்கப்பட்டிருப்பதையும், சுவரில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அவதானித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு (நேற்று முன்தினம்) இடம்பெற்றிருக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். சம்பவம் நடைபெற்ற போது யாரும் இல்லாமையினால், உடனடியாக இது தொடர்பில் தனக்குத் தெரியவரவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி சுந்தரம்



கல்லூரி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி சுந்தரம் 25.11.2014 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்புத் தாயாரும், சிவமலரின் (ஆசிரியை-யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி, பருத்தித்துறை.
077 474 7374 (52023) (4.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

40 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. 077 239 5849

## தவறிவிட்டது

அரியாலையைச் சேர்ந்த N. துஸ்யந்தன் (841472250 V) என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி பத்திரம், திணைக்கள அடையாள அட்டை என்பன 24.11.2014 அன்று வட்டக்கச்சி வில்சன் வீதிக்கும் கல்மடுவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

0777 430 910

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயத்தில் 2014ஆம் வருட 05ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த திரு.திருமதி தஜீதரன் சுதர்ஜினி தம்பதியரின் ஏக புதல்வி

**தரணிகா** அவர்களைப் பாராட்டி

மேன்மேலும் நிறைந்த கல்விச் செல்வத்தைப் பெற்றுயர வாழ்த்துவதுடன், அவருக்குக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும், பாராட்டி வாழ்த்துகின்றோம்.

06, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
தாத்தா, மாமா, அத்தை, கஸ்மி மச்சி,
கண்ணன் சித்தா சித்தி, காந்தன் சித்தா சித்தி,
இவர்களுடன் தம்பி சரன்.

## மரண அறிவித்தல்

### திருமதி சாவித்திரி சத்தியநாதன்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கு அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாவித்திரி சத்தியநாதன் (24.11.2014) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - செல்லம் தம்பதியரின் அன்பு மகளும், இராசையா - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சத்தியநாதனின் அன்பு மனைவியும், நாகரூபா (லண்டன்), சத்தியரூபன் (கண்ணன்), வசந்தரூபன் (லண்டன்), சிவரூபன் (ஒறியன் பினான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கருணாகரன் (சுவிஸ்), வனேஸ்வரி (அச்சுவேலி), மதனாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், சசிக்குமாரின் (லண்டன்) அன்பு மாமியும், பரராஜசிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, கந்தையா, மகாலக்சுமி, பரமேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), மகேஸ் வரி, சரசவாணி, கோமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சயானா, தாட்சாயினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2014) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
இருபாலை கிழக்கு, இருபாலை. (41535)(45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.


## யாழ் நகரில் முதன்முறையாக

க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான
கல்வி கருத்தரங்கு

**Edu-Info 2014**

உங்கள் உச்சகட்ட திறனை வெளிப்படுத்தல்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டி கல்வி கருத்தரங்கு - 2014

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட
தமிழ் மொழி மூலமான பயிற்சியாளர்

திகதி : டிசம்பர் 03 ஆம் திகதி - 2014
இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
நேரம் : முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை.

பங்குபற்றுவோர் எண்ணிக்கை : 1000 - 1500 வரை

- உங்களது பெறுபேறுகளை வெற்றிகரமாக்கிக்கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு
- ஒரு சாதனையாளராக வளர விரும்புகிறீர்களா?
- உங்களது பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எதிர்பார்ப்பவரா?
- உங்கள் வாழ்க்கையினை வெற்றிகரமாக்க எண்ணும் ஒருவரா?

அனுமதி இலவசம்

அவ்வாறாயின் இந்த கல்வி கருத்தரங்கு உங்களுடையதே.
உடனடியாக பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் உங்கள் வாழ்க்கைப் பாதையினை சிறந்த வழியில் மாற்றிக் கொள்ளுங்கள்.

பதிவுகளுக்கு உடன் அழையுங்கள்:
சசிகுமார் - 077 060 4125
ரவீந்திரன் - 077 5166 777
தர்ஷிகா - 077 570 2544
நரேன்குமார் - 077 0487 361

ஊடக அனுசரணை உதயன்


## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் சிவகுரு (உடுவில்)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் லவ்லேன் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் சிவகுரு 24.11.2014 திங்கட்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கோவிந்து சிவகுருவின் அன்பு மனைவியும், மணிவண்ணன் (சுவிஸ்), சிவகுமார் (கொலண்ட்), மலர்விழி ஆகியோரின் அன்புத் தாயும், அருள்நங்கை (சுவிஸ்), அன்யா (கொலண்ட்), சிவகுமாரன் (பொதுச்சேவைகள் ஆணைக்குழு, வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், அபிக்கா, அபித்தா (சுவிஸ்), சஞ்ஜீவ், சுனித்தா (கொலண்ட்), அக்ஷனா, ஆர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"கோகுல பவனம்",
லவ்லேன், உடுவில். (41537) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் முத்துக்குமாரு



அரசடி வீதி, இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முத்துக்குமாரு நேற்று (25.11.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் (ராசாத்தி) அன்புக் கணவரும், தம்பிஐயா (Canada), நாகம்மா (வடிவு), காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜேஸ்வரி, புவனேந்திரராணி (France), கதிர்காமநாதன் (Canada), மகாலட்சுமி (செல்லா), கீதா (Swiss), ராசா (Swiss), சிறி (Swiss) ஆகியோரின் மைத்துனரும், ரேணுகா (London), ரஜேந்திரன் (London), துஷிக்கா (London), தர்சிகா (General Hospital Trincomalee) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரவணபவன் (பவன்-London), இந்திரரஞ்சினி (London), காந்தரூபன் (London) வசந்தன் (General Hospital Trincomalee) ஆகியோரின் அன்பு மாமனும், அபிஷான் ஹரினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி, இருபாலை,
கோப்பாய். தொ.இ: 077 293 8418 (41538) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஜனாதிபதியின் சுவரொட்டியில் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ்

## கத்தோலிக்கத் தலைவர்கள் கண்டனம்

கொழும்பு,நவ.26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் சுவரொட்டிகளில் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் உருவப்படம் பொறிக்கப்பட்டுள்ளமையை கத்தோலிக்க தலைவர்களும் தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்டித்துள்ளனர்.



இந்த சுவரொட்டிகள் கொழும்பில் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன என்று பெபரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த சுவரொட்டிகளை யார் ஒட்டியது என்பது தெரியவரவில்லை என்றும், அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும் என்று அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை கத்தோலிக்க தலைவர்களும் இந்த சுவரொட்டி விடயம் தொடர்பில் கண்டனத்தை வெளியிட் டுள்ளனர். இந்தநிலையில் குறித்த சுவரொட்டிகளை அகற்ற வேண்டும் என்று தேசிய கத்தோலிக்க நிலையத்தின் பணிப்பாளர் வணக்கத்துக்குரிய தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையில் பாப்பரசரின் உருவப்படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் தொடர்பில் தமக்கு எந்த பொறுப்புக்களும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ற)

# பேஸ்புக், ருவீட்டரில் மைத்திரிக்கு வரவேற்பு

## பின்தொடர்வோர் எண்ணிக்கை கிடுகிடுவென உயர்கின்றது

யாழ்ப்பாணம், நவ. 26

முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிரணி பொது ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அவரது பேஸ்புக் மற்றும் ருவீட்டர் வலையமைப்புக்களை அதிகமானோர் பின்தொரடத் தொடங்கியுள்ளனர்..

குறிப்பாக பேஸ்புக்கில் மாத்திரம் கடந்த 5 தினங்களில் 50 ஆயிரம் பேர் வரையில் அவருக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சராக இருந்த போது அவரது பேஸ்புக் பக்கத்துக்கு 13 ஆயிரம் பேர் வரையிலேயே விருப்பம் தெரிவித்திருந்தனர். ஆனால் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக கடந்த 21 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவின் பெயர் அறிவிக்கப்பட்டதும், விருப்பு கிடுகிடுவென உயர்ந்தது. கடந்த 5 நாள்களில் மாத்திரம் 50 ஆயிரம் பேர் வரையில் விருப்புத் தெரிவித்துள்ளனர்.

அதே போன்று அவரது உத்தியோகபூர்வ டுவீட்டர் கணக்கையும், அவர் பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அதிகளவானோர் பின் தொடருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

## அச்சுறுத்தும் சுவரொட்டிகள் வன்னியில்

உடையார்கட்டு, வல்லிபுரம், தேவிபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மக்களை அச்சுறுத்தும் விதமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. "சந்தோசமாக வாழ விருப்பமா? அல்லது தேவை இல்லாம வீணா சாக விருப்பமா? முடிவு உன் கையில்..." என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளே இவ்வாறு ஒட்டப்பட்டுள்ளன. உலகெங்குமுள்ள தமிழர்களால் நாளை மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையிலேயே மக்களை அச்சுறுத்தும் விதமாக இந்தச் சுவரொட்டிகள் இனந்தெரியாதோரால் ஒட்டப்பட்டுள்ளன. (ற-சி)

# தெரிவுக்குழுவுக்கு வருமாறு அரசு மீண்டும் அழைப்பு

கொழும்பு, நவ.26

"அதிகாரப் பரவலாக்கலுக்கு அரசு தயாராகவே இருக்கிறது. இதுகுறித்து பேச்சு நடத்த தெரிவுக்குழுவுக்கு வருமாறு ஐக்கியத் தேசியக் கட்சி, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய எதிர்க்கட்சிகளுக்கு பல முறை அழைப்பும் விடுக்கப்பட்டது.



எனினும், இவர்களோ தெரிவுக் குழுவுக்கு வருகைத் தராது தற்போது நிறைவேற்று அதிகாரமுறை அழிப்புக் கோஷத்தை கையில் எடுத்து அரசியல் நடத்தி வருகின்றனர்"

இவ்வாறு அமைச்சர் டிலான் பெரேரா குற்றஞ்சுமத்தினார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரால் நேற்று முற்பகல் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை ஒழிப்பு பரப்புரையை வைத்து மட்டுமே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ளார்.

ஆனால், இப்போதைய சூழ்நிலையில் நாட்டு மக்கள் இந்த தேர்தல் முறைமை ஒழிக்கப்பட வேண்டு மென்று கருதுகின்றார்களே ஒழிய நிறைவேற்று முறை அழிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தவில்லை.

அதுமட்டுமன்றி, ஒருவேளை மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் அவரால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க முடியாது.

ஏனெனில், மூன்றில் இரண்டு நாடாளுமன்றப் பலம் எமக்கே இருக்கின்றது. நாட்டின் யாப்பை மாற்றியமைக்க வேண்டுமெனில் நாடாளுமன்றத்தினால் மட்டுமே முடியும்.

ஆகவே, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நாம் நினைத்தால் மட்டுமே இல்லா தொழிக்க முடியும்.

எனினும், எமது அரசானது அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பேச்சு நடத்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியத் தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்கு அரசு பல முறை அழைப்பு விடுத்தது.

அப்போதெல்லாம் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி அக்கட்சிகள் வர மறுப்புத் தெரிவித்தன. ஆனால், தற்போதோ நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என இவர்கள் கோஷம் எழுப்புகின்றனர். இதை எந்தவகையில் ஏற்றுக் கொள்வது? உண்மையைச் சொல்லப் போனால் அதிகாரப் பரவலாக்கலை குழப்பியதே இந்த எதிர்க்கட்சியினர் தான்" என்றார். (ற-சி)

# பரப்புரைகளுக்கு வியூகம் வகுக்க சிறிகொத்தா செல்கிறார் மைத்திரி

## ரணில் குழுவுடன் இன்று பேச்சு ஜி-20 அணியும் பங்கேற்பு

கொழும்பு. நவ.26

பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று முற்பகல் 10 மணிக்கு ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெறவுள்ளது.

> "தேர்தல் விஞ்ஞாபனம், தேர்தலை எதிர்கொள்வதற்கான பொறி முறையை வகுத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து இதன் போது இருவரும் விரிவாக கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசிலிருந்து வெளியேறிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சித் தலைவருடன் ஐ.தே.க. தலைமையகத்தில் நடத்தும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

எதிர்க்கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம், தேர்தலை எதிர் கொள்வ தற்கான பொறி முறையை வகுத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து இதன் போது இருவரும் விரிவாக கலந்துரையாடவுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபைத் தலைவர்கரு ஜயசூரிய உள்ளிட்ட தலைமைத்துவ சபை உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர். அத்துடன், கட்சியின் அமைப்பாளர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான முக்கிய பொறுப்புகள் இந்தத் தரப்பினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வெற்றியை உறுதி செய்வதற்காக கிராம மட்டத்திலிருந்து தேர்தல் பரப்புரைகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் தேர்தல் பரப்புரை யுக்திகள் தொடர்பிலும் இவர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக ஐக்கிய தேசியக் கட்சி அமைத்துள்ள ஜி-20 அணியும் இந்தச் சந்திப்பில் கலந்தகொள்ளவுள்ளது. (ற-சி)

## தொடர்ச்சிகள்

### தாவுவதற்குத்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட பெருமாள் இராஜதுரை நாடாளுமன்ற உறுப்பினராக 2010 ஆம் ஆண்டு தெரிவாகியிருந்தார். ஆளும் கட்சி உறுப்பினராக இருந்த இவர், கடந்த 21 ஆம் திகதி எதிர்க்கட்சிக்குத் தாவப் போவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம், கட்சி உறுப் புரிமையைப் பெற்றுக் கொண்டார்.

இதன் பின்னர், எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

"ஆளும் கட்சியைச் சேர்ந்த 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் எதிர்க்கட்சியுடன் இணையக் காத்திருக்கின்றனர். ஆளும் கட்சியில் இருந்து கொண்டு மக்களுக்காக எதனையும் செய்ய முடியாத நிலையே இருக்கின்றது. மலையக மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்தவால், 2005 ஆம் ஆண்டு, 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களின் போது கொடுக்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. இதனாலேயே எதிர்க் கட்சியில் இணைந்து கொண் டுள்ளேன்." என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

### எம்மிடம்

டன், நேற்று பண்டாரநாயக்காவின் சமாதிக்குச் சென்றிருந்தார் சந்திரிகா. அங்கு அஞ்சலி நிகழ்வுகள் முடிந்ததும் செய்தியாளர்களிடம் கருத்துக் கூறும்போதே இவ்வாறு அவர் கூறினார்.

"நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் ராஜபக்ஷாக்களின் கோப்புகளை எடுப்போம். எம்மிடமும் கோப்புக்கள் இருக்கின்றன. இதற்கு மேல் எதுவும் சொல்ல விரும்பவில்லை"- என்று அவர் கூறியுள்ளார். (ற-5)

### மஹிந்த

யான பொறுப்பாகும். நான் சர்வதேசத்துக்கு ஒன்றைக் கூறுகிறேன். போர்க் குற்றங்களுக்காக ஜனாதிபதியையோ அல்லது வேறு எந்த தலைவரையோ சர்வதேச நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்ல நாம் அனுமதிக்கமாட்டோம். தேர்தலில் அவர் வெற்றி பெற்றாலும் சரி, தோல்வியுற்றாலும் சரி, ஜனாதிபதியை போர்க் குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அனுமதியோம் - என்று மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### பல்கலையை

கும்போது போர்க் காலத்தில் காணப்பட்ட சூழலையே மாணவர்கள் உணர்கின்றனர். இது மாணவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றும் அந்த ஒன்றியம் கூறியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

விரிவுரைகள் தொடரும் என்று பீட நிர்வாகங்கள் அறிவித்திருந்தன. ஆனால் பல மாணவர்கள் விரிவுரைகளுக்கு வரவில்லை. விடுதியில் தங்கியிருந்த மாணவர்களும் அச்சம் காரணமாக வெளியேறியுள்ளனர்.

ஏனைய பல்கலைக் கழகங்களில் இந்தக் காலப்பகுதியில் சுமுகமான சூழ்நிலை காணப் படுகின்றது. ஆயினும் எமது பல்கலைக்கழகத்தில் மாத்திரம் இவ்வாறான அசாதாரண சூழ்நிலை காணப்படுவது மாணவர்களின் இயல்பான கற்றலுக்குப் பாதிப்பாக அமைகின்றது.

மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கும், இன்னல்களுக்கும் மத்தியிலேயே தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்கின்றனர். அவ்வாறான நிலையில் இராணுவ, புலனாய்வாளர்களின் குவிப்பு காரணமாக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு மாணவர்களின் சுமுகமான கற்றலுக்கும், பல்கலைச் செயற்பாட்டுக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய சம்பவங்கள் எதிர்கா லத்தில் இடம்பெறக்கூடாது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## குற்றங்களும் கைதுகளும்

ஏறாவூர்

### ஹெரோயின் கடத்திய குருநாகல் வாசி பிடிபட்டார்

ஏறாவூர், நவ. 26
பஸ் வண்டியில் ஹெரோயின் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் குருநாகலைச் சேர்ந்த ஒருவர் ஏறாவூரில் ஞாயிற்றுக்கிழமை காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைதானவரிடம் இருந்து 484 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.
ஹெரோயின் கடத்தல் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கொழும்பு, அக்கரைப்பற்று வழித்தடத்தில் பயணித்துக்கொண்டிருந்த பஸ் ஒன்றை ஏறாவூரில் இடைமறித்து ஏறாவூர் பொலிஸார் பஸ்ஸைச் சோதனையிட்டனர்.
இதன்போது குறித்த நபரிடம் ஹெரோயின் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ—10)

மட்டக்களப்பு

### மாமாங்கேஸ்வரர் கோயிலில் திருட முற்பட்டவர் சிக்கினார்

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் கோயிலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு உண்டியல்களை திங்கட்கிழமை அதிகாலை உடைத்து பணம் திருடிக்கொண்டிருந்த சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.
கோயிலுக்கு முன்பாகவுள்ள குறிப்புப் புத்தகத்தில் கையொப்பமிடுவதற்கு வந்த பொலிஸார், கோயிலின் உட்புறத் திலிருந்து சத்தம் வந்ததை அவதானித்து, முன்கதவை உடைத்துப் பார்த்தபோது, ஒருவர் உண்டியலில் இருந்து பணத்தைத் திருடிக்கொண்டிருந்தமை தெரியவந்தது. இந்த நிலையிலேயே அவரை கைதுசெய்ததாகவும் பொலிஸார் கூறினர்.
மேலும், இந்தச் சந்தேக நபர் கோயில் காவலாளியாக கடமையாற்றுபவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இதுதொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)

வவுனியா

### கழிவுதேயிலைத் தூளுடன் வவுனியாவில் இருவர் கைது

வவுனியா — ஈச்சங்குளம் பிரதேசத்தில் 455 கிலோ கிராம் நிறையுள்ள கழிவு தேயிலை தூள் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வவுனியா பொலிஸாரால் அவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
கண்டியைச் சேர்ந்த அவர்கள் இருவரும் குறித்த கழிவு தேயிலைத் தூளை வவுனியா பிரதேசத்தில் விற்பனை செய்வதற்காக கொண்டு சென்றபோதே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீண்ட காலமாக வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட பிரதேசங்களில் இவ்வாறு கழிவு தேயிலையை விற்பனை செய்து வந்துள்ளனர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (வ)

# தவறுகள் இருந்தாலும் மஹிந்தவுக்கே ஆதரவு

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்



கொழும்பு, நவ.26
தற்போதைய அரசில் தவறுகள் இருந்தாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு வழங்குவது என்று தீர்மானித்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார் தேசிய மொழிகள் நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.
கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றோம். ஜனாதிபதியிடம் அதை வலியுறுத்துகின்றோம். எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதிருப்பினும், அரசில் தவறுகள் இருப்பினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவது என்று தீர்மானித்துள்ளோம் - என்று அவர் தெரிவித்துள்ளார்.
இதன்போது அமைச்சர் ரெஜினோல்ட் கூரேயும் கருத்துத் தெரிவித்தார்.
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் பெரும்பான்மையானோருக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது செய்வதற்கான தேவை இருக்கின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.
இது தீயது, ஊழல் மிக்கது என்று கூறுகின்ற விடயத்தை கவனத்தில் எடுத்து கொண்ட ஜனபதிபதி ஒருவர் இருப்பதாக இருந்தால் அது மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே.
இந்த விடயத்தை மாற்றுவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்ற பெரும்பாலானவர்களுக்கு தேவை இருக்கின்றது.
எமது சுயாதீனத்தையும் அபிமானத் தையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்வது எவ்வாறு என்ற பிரச்சினை தான் தற்போது காணப்படுகின்றது. - என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார். (ற)

### இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கேரள கஞ்சா இந்தியாவில் மீட்பு

இராமநாதபுரம், நவ.26
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக எடுத்துவர முற்பட்ட 6 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய கேரள கஞ்சாவை கியு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
சுமார் 250 கிலோகிராம் எடைகொண்ட கேரள கஞ்சா கீழைக்கரைப் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டதாக கியு பிரிவு பொலிஸாரின் அத்தியட்சகர் கென்னடி தெரிவித்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் 3 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம், உந்துருளி, மற்றும் படகு என்பனவற்றையும் தாம் கைப்பற்றியுள்ளதாக அந்த அதிகாரி இந்திய ஊடகங்களுக்கு தகவல் வெளியிட்டுள்ளார். (வ)

### மேர்வினின் மகனுக்கு மறியல் நீடிப்பு

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வாவுக்கு இம்மாதம் 28 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள இரவு விடுதியொன்றில் வைத்து ஸ்கொட்லாந்து பொறியியலாளர் மற்றும் அவருடைய காதலியை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டு மாலக்க சில்வா கைது செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் நேற்று கொழும்பு பிரதான மஜிஸ்திரேட் நீதிமன்றில் இடம்பெற்ற மேற்படி வழக்கில் மாலக்க சில்வாவுக்கு விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (வ)




## மாற்றுவலுவுடைய 29 குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கும் அமெ. தம்பதி



வொஷிங்டன், நவ.26
அமெரிக்காவில் ஒரு தம்பதியினர் மாற்றுவலுவுடைய 29 பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்த்து வருகின்றனர்.
அமெரிக்காவின் வெர்ஜினிய மாநிலத்தில் உள்ள பாலிங் வோட்டர்ஸ் பிரதேசத்தைச் சேர்ந்த ஜெனி பிறிக்ஸ் பால் என்ற தம்பதியினர் தாங்கள் பெற்ற 5 குழந்தைகளுடன் உலகெங்கிலும் உள்ள 29 மாற்றுவலுவுடைய குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கின்றனர்.
மெக்ஸிகோ, ரஷ்யா, உக்ரைன், பல்கேரியா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த உடல் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை அவர்கள் வளர்க்கின்றனர்.
அவர்கள் வளர்க்கும் குழந்தைகளுக்கு புற்றுநோய், இளம்பிள்ளைவாதம், சிறுநீரகப் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது குறித்து இந்தத் தம்பதியினர் கூறுகையில், எங்களுக்கு குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவது மிகவும் பிடிக்கும். இன்னும் பல குழந்தைகளை தத்தெடுக்க ஆசைப்படுகிறோம் என்றும் தெரிவித்துள்ளனர். (வ)

## நகைகளுடன் இலங்கையர் சென்னையில் கைதானார்



சென்னை, நவ.26
இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு 60 பவுண் தங்க நகைகளைக் கடத்திச் சென்ற ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.
சென்னை மீனம்பாக்கம் அண்ணா சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்றுக் காலை கொழும்பில் இருந்து ஒரு விமானம் வந்தது. அதில் வந்த பயணிகளை சுங்கப் பிரிவு அதிகாரிகள் சோதனை செய்தனர்.
அப்போது இலங்கையை சேர்ந்த அகமது அனுப் (வயது 23) என்பவர் சுற்றுலா விசாவில் வந்திருந்தார்.
அவர் மீது சந்தேகம் கொண்ட அதிகாரிகள் அவரது உடைமைகளைச் சோதனை செய்தனர். அதில் வெள்ளி முலாம் பூசப்பட்ட நகைகள் இருந்தன. அவை கவரிங் நகைகள் என்றும் சென்னையில் விற்பனை செய்யவே அவற்றைக் கொண்டு வந்ததாகவும் அவர் கூறினார். ஆனால் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் அந்த நகைகளைப் பரிசோதனை செய்து பார்த்தனர்.
அப்போது தங்க நகைகள் மீது வெள்ளி முலாம் பூசப்பட்டு இருந்ததைக் கண்டு பிடித்தனர்.
அவர் மொத்தம் 60 பவுண் தங்க நகைகளைக் கடத்தி வந்துள்ளார். அவற்றின் மதிப்பு இந்திய ரூ.14 லட்சத்து 50 ஆயிரம்.
இதுதொடர்பாக இலங்கை வாலிபர் அகமது அனுப்பை கைதுசெய்து தங்க நகைகளைப் பறிமுதல் செய்ததுடன் மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

# இலங்கைக்குக் கடத்தத் தயாரான 250 கிலோ கிராம் கஞ்சா சிக்கியது

## இராமநாதபுரத்தில் 11 பேர் கைது

இராமநாதபுரம்,நவ 26

இராமநாதபுரத்தில் இருந்து இலங்கைக்குக்கடத்தவிருந்த 2 கோடி இந்திய ரூபா மதிப்பிலான 250 கிலோ கிராம் கஞ்சா மற்றும் வாகனங்களைப் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளதுடன் கடத்தலில் ஈடு பட்ட 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம் நீண்ட கடற்கரையை கொண்ட பகுதி. இலங்கைக்கு மிகவும் அருகாமையில் இருப்பதால் இந்தப் பகுதி ஊடாக அதிகமாகக் கடத்தல் இடம்பெற்று வருகின்றது. கடந்த ஒரு ஆண்டுக்குள் இலங்கையில் இருந்து கீழக்கரை, இராமேஸ்வரம் போன்ற கடலோரப் பகுதிகளில் தங்கம், கஞ்சா மற்றும்



போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் அதிகம் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் கீழக்கரையில் இருந்து இலங்கைக்குக் கஞ்சா கடத்தல் நடைபெறவுள்ளதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து இராமநாதபுரம்-கீழக்கரை இடையே கிழக்குக் கடற்கரைச் சாலையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டபோது அந்த வழியே வந்த காரை நிறுத்திச் சோதனையிட்டனர். அதில் சாக்கு மூடைகள் மறைத்து வைத்திருப்பதைக் கண்டு பிடித்தனர். மூடைகளைப் பிரித்துச் சோதனையிட்ட போது அவற்றில் 250 கிலோ கஞ்சா இருப்பது தெரிய வந்தது.

காரில் இருந்த கீழக்கரையைச் சேர்ந்த 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கார் உரிமையாளர் உட்பட 3 பேர் தப்பி ஓடிவிட்டனர்.

இதனையடுத்துக் கஞ்சாவையும், கார் மற்றும் 2 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். சென்னையில் இருந்து இலங்கைக்குப் படகு மூலம் அனுப்பி வைப்பதற்காக கஞ்சா கொண்டு வரப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (த)

# 450 கிலோ கழிவு தேயிலையுடன் வவுனியாவில் இரண்டு பேர் கைது

வவுனியா, நவ. 26

வவுனியா, தரணிக்குளம் பகுதியில் 450 கிலோகிராம் கழிவு தேயிலையுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தரணிக்குளம் பகுதியில் விசேட நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த லொறியை மறித்து சோதனையிட்டபோது அதில் டை அடிக்கப்பட்ட 450 கிலோகிராம் பாவனைக்குதவாத கழிவு தேயிலை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த லொறி மீட்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அதில் பயணித்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரும் கழிவு தேயிலையைக் கிராமப் புறக் கடைகளில் மலிவு விலைக்கு விற்று வந்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (த-402)

# 30 ஆம் திகதியன்றும் தபால் மூலம் வாக்கு

யாழ்ப்பாணம், நவ. 26

ஜனவரிமாதம்இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு அடுத்த மாதம் 23 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. குறித்த தினங்களில் வாக்களித் தவறுபவர்கள் 30 ஆம் திகதி மாவட்டச் செயலகங்களில் தமது தபால் மூல வாக்கைச் செலுத்த முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று கடமைகளில் ஈடுபடவுள்ள அரச உத்தியோகத்தர்கள், தபால்மூல வாக்களிப்புக்கு எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

தபால் வாக்குச் சீட்டுக்கள் டிசெம்பர் 15 ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும். அதன் பின்னர் டிசெம்பர் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் , 24 ஆம் திகதி புதன்கிழமையும் சகல அரச திணைக்களங்களிலும் வாக்களிப்பு இடம்பெறும்.

மேற் குறித்த இருநாள்களிலும் வாக்களிக்கத் தவறும் உத்தியோகத்தர்கள் டிசெம்பர் 30 ஆம் திகதி புதன்கிழமை, மாவட்டச் செயலகத்துக்குச் சென்று வாக்களிக்க முடியும்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தியே வேட்பு மனு தாக்கல் மற்றும் தேர்தலுக்கான திகதிகள் குறிக்கப்பட்டதாகவும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-5)

# நாவாந்துறையில் நேற்றும் கல்லெறி

## பிரதேச செயலர் சென்றிருந்தபோது

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்.நாவாந்துறைப் பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற சூழ மோதலையடுத்து அதனைச் சீர்செய்யும் வகையில் யாழ். பிர தேச செயலர் நேற்று அங்கு சென்றபோது கல்வீச்சு இடம்பெற்றுள்ளது. பிரதேச செயலர் சென்.நீக்கிலஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மக்களை அழைத்து இது தொடர்பாகக் கலந்துரையாடலை நடத்தினார். இதன்போதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து நால்வர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை அடுத்து அங்கு பொலிஸார் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பேர் நேற்றுப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை அடுத்து இரு பகுதியினருக்கு இடையே இடம் பெற்ற தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். அது தொடர் பில் இரு தரப்பினருக்கும் இடையே சமரசம் ஏற்படுத் தும் நோக்கில் யாழ். பிரதேச செயலர் நேற்று அங்கு சென்றிருந்தார்.



அங்கு அவர் கலந்து ரையாடலில் ஈடுபட்டிருந்த போதே கல்லெறி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதனைய டுத்து பொலிஸார் அங்கு சென்றதும் கூட்டம் கலைந்து விட்டது. இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நால்வர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பொலிஸ் நிலையத்தில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் கூறினர். இராணுவத்தினரும் அங்கு நிலைகொண்டுள்ளனர்.

நேற்றும் இந்தப் பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது. பிரதேச மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாததால் நாவாந்துறை சந்தை வெறிச்சோடிக் காணப்பட்டது. வர்த்தக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கக் கிளைகள் என்பன நண்பகலுடன் இழுத்து மூடப் பட்டன. (த-4-17)

போட்டிப்பரீட்சை விசேட கருத்தரங்குகள்
★.தொழிநுட்ப கல்லூரி போதனாசிரியர் தெரிவுக்கு இன்றும் (புதன்) நாளையும் பி.ப 3.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
★.SLAS புதிய பிரிவு இன்று (புதன்) மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
இப்பிரிவு தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மாலை 5.00 மணிக்கு நடைபெறும்
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, நவலொக் வங்கியருகில்)

# பழைய இரும்பு கடத்திய இருவர் கைது

தென்மராட்சி, நவ.26

தென்னிலங்கைக்கு பழைய இரும்புப் பொருள்கள் கடத்த முயன்ற வாகனத்தை கொடிகாமம் பொலிஸார் பிடித்துள்ளனர். வாகனத்தில் பயணித்த இருவரையும் நேற்று முன் தினம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்லுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.(த-9)

# கொழும்பு சென்று திரும்பிய பெண்ணுக்கு டெங்கு நோய்

தென்மராட்சி, நவ.26

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெண் டெங்கு நோயாளி ஒருவர் இனங் காணப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய மட்டுவில் பெண்ணே டெங்கினால் பீடிக் கப்பட்டவராவார்.

டெங்கினால் பாதிக்கப்பட்ட இந்த நோயாளி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு டெங்கு நோயாளர்களைப் பராமரிக்கவென ஐந்து கட்டில்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் கட் டிலில் பொருத்த வேண்டிய உபகர ணங்கள் இன்னும் பொருத் தப்படாதமையால் நோயா ளியை யாழ்ப்பாணம் அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளதாகத் தெரிய வருகின்றது. (த-9)

CIMA-UK ENGINEERING-USA BIT
புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்
கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 27 நவம்பர். புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
af ONLY OFFICIAL CENTRE FOR FRENCH IN NORTHERN PROVINCE SINCE 1976
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSYயின் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
136+ நாடுகளில் 1040+ கிளைகள்.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்) சரியான உச்சரிப்பு
இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF,DALF)ஐ வழங்குகின்றது. வேறு இடங்களில் படிக்கிறவர்களும் எம்முடன் இணைந்துகொள்கிறார்கள். பிரெஞ்சு மொழிபெயர்புகள். AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும்படிக்கலாம். முன்னரே அனுமதிகளைப் பெறவேண்டும்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



உடனடி விற்பனை
★. 16'' தச்சுவேலை மெசின் சைனா (150,000)
★ வளைவு வெட்டும் மெசின் கனடா (70,000)
077 349 7692 நெல்லியடி.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்கள்,தொழில் புரிவோருக்கான 3 மாத வார வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 29.11.2014 சனி
1.காலை - 10.00-12.00 2.மாலை - 03.00-05.00
வாரநாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் - 25.11.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியின் இலகுவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313 077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.